Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 10 .00

# தினமுரசு
தினப்பதிப்பு
THINAMURASU

அற்புதன் அச்சகம்
அனைத்து விதமான Printing வேலைகளையும்
உயர்தரத்துடனும்
குறைந்த செலவுடனும்
குறித்த நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.
T.P:- 021 222 3628
Fax:- 021 222 1811
373, பிரதான வீதி,
பஸ்ரியன் சந்தி,
யாழ்ப்பாணம்.

முரசு – 04 | திருவள்ளுவர் ஆண்டு 2045 ஆனி 21 சனிக்கிழமை (05.07.2014) பக்கங்கள் 20 | ஓசை –277

### அரசாங்கத்தின் எதிர்ப்பை அடுத்து

# வாக்காளர்களை தெளிவுபடுத்தும் அமெரிக்க நிகழ்ச்சித் திட்டம் இரத்து

(லண்டன்)

தன்னிச்சையான அடிப்படையில் இலங்கையில் வாக்காளர்களை தெளிவுபடுத்தும் நிகழ்ச்சித் திட்டம் என்ற போர்வையில் அமெரிக்காவின் யு.எஸ்.எயிட் நிறுவனம் மேற்கொள்ள முனைந்த திட்டம் ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்துவதற்கான நடவடிக்கை என பாதுகாப்புச் செயலர் கோத்தாபய ராஜபக்ஷ எதிர்ப்பை தெரிவித்திருந்த நிலையில் அந்தத் திட்டத்தை கைவிடுவதாக யு.எஸ்.எயிட் நிறுவனம் தெரிவித்துள்ளது.

வாக்காளர் கல்வி ஊடாக தேர்தல் ஒத்துழைப்பு என்ற தொனிப்பொருளில் நிகழ்ச்சித் திட்டங்களை நடத்த விரும்பும் சிவில் அமைப்புகள் தங்களின் யோசனைகளை முன்வைக்குமாறு யு.எஸ்.எயிட் நிறுவனம் வெளியிட்டிருந்த பத்திரிகை விளம்பரத்தை அடுத்து, அரசாங்கம் தனது கடுமையான எதிர்ப்பை தெரிவித்திருந்ததுடன், இலங்கையின் அரசியல் சார் செயற்பாட்டில் அமெரிக்கா தேவையற்று தலையிடுவதாகவும் தெரிவித்துள்ளது.

இந்த சூழ்நிலையில், சிவில் அமைப்புகளுக்கு நேற்று மின்னஞ்சல் ஒன்றை அனுப்பியுள்ள யு.எஸ்.எயிட் நிறுவனம், குறித்த நிகழ்ச்சித் திட்டம் இரத்துச் செய்யப்பட்டுள்ளதாகவும் தொடர்ந்தும் யோசனைகள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது என்றும் கூறியுள்ளது.

யு.எஸ்.எயிட் நிறுவனம் இவ்வாறான நிகழ்ச்சித் திட்டங்களை நீண்டகாலமாக இலங்கையிலும் மற்ற பல நாடுகளிலும் உள்ள

19 ஆம் பக்கம் பார்க்க

### முகமாலையில் நேற்றும் மனித எச்சங்கள் மீட்பு

(யாழ்ப்பாணம்)

முகமாலைப் பகுதியில் இருந்து நேற்றைய தினமும் மண்டை ஓடு மற்றும் துப்பாக்கி ரவைகள் மீட்கப்பட்டதாகப் பளைப் பொலிஸார் தெரிவித்தனர். அத்துடன், நீர் அள்ளும் கான் ஒன்றும் காலணியொன்றும் மீட்கப்பட்டதாகவும் அவர்கள் மேலும் தெரிவித்தனர்.

முகமாலைப் பகுதியில் மிதிவெடி அகற்றும் பணியில் ஈடுபட்டுவரும் பணியாளர்கள், கைவிடப்பட்ட காவலரண் ஒன்றில் பணியில் ஈடுபடும்போது எலும்புக்கூடு ஒன்று இருப்பதை அவதானித்து

19 ஆம் பக்கம் பார்க்க

### இலங்கை வருகிறார் ஆஸி. குடிவரவு அமைச்சர்



(கொழும்பு)

அவுஸ்ரேலிய குடிவரவு அமைச்சர் ஸ்கொட் மொரிசன் அடுத்த வாரம் இலங்கைக்கு விஜயம் செய்யவுள்ளார்.

19 ஆம் பக்கம் பார்க்க

## கொலையில் முடிந்த பகிடிவதை சக மாணவனுக்கு மரணதண்டனை

(கொழும்பு)

பேராதனை பல்கலைக்கழகத்தின் பொறியியல் பீட முதலாம் வருட மாணவனான செல்வவிநாயகர் வரபிரகாஷை பகிடிவதைக்கு உட்படுத்தி அவரைக் கடத்திச்சென்று கொலை செய்தார் என குற்றம்சாட்டப்பட்ட பாலேந்திரா பிரசாத் சதீஸ்கரன் என்ற சக மாணவனை குற்றவாளியாக இனங்கண்ட மத்திய மாகாண மேல் நீதிமன்ற நீதிபதி மணிலால் வைத்தியதிலக்க அவருக்கு நேற்று மரணதண்டனை விதித்து தீர்ப்பளித்தார்.

பொறியியல் பீட முதலாம் வருட மாணவனான செல்வ விநாயகர் வரபிரகாஷை 1997 ஆம் ஆண்டு ஒக்ரோபர் 26 ஆம் திகதி கடத்திச்செல்லும் போது இந்த வழக்கில் தண்டனை விதிக்கப்பட்டுள்ள பாலேந்திரா பிரசாத் சதீஸ்கரன் சிரேஷ்ட மாணவனாவார்.


பிரதிவாதியான பாலேந்திரா பிரசாத் சதீஸ்கரன், 2004 ஆம் ஆண்டு நாட்டிலிருந்து தப்பியோடிவிட்டதால் அவர் இல்லாமலேயே வழக்கு விசாரணை நடைபெற்றது.

வழக்கின் தீர்ப்பை அறிவித்த

19 ஆம் பக்கம் பார்க்க

## யாழ். வந்த ஹயேஸ் ஓமந்தையில் விபத்து

### ஒருவர் பலி, மூவர் படுகாயம்



(கொழும்பு)

வவுனியா ஓமந்தை பகுதிக்குட்பட்ட பறநட்டகல் சந்தியில் நேற்று முற்பகல் காலை 11.30 மணியளவில் ஹயேஸ் வாகனம் விபத்துக்குள்ளானதில் பெண் ஒருவர் பலியானதுடன் மூவர் படுகாயமடைந்துள்ளனர்.

இச்சம்பவம் தொடர்பாக தெரியவருவதாவது,

அக்கரைப்பற்றிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கி சென்றுகொண்டிருந்த ஹயேஸ் நொச்சிமோட்டைக்கும்

19 ஆம் பக்கம் பார்க்க

## மரசெதுக்கல் கிராமம் காலியில் அங்குரார்ப்பணம்




(கொழும்பு)

பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சின் அனுசரணையுடன் தேசிய அருங்கலைகள் பேரவையினால் ஏற்பாடு செய்யப்பட்ட காலி போப்பே பொத்தல மரசெதுக்கல் கிராமம் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவினால் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது.

காலி கலேகானை போப்பே பொத்தல கிராமத்தில் மேற்படி நிகழ்வு நேற்றைய தினம் இடம்பெற்றது.

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் அழைப்பில் பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சின் பிரதியமைச்சர் வீரகுமார திசாநாயக்கவின் பங்குபற்றலுடன் மேற்படி நிகழ்வு ஜனாதிபதி தலைமையில் நடைபெற்றது.

பாரம்பரிய கைவினை கைப்பணிக் கிராம அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சின் அனுசரணையுடன் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் தலைமை மற்றும் வழிகாட்டலுக்கு அமைவாக தேசிய அருங்கலைகள் பேரவையினால் இந்நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

அதன் பிரகாரம் தேசிய அருங்கலைகள் பேரவையினால் அபிவிருத்தி செய்யப்பட்ட போப்பே பொத்தல மரசெதுக்கல் கிராமத்திற்கான வசதிகள் தொழிற்துறையாளர்களிடம் கையளிக்கப்பட்டது.

முன்பதாக நிகழ்விற்கு வருகை தந்திருந்த ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ வரவேற்கப்பட்டதைத்

19 ஆம் பக்கம் பார்க்க

## இலங்கையரின் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்பட வேண்டும்

### ஐ.நா. செயலர் வலியுறுத்து

(ஜெனிவா)

இலங்கை மக்கள் அனைவரினதும் பாதுகாப்பை உறுதிப்படுத்துமாறு ஐ.நா. பொதுச்செயலர் பான் கீ மூன், இலங்கை அரசாங்கத்தை கேட்டுக் கொண்டுள்ளார்.

இலங்கையில் அண்மையில் இடம்பெற்ற முஸ்லிம்களுக்கு எதிரான வன்முறைகள் குறித்து, ஐ.நா. பேச்சாளர் ஸ்டீபன் டுஜரிக்கிடம், ஐ.பி.எஸ். செய்தி நிறுவனம் கேள்வி எழுப்பியிருந்தது.

அதறகு அளித்த பதிலிலேயே ஐ.நா. பொதுச்செயலர் விடுத்துள்ள கோரிக்கை குறித்து அவர் தெரிவித்துள்ளார்.

இலங்கையின் தென் பகுதியில் முஸ்லிம் சமூகத்தினர்


19 ஆம் பக்கம் பார்க்க

## புலிகளின் 4 தலைவர்கள் மலேஷியாவில் கைது

(கோலாலம்பூர்)

இலங்கையில் தாக்குதல் நடத்த திட்டமிட்டார்கள், மலேஷியாவில் விடுதலைப் புலிகளை மீள உருவாக்க முயன்றார்கள் என்ற சந்தேகத்தின் பேரில் விடுதலைப் புலி உறுப்பினர்கள் நால்வரை கைது செய்துள்ளதாக, மலேஷிய காவல்துறை தெரிவித்துள்ளது.

கோலாலம்பூர் மற்றும் செலங்கூர் ஆகிய இடங்களில் தீவிரவாத முறியடிப்பு பிரிவினர் நேற்றுமுன்தினம் மேற்கொண்ட நடவடிக்கையிலேயே இவர் கள் கைது செய்யப்பட்டுள்ளதாக, மலேஷிய காவல் துறை மா அதிபர் சிறி காலித் அபூபக்கர் தெரிவித்துள் ளார்.



சந்தேகநபர்கள் தமது நடவடிக்கைக்கான பரப்புரை மற்றும் இடைத்தங்கல் தளமாக மலேஷியாவைப் பயன்படுத்த முனைந்தார்கள் என்று அவர் குற்றம்சாட்டியுள்ளார்.

இந்தத்

19 ஆம் பக்கம் பார்க்க

# மருதங்கேணி வைத்தியசாலை நலன்புரிச்சங்கம் அங்குரார்ப்பணம்

மருதங்கேணி வைத்தியசாலையின் நலன்புரிச்சங்க அங்குரார்ப்பண நிகழ்வு இடம் பெற்றது. இதன் தலைவராக வைத்திய அதிகாரி எஸ்.ஜனார்த்தனன், உபதலைவராக ஊடகவியலாளரும், திருமணப் பதிவாளருமாகிய வே.தவச்செல்வம், செயலாளலராக சி.சிவதாஸ், கணக்காளராக க.துஷ்யந்தன், ஆலோசகராக ஓய்வுபெற்ற உபதபால் அதிபர் தியாகராசா ஆகியோர் தெரிவுசெய்யப்பட்டனர். அத்துடன் 14 பேர் கொண்ட நிர்வாக உறுப்பினர்களும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

பிரதேசத்தின் ஒவ்வொரு கிராம மட்டங்களில் இருந்தும் உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். மருதங்கேணி வைத்தியசாலைக்கு புதிய வைத்திய அதிகாரி ஜனார்த்தனன் நியமிக்கப்பட்டதைத் தொடர்ந்து முழுநேரமும் இயங்கி வருவதால் நோயாளர்கள் 24 மணித்தியாலமும் இங்கு சேவையை பெறமுடிவதாக தெரிவிக்கப்படுகிறது.

# கிளிநொச்சி அரச அதிபர் இன்று தாய்லாந்து பயணம்

ஆசியாவின் அனர்த்த முன்னாயத்த நிலையத்தின் (ADPC) ஏற்பாட்டில் தாய்லாந்து, பாங்கொக்கில் நடைபெறவுள்ள அனர்த்த முகாமைத்துவம் தொடர்பான செயலமர்வில் கலந்து கொள்வதற்காக கிளிநொச்சி மாவட்டச் செயலர் திருமதி ரூபவதி கேதீஸ்வரன் இன்று தாய்லாந்து பயணமாகவுள்ளார்.

அவருடன் மாவட்ட அனர்த்த முகாமைத்துவப் பிரிவு உதவிப் பணிப்பாளர் க.சுகுணதாசும் உடன் செல்கின்றார்.

மேற்படி செயலமர்விற்காக இலங்கையிலிருந்து செல்லும் குழுவில் வடமாகாணம் சார்பாக இவர்கள் இருவரும் செல்கின்றார்கள்.

இந்தச் செயலமர்வானது எதிர்வரும் திங்கட்கிழமையிலிருந்து ஒரு வாரத்திற்கு இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# நினைவுக் கருத்தாடல்

காலஞ்சென்ற பேராசிரியர் கா.சிவத்தம்பியின் நினைவுக் கருத்தாடல் நிகழ்வு நாளை பிற்பகல் 4.00 மணிக்கு பிரதான வீதி, யாழ்ப்பாணத்திலுள்ள மறைக்கல்வி நிலையத்தில் நடைபெறவுள்ளது.

சமூக விஞ்ஞான ஆய்வு மன்றத்தின் ஏற்பாட்டில் அருட்தந்தை ரவிச்சந்திரன் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில், அறிமுக உரையை அரசியல் ஆய்வாளர் அ.யோதிலிங்கம் நிகழ்த்துவார். பேராசிரியர் நினைவுக் கருத்தாடலை யாழ். பல்கலைக்கழக சமூகவியல்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் இ.இராஜேஷ் கண்ணன், யாழ்.பல்கலைக்கழக அரசறிவியல் துறை சிரேஷ்ட விரிவுரையாளர் கே.ரி.கணேசலிங்கம், சமூக ஆய்வாளர் தெ. மதுசூதனன் ஆகியோர் நிகழ்த்துவர்.

# ஒன்று கூடல்

திருநெல்வேலி லயன்ஸ் கழகத்தினரின் புதிய நிர்வாகத்தின் ஒன்றுகூடல் இன்று மாலை 6.00 மணிக்கு தலைவர் அ.ரஞ்சித் தலைமையில் கிறீன கிறாஸ் விடுதியில் இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக லயன் கலாநிதி தியாகராஜா மற்றும் அவரது பாரியாரும் கலந்து கொள்ளவுள்ளனர்.

அத்துடன் சமூக நலத்திட்ட உதவித்திட்டங்கள் இடம்பெறவுள்ளது. (63)


## ஜயோதா
உத்தியோகபூர்வ முடிவுகள்

சீட்டிழுப்பு இலக்கம் 1071 | திகதி 03.07.2014

வெற்றி எண்கள்: 04 34 44 51 | ஆங்கில எழுத்து: I

| பரிசு அமைப்பு | வெற்றி பெற்றோர் | பரிசுத் தொகை | முழு பரிசுத் தொகை |
|---|---|---|---|
| 4 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | 0 | 3,26,07,040/= | ரூ. - |
| 4 இலக்கங்கள் பொருந்தினால் | 1 | 10,00,000/= | ரூ. 10,00,000/= |
| 3 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | 12 | 50,000/= | ரூ. 6,00,000/= |
| 3 இலக்கங்கள் பொருந்தினால் | 257 | 1,000/= | ரூ. 2,57,000/= |
| 2 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | 472 | 1,000/= | ரூ. 4,72,000/= |
| 2 இலக்கங்கள் பொருந்தினால் | 11693 | 60/= | ரூ. 7,01,580/= |
| 1 இலக்கத்துடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | 6076 | 40/= | ரூ. 2,43,040/= |
| 1 இலக்கம் பொருந்தினால் | 154554 | 20/= | ரூ. 30,91,080/= |
| ஆங்கில எழுத்து | 22313 | 20/= | ரூ. 4,46,260/= |

வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 68,10,960/=

எதிர்வரும் திங்கட்கிழமை சுப்பர் ஜக்பொட்
ரூபா 32,909,000/=

மஞ்சள் நிற டிக்கட்டுகள் 2014.07.07 ஆம் திகதி திங்கட்கிழமை சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும்.
வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

அபிவிருத்தி லொத்தர் சபை
356, கலாநிதி கொல்வின் ஆர். டி. சில்வா மாவத்தை, யூனியன் பிளேஸ், கொழும்பு 02
தொலைபேசி: 2 333516/7

(C/3733)


# வீட்டுத்திட்ட அங்கீகாரத்திற்காக அறவிடப்படும் பணம் விலக்கு

## யாழ்.மாநகர முதல்வர் அறிவிப்பு



யாழ்.மாநகர சபையால் வீட்டுத்திட்ட அங்கீகாரத்திற்காக அறவிடப்படும் பணம் இந்திய வீட்டுத்திட்டப் பயனாளிகளுக்கு விலக்களிக்கப்படும் என யாழ். மாநகர மாநகர முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராசா தெரிவித்தார்.

இந்திய வீட்டுத்திட்ட பயனாளிகளுடனான கலந்துரையாடல். மாநகர முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராசா தலைமையில் நேற்று மாலை 3.00 மணிக்கு மாநகர முதல்வரின் மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்றது.

இக்கலந்துரையாடலில் மாநகர ஆணையாளர் எஸ். பிரணவநாதன், பிரதம கணக்காளர், நகர அபிவிருத்தி அதிகார சபை உத்தியோகத்தர்கள் மாநகர சபை பொறியியலாளர், மாநகர சபை உத்தியோகத்தர்கள் பொதுமக்கள் எனப் பலர் கலந்துகொண்டனர்.

இக்கலந்துரையாடலில் யாழ். மாநகர சபையினால் வீட்டுத்திட்ட அங்கீகாரத்திற்காக அறவிடப்படும் பணம் விலக்களிக்கப்படும் என்று மாநகர முதல்வர் தெரிவித்துள்ளார்.

# தனக்குத்தானே பெற்றோல் ஊற்றி தீ மூட்டியவர் வைத்தியசாலையில்

தனக்குத்தானே பெற்றோல் ஊற்றி எரித்து தற்கொலை முயற்சியில் ஈடுபட்ட இளைஞர் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

யாழ்ப்பாணம் மணியந்தோட்டம் 3ஆம் குறுக்கு வீதியைச் சேர்ந்த ஜெயாகரன் அஜித் (வயது-20) என்ற இளைஞரே தற்கொலை முயற்சியில் ஈடுபட்டுள்ளார். சம்பவம் தொடர்பாக தெரியவருவதாவது, மது போதையில் மணியந்தோட்டம் பகுதியில் நண்பர்களுடன் கதைத்துவிட்டு, வீட்டிற்குச் சென்றவர், வீட்டில் வைத்து தனக்குத் தானே பெற்றோல் ஊற்றி எரிந்துள்ளார்.

அவரது பெற்றோர்கள் தீயினை அணைத்து விட்டு யாழ். போதனா வைத்தியசாலைக்கு அவரைக் கொண்டு சென்றுள்ளனர். (25)

# புலமைப் பரிசில் கருத்தரங்கு

(மானிப்பாய்)

வலி.தென்மேற்கு பிரதேச இளைஞர் கழக சம்மேளனம் வருடாந்தம் நடாத்தும் இலவச புலமைப்பரிசில் தொடர் கருத்தரங்குகள் இடம்பெற்று வருகின்றன.

இதன்படி இந்த 2 ஆவது கருத்தரங்கு நாளை காலை 8.30 மணி முதல் 2.30 மணி வரை மானிப்பாய் பிரதேசசபை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

பிரபல ஆசிரியர் கு.கலாமோகனால் மேற்கொள்ளப்படுகின்ற இக்கருத்தரங்கில் பங்குகொள்கின்ற மாணவர்கள் அன்றைய தினம் மண்டப வாயிலில் பதிவுகளை மேற்கொள்ள முடியும். இக்கருத்தரங்குகள் முற்றிலும் இலவசமாக இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. முன்னதாக புலமைச்சுடர் ஆசிரியர்களால் நடாத்தப்பட்ட 1 ஆவது கருத்தரங்கில் சுமார் 700 மாணவர்கள் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கதாகும். (48)

# வர்த்தக சங்க பொதுக் கூட்டம்

பச்சிலைப்பள்ளி பிரதேசத்துக்குட்பட்ட அனைத்து வர்த்தக நிலையங்களின் உரிமையாளர்களுக்கான பொதுக்கூட்டம் இன்று மாலை 3.00 மணிக்கு பளை மத்திய கல்லூரி வளாகத்தில் சங்கத் தலைவர் தலைமையில் நடைபெறவுள்ளது.

இதில் கோவில்வயல் தொடக்கம் கிளாலி வரையான பகுதிகளில் உள்ள வர்த்தக நிலையங்களின் உரிமையாளர்ளைத் தவறாது கலந்து கொள்ளுமாறு வர்த்தக சங்கத்தின் செயலாளர் செ.நாகசெல்வம் கேட்டுள்ளார். (37)

# சடலம் ஒப்படைப்பு

(யாழ்ப்பாணம்)

அச்சுவேலிப் பகுதியில் தூக்குப் போட்டு உயிரிழந்ததாகத் தெரிவிக்கப்படும் சிறுவன் ஒருவரது சடலம் அச்சுவேலிப் பொலிஸாரினால் யாழ்.போதனா வைத்தியசாலையில் நேற்று ஒப்படைக்கப்பட்டுள்ளது.

உடையார்கட்டு, முல்லைத்தீவைச் சேர்ந்த ரவீந்திரன் ரகுபரன் (வயது-16) என்ற சிறுவனின் சடலமே இவ்வாறு ஒப்படைக்கப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் குறித்து அச்சுவேலிப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (பா)


## சிறு விளம்பரங்கள்

### டயானா பிளாஸ்ரிக்
றீசைக்கிள் (மீள்சுழற்சி)

அனைத்து வகையான கழிவு பிளாஸ்ரிக், பொலித்தீன், என்பன விலைக்கு வாங்கப்படும். ரூபா 30 தொடக்கம் ரூபா 70 வரை.

இல.06 கனகசபை லேன்,
சிவலிங்கப்புளியடி,
வண்ணார்பண்ணை,
யாழ்ப்பாணம்.
021 222 8680,
077 592 5088.
(C/3395)

### வேலைவாய்ப்பு

திறமைக்கேற்ற வேலை டொபி, ஐஸ்கிறீம், கேக், பிஸ்கட், புத்தகம், சொக்லேட் ஆகிய தொழிற்சாலைகளில் பெக்கிங், ஸ்டோர்ஸ், மேற்பார்வையாளர், சேல்ஸ் போன்ற பிரிவுக்கு 17-55 வயதான ஆண், பெண் 20,000/= - 38,000/= வரை சம்பளம், சாப்பாடு, தங்குமிடம், O/T, போனஸ் வருகின்ற தினமே குழுக்களாக சேர்த்துக்கொள்ளப்படுவர்.

தொ.பே. 0775964299

விமான நிலையம் (தனியார்) பகுதிக்கு சுத்திகரிப்பாளர், பாது காப்பாளர், பெக்கிங் 18 - 55 வயது வரையான ஆண், பெண் தேவை. சம்பளம் 18,000- 30,000 வரை. தங்குமிட, உணவு, பயிற்சியும் வழங்கப்ப டும். வேலை தேடி அங்கும் இங்கும் அலையாமல் இன்றே அழையுங்கள். 0710854068 (C/3727)

### வீடு விற்பனைக்கு

அதிக பாதுகாப்பான இடத்திலுள்ள கூரைக்கு சீற் போட்ட புதிய வீடு விற்பனைக்குண்டு. அரச ஊழியர், வங்கி ஊழியர், பென்சன் பெறுவோர் போன்ற நிரந்தர வருமானம் உள்ளோர்க்கு முன்னுரிமை வழங்கப்படும். விரும்புவோர் தொடர்பு கொள்ளவும். க.சீவறட்ணம் (சிவராதா) றிஜிஸ்ரார் சம்பந்தர் ஒழுங்கை சுதுமலை தெற்கு. (R/355)

# கல்விசார் நிகழ்வுகளுக்கு கலாசார மண்டபம் இலவசம்

(யாழ்ப்பாணம்)

கல்விசார் நிகழ்வுகளை நடாத்துவதற்கு வலி.தென்மேற்கு பிரதேச சபையின் கலாசார மண்டபத்தை இலவசமாக வழங்குவதற்கு கடந்த 27 ஆம் திகதி வெள்ளிக்கிழமை இடம்பெற்ற பிரதேசசபையின் மாதாந்தக் கூட்டத்தில் முடிவெடுக்கப்பட்டுள்ளதாக பிரதேச சபை தவிசாளர் ச.சிவகுமார் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

யாழ்ப்பாணத்திலுள்ள பிரதேச சபைகளில் வசதிகளுடன் கூடிய கலாசார மண்டபம் எமது பிரதேச சபையின் கீழுள்ளது. இந்த மண்டபம் தனிப்பட்ட மற்றும் பொது நிகழ்வுகளுக்கு வாடகைக்கு விடப்பட்டு வருகின்றது.

இந்நிலையில் மேற்படி மண்டபத்தில் முன்பள்ளி ஆசிரியர்களுக்கான கூட்டங்கள், மற்றும் வலி.தென்மேற்கு பிரதேச இளைஞர் கழகத்தினரின் கல்விக் கருத்தரங்குகள் உள்ளிட்ட பல கல்விசார் நிகழ்வுகள் இடம்பெற்று வருகின்றன.

அவ்வாறான கல்விசார் நிகழ்ச்சிகளை நடாத்துபவர்களை ஊக்குவிக்கும் பொருட்டும், கல்வி நடவடிக்கைகளுக்கு பிரதேச சபை பங்களிப்பு வழங்கவேண்டும் எனக்கருதியும் இனி வருங்காலங்களில் கல்விசார் நடவடிக்கைகளுக்கு மண்டப வாடகை அறவிடுவதில்லையெனத் தீர்மானித்துள்ளதாக அவர் தெரிவித்தார்.

இருந்தும் மண்டபத்திற்கான மின்சாரம் மற்றும் பராமரிப்பாளரின் கூலியாக 500 ரூபா மட்டும் அறவிடப்படும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (48)



மாவிட்டபுர கந்தசுவாமி ஆலய நடராஜ சபை மற்றும் கிழக்கு வாசல் வில்லு மண்டப திருப்பணி வேலைகள் முடிவுற்று கும்பாபிஷேகம் வெகு சிறப்பாக நடைபெற்றது.

# விண்ணப்பங்கோரல்

(யாழ்ப்பாணம்)

தேசிய நிதி திட்டமிடல் அமைச்சின் காப்புறுதி நம்பிக்கை பொறுப்பு நிதியச்சபையில் காணப்படும் வெற்றிடங்களுக்கு இலங்கைப் பிரஜைகளிடமிருந்து விண்ணப்பங் கோரப்படுகின்றன.

உதவிப் பொது முகாமையாளர் (காப்புறுதிநிதிசேவை) பதவிக்கு விண்ணப்பிக்கலாம்.

கல்வித்தகைமைகளாக பல்கலைக் கழக பட்டத்துடன் பட்டய காப்புறுதி நிறுவனத்தில் இணைந்த அங்கத்துவத்தை பெற்றவரும் (Acii) பத்து வருட சேவை அனுபவமும் தேவை.

பதவி நிரந்தரமானதும், ஓய்வூதியத்திற்குட்பட்டதுமாகும் விண்ணப்பதாரர் சிறந்த நல்லொழுக்கமுடைய உடல், உள ஆரோக்கியமுடையவராகவும் இருத்தல் அவசியமாகும்.

விண்ணப்பங்களை எதிர்வரும் 11 ஆம் திகதிக்கு முன்னர் தலைவர், தேசிய காப்புறுதி நம்பிக்கைப் பொறுப்பு நிதியச்சபை, இல. 97, மருதானை வீதி, கொழும்பு - 10 என்ற முகவரிக்கு அனுப்ப வேண்டும்.(105)

# மகா கும்பாபிஷேகம்

(சாவகச்சேரி)

சாவகச்சேரி மன்னார்சாலை மறவன்புலவு வடக்கு திருவருள்மிகு ஸ்ரீ சிவபூதவராயர் திருக்கோவில் நூதன ஆலய அஷ்டபந்தன பஞ்சகுண்ட பக்ஷ மகாகும்பாபிஷேகம் எதிர்வரும் 14 ஆம் திகதி திங்கட்கிழமை இடம்பெறவுள்ளது.

காலை 9 மணி முதல் 10.19 மணி வரையுள்ள சிங்கஇலக்கின சுபவேளையில் சிவஸ்ரீ வே.இராமலிங்கக் குருக்களின் ஆசியுடன் ஏழாலை சிவசிறி பா.பாலமனோன் குருக்கள் கும்பாபிஷேகத்தை நடாத்தி வைக்கவுள்ளார்.

12 ஆம் திகதி சனிக்கிழமை விநாயகவழிபாட்டுடன் கிரியைகள் ஆரம்பமாகி மறுநாள் ஞாயிற்றுக்கிழமை மு.ப. 10 மணி முதல் மாலை 4 மணி வரை எண்ணெய்காப்பு சாத்தும் வைபவமும் இடம்பெற்று திங்கட்கிழமை காலை ஸ்தூபி அபிஷேகத்துடன் மூலவருக்கு கும்பாபிஷேகமும் இடம்பெறும். நண்பகல் அடியார்களுக்கு அன்னதானம் வழங்கும் நிகழ்வும் இடம்பெறும். (இ)

# கால்நடைகளைக் கடித்து உணவாக்கும் நாய்கள்

(வரணி)

வடவரணிப் பிரதேசத்தில் மேச்சலுக்காக அவிழ்த்து விடப்படும் ஆடு, மாட்டுக்கன்றுகளை நாய்க் கூட்டம் கடித்துக்குதறி தமக்கு இரையாக்கி வருவதாக அப்பகுதி மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

கடந்த வாரம் இரண்டு கன்றுக் குட்டிகளை வயல் வெளியில் நாய்கள் பிடித்து உணவாக்குவதைக் காணமுடிந்தது.

இப்பிரதேசத்தில் கட்டாக்காலி நாய்களின் தொல்லை என்றுமில்லாதவாறு அதிகரித்துள்ளதால் மக்கள் பெரும் இன்னல்களை அனுபவித்து வருவதை பலமுறை பத்திரிகைகள் சுட்டிக்காட்டியும் உரியவர்கள் நடவடிக்கை எடுக்கவில்லை என பொது மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர் . (150)

# மக்களுக்குச் செய்து பேரை மட்டும் வாங்கிறவையும்... எதிர்த்து எதிர்த்து பிழைப்பை மட்டும் பாக்கிறவையும்...




வடக்கு மாகாணசபையைக் கைப்பற்றினால்.....

**'தமிழர் பகுதிகளிலிருந்து இராணுவம் வெளியேற்றப்படும்.'**

**'புலம்பெயர் உறவுகளின் உதவிகளைப் பெற்று பாதிக்கப்பட்ட மக்களின் வாழ்க்கை கட்டியெழுப்பப்படும்.'**

**'வெளிநாட்டு உதவிகளின் மூலம் தமிழர் பிரதேசங்கள் அபிவிருத்தி செய்யப்படும்.'**

**சர்வதேச சமூகத்தின் ஆதரவோடும் அனுசரணையோடும் தமிழர்களின் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணப்படும்...**

**'வடக்கும் கிழக்கும் இணைந்த பிரதேசங்களாக மீண்டும் உருவாக்கப்படும்...'**

இதையெல்லாம் எங்கேயோ கேட்டமாதிரியோ அறிஞ்ச மாதிரியோ இருக்கிறதா?

**சந்தேகமேயில்லை. கடந்த மாகாணசபைத் தேர்தலுக்கு தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு விட்ட தேர்தல் விஞ்ஞாபனத்தில இதுகளையெல்லாம் நீங்கள் படிச்சிருப்பியள்.**

1976 இல வட்டுக்கோட்டைத் தீர்மானத்தோட தமிழீழம் கிடைச்சமாதிரித்தான் இதுகளும்.

**சொல்லுறது ஒண்டு. செய்யிறதும் நடக்கிறதும் வேற ஒண்டு.**

வட்டுக்கோட்டைத் தீர்மானத்தை எடுத்தவையும் இஞ்ச நாட்டில இல்லை. அதை அப்பிடியே ஆதரிக்கிறவையும் நாட்டில இல்லை. அப்பிடி ஆராவது இருந்தால், அவை ஒரு நாளும் சனங்களோட இல்லை. ஆனால், இவைதான் சனங்களை வைச்சுப் பிழைப்பு நடத்திக்கொண்டிருக்கினம்.

**இந்தப் பரம்பரைதான் அரசாங்கத்தையும் அரசாங்கத்தின்ரை தலைவர்களையும் எதிர்ப்பாகக் காட்டிக் காட்டித் தங்கட பதவியள், வசதியள், சலுகைகளைப் பெற்றுக்கொண்டு அரசியல்ல கொடி கட்டிப் பறக்கிறவை.**

இப்ப மகிந்த ராஜபக்ஷவை எதிர்க்கினம். இதுக்கு முந்திச் சந்திரிகாவை. அதுக்கு முந்தி ரணிலை. அதுக்கு முந்தி டிங்கரி பண்டாவை. அதுக்கு முந்தி பிரேமதாசாவை. அதுக்கு முந்தி ஜே.ஆரை.. அதுக்கு முந்திச் சிறிமாவோவை... அதுக்கு முந்தி....பண்டாரநாயக்காவை. அதுக்கு முந்தி டட்லியை... அதுக்கு முந்தி டி.எஸ் சேனநாயக்காவை....

**இப்பிடி ஆட்சியில இருக்கிறவையையும் ஆட்சிக்கு வாறவையையும் எதிர்த்து எதிர்த்தே தங்கட பிழைப்பை நடத்திக்கொண்டிருக்கிற ஆட்கள்தான் எங்கட தமிழ்த்தலைவர்கள்.**

இவை இனியும் ஆட்சிக்கு வரப்போற ஆட்களை எதிர்த்து எதிர்த்தே தங்கட சீவியத்தைப் பாத்துக்கொள்ளுவினம்.

வியாபாரம் எண்டால் இப்பிடித்தான். சனங்களை ஏமாத்துறதுக்கு ஒரு தந்திரோபாயம் தேவைதான்.

அதுக்காக சனங்களின்ரை சோத்துக்குள்ள மண்ணள்ளிப்போட முடியுமா?

ஆனால் எந்தக் கூச்ச நாச்சமும் இல்லாமல் தமிழ்ச்சனங்களின்ரை சோத்துக்குள்ளையும் கண்ணுக்குள்ளயும் மண்ணள்ளிப் போடுகினம் இந்தத் தமிழ்த்தலைவர்கள்.

இதுக்கு ஒரு ஆலவட்டமும் கொடி, குடையும்பிடிக்கினம் பழச்ச, உத்தியோகம்பாக்கிற ஆட்கள்...

இவைதான் இந்த மோசடிக் கூட்டத்தையே தண்ணி ஊத்தி வளக்கிற ஆட்கள்.

**தாங்கள் அரசாங்கச் சம்பளத்தில வாழ்ந்து கொண்டு, நல்லா வசதிகளை அனுபவிச்சுக்கொண்டு... இந்த ஏழைச்சனங்களின்ரை வாயிலையும் வயித்திலையும் மண்ணள்ளிப் போடுகிறவை.**

**அரசாங்கத்தை எதிர்த்து நாலு வசனம் பேசினால் தாங்கள் எல்லாம் ஏதோ பெரிய புரட்சித் தலைவர்கள் எண்டமாதிரியும் தேசியத் தியாகிகள், புனிதர்கள் எண்ட மாதிரியும் ஒரு கதை.**

**அரசாங்கத்தை ஆதரிக்கிறதும் எதிர்க்கிறதும் சனங்களின்ரை நன்மைக்காக இருக்கோணுமே தவிர, தங்கட நன்மைகள், நலன்களுக்காக இருக்கக் கூடாது.**

இதைப்பற்றி நாங்கள் ஆரும் கதைச்சால், உடன இவர் அரசாங்கத்தின்ரை ஆள், அதால இப்பிடித்தான் கதைப்பார் எண்டு ஒரு வாய்பாட்டை வைச்சிருக்கினம்.

அதைச் சொல்ல அப்பிடியே நாலுபேர் அதை முழுசாக விழுங்கிப்போட்டு எங்கள ஒரு பார்வை பார்ப்பினம்...

இவ்வளவுக்கும் சனங்களோட இருந்து, சனங்களுக்கு வேண்டியதை எல்லாம் செய்யிறதைப் பற்றிக் கதைக்கவே மாட்டினம்.

**அப்பிடி ஏதேனும் கதைக்கிறதாக இருந்தால், அவை தாறதை வாங்குங்கோ. வாங்கிப் போட்டு வாக்குகளை மட்டும் எங்களுக்கு - தமிழுக்காகப் போடுங்கோ.. நாங்கள் எப்பவும் அந்த அடையாளத்தை - தமிழ் அடையாளத்தை விட்டுக்குடுக்கப்பிடாது..**

எண்ட மாதிரி ஒரு கதை கதைப்பினம்.

இதை அப்பிடியே நம்பி நம்பித்தான் சனங்களும் இவ்வளவு காலமும் வாக்குகளை இவையளுக்கு நம்பிப் போட்டுதுகள்.

**இனி இந்த விளையாட்டுக்கெல்லாம் இடமில்லை.**

ஏனெண்டால், எப்பிடித்தான் கெட்டித்தனமாக புளுகினாலும் பொய் சொன்னாலும் அது பத்து நாளைக்கு மேல தாங்காதெல்லோ.

**தமிழ்த் தேசியத்தின்ரை சாயம் மெல்ல மெல்ல வெளுக்கத் தொடங்கீட்டுது. சனங்கள் விழிக்கத் தொடங்கீட்டினம். இன்னும் உந்தப் புலுடா எல்லாம் வாய்க்காது..**

**வடமாகாணசபை சொன்னதில ஒண்டைக்கூட நிறைவேற்றேல்ல எண்டதை ஆரும் மறக்கேல்ல.. இதுக்கொரு தண்டனையை மக்கள் தரத்தான் போகினை.**

பிறரிடம் உள்ள நூறு குறைகளைச் சுட்டிக்காட்டுவதைவிட நம்மிடம் இருக்கும் ஒரு குறையையாவது போக்க வேண்டும். - புத்தர்

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU

இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212223628, கைத்தொலைபேசி : 0777193264
தொலைநகல் : 0212221811, thinamurasu@live.com
Online : www.emurasu.com

## எந்த நாட்டில் வாழப்போகிறோம்?

எங்கள் கஷ்டங்கள் தீர வேண்டுமென்றால், சுதந்திரமாக நாம் உலவ, விரும்பிய தொழிலொன்றைப் பெற்றுக் கொள்ள, கல்வி கற்க, மற்றைய சமூகங்களோடு நாமும் சமமானவர்கள் என்றுணர, அரசியலுரிமைகளைப் பெற்றுக்கொள்ள அதிகாரங்கள் பகிரப்பட வேண்டும் என்று எண்ணுகிறோம்.

அதற்கு உரிய நிரந்தரமான தீர்வொன்று வந்துவிட வேண்டும் என்று தமிழ் மக்கள் எல்லோருமே எதிர்பார்க்கிறோம். இந்த நாட்டின் நீண்டகாலக் குடிமக்களாகிய நமக்கும் இந்த நாட்டின் மீது அனைத்து உரிமைகளும் இருப்பதை உறுதிப்படுத்தி வாழ்ந்து காட்டவே விருப்பப்படுகிறோம்.

இது சிங்களவர்களின் நாடு; நமக்குரியதல்ல என்று ஆற்றாதவர்கள் போல – நம்முடைய இந்த நாட்டின் மீதான உரிமைகளைக் கைகழுவிவிட்டு, எங்காவது வெளிநாடு போய் செட்டிலாகி விடுவதையே அந்தரங்க நோக்கமாக வைத்துக்கொண்டு கோஷங்களை இடும் கூட்டத்துடன் நாம் கலந்து கொந்தளிக்க முடியாது.

இதுதான் நாம் பிறந்த நாடு. இதுதான் நம் தந்தையும் தாயும் மகிழ்ந்து குலவி வாழ்ந்த பொன்னாடு. இங்குதான் நம் சந்ததியையும் வாழ விடப் போகிறோம். அதற்கு, நாம் சிறிது காலம் கருதியிருந்தததைப் போல, தமிழர்களுக்கான தனிநாடு ஒன்று இங்கு சாத்தியமில்லாதது என்பதை இப்போது தெளிவாகப் புரிந்துகொண்டிருக்கிறோம்.

இந்த நாட்டில் வாழ்வதென்பது சிங்கள, முஸ்லிம் இனங்களுடன் தமிழ் இனத்தவராகிய நாங்களுமாக மூவினங்களும் ஒருவரையொருவர் அழிக்கவோ சண்டையிட்டுக் கொள்ளவோ முற்படாமல், வாழ்வதற்குரிய ஏற்பாட்டைக் கண்டு கொள்வதுதான்!

பல்வேறு இனங்கள் ஒன்றாக ஒருநாட்டில் வாழ்வதென்பது இந்த பூமிக்கு ஒன்றும் புதிதில்லை. நம்மை விடவும் மூர்க்கமாக மோதிக் கொண்ட – ஒருவரையொருவர் ஆவேசமாய் அழித்துக் கொண்ட இனங்களெல்லாம் தங்கள் முட்டாள்தனத்தை உணர்ந்து, சேர்ந்து வாழும் ஏற்பாட்டைச் செய்துகொண்டிருக்கிறார்கள்; தாங்கள் நாகரிகமடைந்துவிட்ட மனிதர்கள் என்பதை நிரூபித்திருக்கிறார்கள்.

நம்மிடையே, எப்படியாவது ஏதாவது ஒரு வெளிநாடு போய்ச் சேர்ந்து விடுவதையே இறுதி லட்சியமாய் வைத்துக்கொண்டு இங்கு நாட்களை ஓட்டிக் கொண்டிருப்போரை விட்டுவிடுவோம். இங்கேயே, இலங்கையையே நமது தாய்நாடாகக் கொண்டு வாழ விரும்புகிறவர்கள் என்ன நினைக்கிறோம்.

முதலில், இந்த நாட்டில் உள்ள ஏனைய சமூகங்களான சிங்கள, முஸ்லிம் மக்களுடன் சேர்ந்து வாழ தமிழர்களாகிய நாம் அதற்குரிய மனத்தயாரிப்புடன் இருக்கிறோமா? அல்லது இப்போதும் எண்பதுகளில் காசி, வண்ணை மேடைகளில் சொல்லியது போல "அவர்கள் வேறு நாங்கள் வேறு" என்ற மனநிலையை மாற்றிக் கொள்ளாமலேதான் உள்ளோமா என்று நம்மைக் கேட்டுக்கொள்ள வேண்டும்.

ஏனென்றால் சிங்கள முஸ்லிம் மக்களுடன் சேர்ந்து வாழும் எண்ணத்தைக் கொண்டிருந்தால்தான் அவர்களுடன் என்ன பேசுவது என்பதைப் புரிந்து கொள்வோம். அவர்களுடன்தான் பேச வேண்டும் என்பதையும் புரிந்து கொள்வோம். மாறாக, அவர்கள் வேறு நாங்கள் வேறு என்ற முப்பதாண்டுகளுக்கு முந்திய மனநிலையுடன் எந்தப் பேச்சும் சரிவரப் போவதில்லை.

அதனால்தான் எமது மக்களின் சார்பாகப் பேச்சு நடத்துவதாகச் சொல்லி அரசாங்கத்துடன் பேசுபவர்கள், போய்ப் போய்த் திரும்பிவந்து, "பேச்சு சரிவராது, அரசு தீர்வைத் தராது, வெளியார் வந்து மிரட்டாமல் எங்கள் பேச்சால் எந்தப் பயனும் விளையாது..." என்பதையேதான் விடாமல் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள்.

– ஆசிரியர்

# இணையத்தளத்தினூடாக அறிமுகமாகும் அடிப்படை உரிமை மீறல் மனுத்தாக்கல்

வீட்டிலிருந்தவாறு இணையத்தளத்தினூடாக அடிப்படை மனித உரிமை மீறல் வழக்கு தாக்கல் செய்யக்கூடிய இலத்திரனியல் மனுத்தாக்கல் (e.filing) முறையொன்றை எதிர்வரும் 15ஆம் திகதி ஆரம்பிக்க இருப்பதாக பிரதம நீதியரசர் மொஹான பீரிஸ் தெரிவித்தார்.

சட்டத்தரணிகளுக்கு தமது மடிக்கணனிகள், ஐபொட் என்பவற்றை வழக்கு விசாரணையின்போது பயன்படுத்த சந்தர்ப்பம் வழங்கவும் திட்டமிட்டுள்ளதாக குறிப்பிட்டார்.

மஹர நீதிமன்ற புதிய கட்டடத் திறப்பு விழா நேற்று முன்தினம் பிற்பகல் இடம்பெற்றது. இந்த நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றிய பிரதம நீதியரசர் மேலும் கூறியதாவது, நீதிமன்றத்திற்கு வந்து பல்வேறு சிரமங்களுக்கு மத்தியில் வழக்குத் தாக்கல் செய்யவும் அதன் முன்னேற்றம் குறித்து அறிய பல தடவை நீதிமன்றப் படியேறி இறங்கவும் நேரிடுகிறது.

இதனை இலகுபடுத்தும் வகையில் வீட்டிலிருந்தவாறு அடிப்படை உரிமை மீறல் வழக்குகளை பதிவு செய்யக்கூடிய புதிய முறையை 15 ஆம் திகதியளவில் ஆரம்பிக்க திட்டமிட்டுள்ளோம்.

இணையத்தளத்தினூடாக வழக்குத் தாக்கல் செய்வது மட்டுமன்றி வீட்டிலிருந்தே இணையத்தளத்தினூடாக பணம் செலுத்தவும் ஒழுங்குகள் செய்யப்படும்.

வழக்கின் முன்னேற்றம் குறித்து வீட்டிலிருந்தே அறியவும் மனுதாரர்களுக்கு வாய்ப்பு ஏற்படுத்திக் கொடுக்கப்படும்.

இதேவேளை, சட்டத்தரணிகளுக்கு சாட்சிகளின் சாட்சியங்களை பதிவு செய்து கொள்ளவும் எதிர்காலத்தில் அவகாசம் வழங்க உள்ளோம். இதற்குத் தேவையான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் நீதியரசர் மொஹான் பீரிஸ் தெரிவித்தார்.

## இந்தியா செல்லவுள்ளார் ஜீ.எல்.பீரிஸ்

(கொழும்பு)

இலங்கை - இந்திய மீனவர்களின் பிரச்சினை தொடர்பில் பேச்சுவார்த்தை நடத்துவதன் பொருட்டு வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் இந்தியா செல்லவுள்ளார்.

அடுத்த வாரம் இந்த விஜயம் இடம்பெறவுள்ளதாக பி.டி.ஐ. செய்தி வெளியிட்டுள்ளது.

இந்தியாவில் புதிய அரசாங்கம் பதவியேற்றுள்ள நிலையில் இரு நாட்டு மீனவர்களின் பிரச்சினைக்கு தீர்வு காணும் நோக்கில் புதிய அரசாங்கத்துடன் இலங்கை மீனவர் பிரச்சினை தொடர்பில் முதல் தடவையாக பேசவுள்ளது. இந்திய வெளிவிவகார அமைச்சர் சுஷ்மா சுவ்ராஜுடன் ஜீ.எல்.பீரிஸ் பேச்சுவார்த்தை நடத்துவார் என தெரிவிக்கப்படுகிறது.

இந்த நிலையில், இந்தப் பேச்சுவார்த்தை தீர்க்கமானதாக அமையும என தமிழக மீனவப் பிரதிநிதிகள் நம்பிக்கை வெளியிட்டுள்ளனர்.

## தமிழ் மக்களின் ஏக பிரதிநிதிகள் தமிழ்க் கூட்டமைப்பு அல்ல

### – என்கிறார் கெஹலிய –

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பே தமிழ் மக்களின் ஒரே பிரதிநிதி எனக் கொள்ளமுடியாதென அமைச்சரவைப் பேச்சாளர் கெஹலிய ரம்புக்வெல தெரிவித்துள்ளார்.

நேற்றுமுன்தினம் இடம்பெற்ற அமைச்சரவை தீர்மானங்களை அறிவிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

கூட்டமைப்பை ஏக பிர்திநிதிகள் என்று மக்கள் ஏற்றுக்கொண்டால், அவர்களுடன் அரசாங்கம் பேசுவதற்கு தயார். எனினும் அவ்வாறு இல்லாத நிலையில் கூட்டமைப்பை ஏக பிரதிநிதி என அரசாங்கம் ஏற்றுக்கொள்ளாது என அவர் தெரிவித்தார்.

இதனிடையே, தேசிய பிரச்சினை தொடர்பில் அரசாங்கம் ஏற்றுக்கொண்ட வரையறைக்குள் எந்த சர்வதேச நாடுகளுடனும் கலந்துரையாடுவதற்கு தயார் எனவும் அவர் குறிப்பிட்டார்.

## தனியார் பல்கலைகள் நாட்டுக்கு தேவை

### - எஸ்.பி.திஸாநாயக்க தெரிவிப்பு -

(கண்டி)

வெளிநாட்டு பல்கலைக்கழகங்களில் பட்டம் பெற்றுக்கொடுப்பதற்காக 51 உள்நாட்டு நிறுவனங்களுக்கு அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு உயர்கல்வி அமைச்சர் எஸ்.பி. திஸாநாயக்க குறிப்பிட்டார்.

கண்டியில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற நிகழ்வொன்றில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார். தனியார் பல்கலைக்கழகங்கள் நாட்டுக்கு மிகவும் அவசியமானதாகும். சில தரப்பினர், பொறாமையின் காரணமாக தனியார் பல்கலைக்கழகங்களுக்கு எதிர்ப்பு வெளியிட்டு வருகின்றனர். எனினும் நாட்டின் கல்வி மேம்பாட்டுக்கு தனியார் பல்கலைக்கழகங்கள அவசியம எனவும் உயர்கல்வி அமைச்சர் எஸ்.பி.திஸாநாயக்க குறிப்பிட்டார்.

## தேர்தல்கள் ஆணையாளர் ஐ.தே.க. சந்திப்பு

ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் சிலர் தேர்தல்கள் ஆணையாளரை சந்தித்துள்ளனர்.

எதிர்வரும் ஊவா மாகாண சபைத் தேர்தலின் போது, பதுளை மாவட்டத்தின் 3 உறுப்பினர்கள் குறைக்கப்பட்டு மொனராகல மாவட்டத்திற்கு சேர்க்கப்பட்டுள்ளமை தொடர்பில், தேர்தல்கள் ஆணையாளருடன் கலந்துரையாடியுள்ளனர்.

இந்தக் கலந்துரையாடலில், ஐக்கிய தேசியக் கட்சியின் உப தலைவர் ஜோசப் மைக்கல் பெரேரா, சட்டத்தரணி தயா பல்பொல ஆகியோரும் கலந்து கொண்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

## மின்தடை பற்றிய அறிவித்தல்

(யாழ்ப்பாணம்)

உயர்அழுத்த தாழ்அழுத்த மின்விநியோக மார்க்கங்களின் இணைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காகவும் புகையிரதப்பாதை வேலைகளுக்காகவும் எதிர்வரும் 9 ஆம் திகதி புதன்கிழமை காலை 8.30 மணியிலிருந்து மாலை 5.30 மணி வரை குடத்தனை, நடுக்குடத்தனை, பொற்பதி, குடத்தனை வடக்கு கடற்கரைப் பகுதி, மணற்காடு சந்தி, மணற்காடு வடக்கு, அம்பன் ஆகிய இடங்களிலும் வெள்ளிக்கிழமை காலை 8.30 மணியிலிருந்து மாலை 5.30 மணி வரை குடத்தனை, நடுக்குடத்தனை, பொற்பதி, குடத்தனை வடக்கு கடற்கரைப் பகுதி, மணற்காடு சந்தி, மணற்காடு வடக்கு, அம்பன் ஆகிய இடங்களிலும் மின்விநியோகம் தடைப்பட்டிருக்கும் என யாழ். பிரதேச மின்பொறியியலாளர் அறிவித்துள்ளார்.

## கஞ்சா செடிகளை பயிரிட்டவர் கைது

(வவுனியா)

வவுனியா, ஈச்சங்குளம் பகுதியில் கஞ்சா செடி பயிரிட்ட ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார் என்று வவுனியா பொலிஸார் தெரிவித்தனர். வவுனியா, ஈச்சங்குளம் பகுதியில் கஞ்சா பயிரிடப்படுவதாகப் பொலிஸாருக்குக் கிடைத்த தகவலையடுத்து அங்கு சென்ற பொலிஸார் கஞ்சா பயிர்ச் செய்கையில் ஈடுபட்டவர் என்று சந்தேகிக்கப்படும் ஒருவரை நேற்றுமுன்தினம் கைது செய்தனர். இவர் தனது வீட்டுத் தோட்டத்தில் 25 அங்குலம் உயரமுள்ள 150 கஞ்சா செடிகளை வளர்த்திருந்தார் என்று பொலிஸார் தெரிவித்தனர். கஞ்சா செடிகளையும் வவுனியா பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

# வியக்க வைக்கும் இயற்கை!

■ கே.என். ராமசந்திரன்



உலகில் முதல் உயிரினம் சுமார் 200 கோடியாண்டுகளுக்கு முன் தோன்றியதிலிருந்து பருவ நிலைகளிலும் சுற்றுச் சூழல்களிலும் பலவிதமான மாற்றங்களைச் சந்தித்து வருகிறது. அதற்கேற்றபடி உயிரிகள் தமது வாழ்க்கை முறைகளையும் உடலமைப்புகளையும் வடிவங்களையும் தகவமைத்துக் கொள்ள வேண்டிய கட்டாயம் ஏற்பட்டிருக்கிறது.

அவை தமது உறுப்புகளையும் வடிவங்களையும் கூட்டியோ, குறைத்தோ சூழ்நிலைகளுக்கேற்றவாறு செம்மைப் படுத்திக் கொண்டு தப்பிப் பிழைத்தலுக்கான தகுதிகளை வளர்த்துக் கொண்டன. அவ்வாறு செய்ய முடியாதவை முற்றாயழிந்து போயின.

சில விசேஷமான தேவைகளுக்கேற்றபடி உயிரிகளில் சில விசேஷமான உறுப்புகள் உருவாகியுள்ளன. அவற்றை ஆய்வு செய்து மனிதர்களுக்கு உதவக்கூடிய அமைப்புகளைச் செயற்கையாக உருவாக்க ஆய்வர்கள் முயன்று வருகிறார்கள்.

உயிரியல், இலத்திரனியல் இரு துறைகளும் இணைந்த உயிர்மின்னணுவியல் (bionics) துறை உருவாக்கப்பட்டுள்ளது. மனிதன் இதுவரை சுயமாக்ச் சிந்தித்துப் புதுப்புனைவு செய்துள்ள சாதனங்களையெல்லாம் இயற்கை உயிரிகளில் ஏதாவது ஓர் இடத்தில் செம்மையாகவும் வெற்றிகரமாகவும் முன்னதாகவே அமைத்து வைத்துவிட்டது.

எடுத்துக்காட்டாக ஒரு சிறிய விலங்கின் கண்ணோடு மிகச் சிறந்த ஒளிப்பதிவுக் கருவிகூடப் போட்டியிட முடியாது. உயிரிகளின் கண்கள் ஒவ்வொரு விசேஷத் தேவைக்கும் ஏற்றபடி அமைந்துள்ளன. ஒரு தவளையின் கண் அதன் நாக்கு எட்டக்கூடிய தொலைவுக்குள் வருகிற இரையை மட்டுமே பதிவு செய்யும். உயிருள்ள பூச்சிகளை மட்டுமே இனம் காணும்.

தவளைஎ்யச் சுற்றி அசையாத அல்லது இறந்த பூச்சிகள் குவிந்து கிடந்தாலும் தவளை சட்டை செய்யாது. அதே போலத் தவளையின் எதிரிகளை அடையாளம் கண்டு எச்சரிக்கை செய்வதுடன் ஆபத்தற்ற மற்ற உருவங்களைப் புறக்கணித்துவிடும் தனித் திறைமையும் தவளையின் கண்களுக்கு உள்ளது.

தவளைக் கண்களின் அமைப்புத் தத்துவங்களின் அடிப்படையில் பாதுகாப்பு, விண்வெளி ஆய்வு போன்ற துறைகளுக்குப் பயன்படவல்ல செயற்கைக் "கண்கள்" உருவாக்கப் பட்டுள்ளன. ஏவுகணைகளில் இத்தகைய ஒரு கண்ணைப் பொருத்தினால் அது நட்பு விமானங்களை விட்டுவிட்டு எதிரி விமானங்களைப் பிரித்தறிந்து தாக்க வல்லதாயிருக்கும்.

தற்போதுள்ள ரேடார் கருவிகள் வானில் உள்ள எரிக்ற்கள், மேகங்கள், பறவைக் கூட்டங்கள் போன்றவற்றையும் சேர்த்துப் பதிவு செய்து விடுகின்றன. விமானக் கூடங்களில் வான்வழிப் போக்குவரத்து அளவுக்கு மீறிப் பெருத்துவிட்ட தற்காலத்தில், வெவ்வேறு வகை விமானங்களை அடையாளம் கண்டு, பிரித்தறியக்கூடிய ரேடார் கருவிகளை இயக்க தவளைக் கண் தத்துவங்கள் உதவுகின்றன. நவீனமான ரேடார் கருவிகள் மனிதத் தலையீடின்றித் தாமாகவே செயல்பட்டு வான்வழிப் போக்குவரத்தைக் கண்காணிக்கும்.

ரேடாரின் தத்துவமே வௌவாலிடமிருந்து பெறப்பட்டதுதான். வௌவால் கேளா ஒலிக்கீச்சுகளைப் பரப்பி சுற்றியுள்ள பொருள்களில் மோதித் திரும்பும் எதிரொலிகளை உணர்ந்து கும்மிருட்டில்கூடத் தனக்கு இரையாகக்கூடிய பூச்சிகளைப் பிடிப்பதுடன் மரங்களிலும் கிளைகளிலும் மோதிக் கொள்ளாமல் பறக்கிறது. கண்ணைக் கட்டி காட்டில் விட்டால்கூட அதற்குக் கவலையில்லை.

கிலுகிலுப்பைப் பாம்பு இர்வில் இரை தேடும்போது தன் தலைப் பகுதியில் அமைந்திருக்கும் வெப்பம் உணர் உறுப்புகளைப் பயன்படுத்தி, அருகில் ஏதாவது வெப்ப உடல் உள்ள இரை உள்ளதா என்று தேடிக்கண்டுபிடிக்கிறது.

பொதுவாகவே எல்லாப் பாம்புகளுமே அடிக்கடி நாக்கை வெளியே நீட்டுவது கூடக் காற்றிலுள்ள இரசாயனப் பொருள்களைச் சோதித்து அருகில் ஏதாவது இரை இருப்பதற்கான வாய்ப்பைக் கண்டறிவதற்காகத்தான். உடும்பு, கொமோடோ, டிராகன் போன்ற விலங்குகளும் தமது நாவுகளை இதே நோக்கத்தில் பயன்படுத்துகின்றன.

இதே தத்துவத்தில் எதிரிகளின் வாகன மற்றும் விமான எஞ்சின்களின் வெப்ப உமிழ்வைப் பின்பற்றிச் சென்று அவற்றைத் தாக்கும் சைட்வைண்டர் ஏவுகணைகள், சமையல் வாசனை, வியர்வை நாற்றம் போன்றவற்றை மோப்பம் பிடித்து அடர்ந்த காட்டுக்குள் ஒளிந்திருக்கும் எதிரிகளைத் தாக்கும் ஏவுகணைகள், பூமிப்பரப்பில் நிகழும் அணுகுண்டு சோதனைகள், றொக்கெற் ஏவுதல் போன்ற செயல்பாடுகளைக் கண்காணிக்கும் மைதாஸ் செயற்கைக் கோள்கள் போன்றவற்றை அமெரிக்கா உருவாக்கியிருக்கிறது. எதிரிகளின் ஏவுகணைகளை அழிக்கும் பாட்ரியாட் ஏவுகணைகளும் இத்தகையவையே.

நுளம்புகள் தம் இறக்கைகளை அடித்து எந்த புற ஒலியாலும் பாதிக்கப்படாத ஒரு ரீங்காரத்தை வெளியிட்டு மற்ற நுளம்புகளுடன் செய்திப் பரிமாற்றம் செய்து கொள்கின்றன. அந்த ஒலி ஏறத்தாழ 150 அடி தொலைவிலுள்ள நுளம்பைக்கூடச் சென்றடைகிறது.

அந்துப்பூச்சி தன் அடி வயிற்றிலுள்ள காதுகளின் உதவியால் கேளா ஒலிகளைக் கேட்டறிந்து தன் இணையிருக்குமிடத்தைச் சென்றடைகிறது.

மனிதனின் அதிநவீனமான ஒலி வாங்கியால்கூட அந்தக் கேளா ஒலிகளைப் பதிவு செய்ய முடியவில்லை. அதேபோன்று வளிக்குழப்பங்கள், மின்னல், சூரிய வெடிப்பு போன்றவற்றால் குலைக்கப்படாதவாறு, செய்திப் போக்குவரத்துக்கு உதவக்கூடிய ரேடியோ மின்னல்களை உருவாக்கும் உபாயங்கள் தேடப்பட்டு வருகின்றன.

சாதாரணமாகவே உயிரின உறுப்புகளின் அமைப்புகள் பல சாதாரணங்களை உருவாக்க உதவியிருக்கின்றன. பறவைகளின் உடலமைப்பு விமானங்களை உருவாக்க வழிகாட்டியது.

மீன்களின் செவுள்களைப் போன்ற சாதனங்கள் நீரிலிருந்து ஒட்சிசனைப் பெறவும், கரியமில வாயு போன்ற கழிவுகளை நீக்கவும் நீர்மூழ்கிக் கப்பல்களில் பயன்படுத்தப்படுகின்றன.

செயற்கைச் சிறுநீரகங்களும், இதயங்களும் பரவலாக மருத்துவத்துறையினரால் பயன்படுத்தப்படுகின்றன.

டொல்பின் மீனின் மேல் தோலைப்போல நீரின் இழுப்புத் தடையைக் குறைக்கும் படலங்கள் படகுகின் வெளிப்பரப்புகளில் பொருத்தப்படுகின்றன.

கண்ணை ஒத்த ஒரு கருவி நுண்ணோக்கியில் தெரியும் கலங்களில் புற்று நோய்க் கலங்களை மட்டும் பிரித்துக் காட்டுகிறது; மின்மூளை வரைபடங்களிலிருந்து நோய்ச் சின்னங்களை அடையாளம் காண்கிறது. விசிலாக் என்ற கருவி கண்ணைப் போலவே செயல்பட்டு எதிரிலுள்ள பொருளின் தொலைவை அளவிடுகிறது.

வாகனங்களின் முகப்புகளிலும், கோளிறங்கும் விண்கலங்களிலும் விசிலாக் கருவிகள் பொருத்தப்பட்டுத் தடைகள் அல்லது தரைகள் நெருங்க நெருங்க வேகத்தைக் குறைத்துக் கொள்ளும்படி செய்கின்றன. பார்வையில்லாதவர்களுக்கும் உதவும் வகையில் விசிலாக் கருவிகள் உருவாக்கப்பட்டுள்ளன.

சாதாரண ஈ பறக்கும்போது மேலேழும்பும் போதும், கீழிறங்கும்போதும், திரும்புகையிலும் தன் உடலில் உள்ள இரு நீட்சிகளின் உதவியால் தன் சமநிலையைப் பராமரித்துக் கொள்கிறது. அவை காற்றியக்க அழுத்தத்தில் ஏற்படும் மாற்றங்களை ஈக்கு உடனுக்குடன் தெரிவிக்கின்றன. அதன் அடிப்படையில் ஸ்பர்ரி ராண்ட் என்பவர் இயங்கும் பகுதிகள் இல்லாத ஜைரோட்ரன் என்ற சமநிலையாக்கிக் கருவியை உருவாக்கினார். தற்கால ஏவுகணைகளில் அது ஓர் இன்றியமையாத உறுப்பாக உள்ளது.

பீட்டில் வண்டின் கூட்டுக் கண்கள் இரு பகுதிகள் கொண்டவை. வண்டு பறக்கிறபோது ஒரு பிம்பம் ஒரு பகுதியிலிருந்து மற்ற பறக்கும் வேகத்தை வண்டு அளந்து கொள்கிறது. இதே போல ஒரு விமானம் அல்லது ஏவுகலத்தின் இரு முனைகளில் இரண்டு போட்டோ மின்கலங்களைப் பொருத்திக் கணினியின் உதவியால் பறப்பு வேகத்தை உடனுக்குடன் அறியமுடியும்.

ஆந்தையின் காதுகள் ஒலி வரு திசையைக் கண்டுபிடிக்க வல்லவை. இருட்டில் ஓர் எலி தன் இரையைக் கடிக்கும் ஓசையைக் கேட்டு ஆந்தை குறி தவறாது பாய்ந்து எலியைப் பிடித்துவிடும். இத்தத்துவத்தைப் பயன்படுத்திக் கப்பல்கள், விமானங்கள் போன்றவற்றைக் கண்டு பிடிக்கும் சோனார் கருவிகள் உருவாக்கப் பட்டுள்ளன.

விலங்குகள் தம் மோப்பத்திறனால் இரைகளையும் இணைகளையும் தேடிப் பிடிக்கின்றன. சொலமன் மீன்களும், கடலாமைகளும் மூக்கின் மோப்பத் திறன் மூலம் தாம் முட்டையிடும் இடங்களைச் சென்றடைகின்றன. அதேபோல வியர்வை, சிறுநீர் போன்றவற்றின் மணங்களை உணரும் ஆயுதங்கள் போர்க்களங்களில் பயன்படுத்தப்படுகின்றன.

கெட்டுப்போன உணவுகள், நச்சு வாயுக்கள், வெடி மருந்துகள், போதைப் பொருள்கள் போன்றவற்றை வாசனை மூலம் கண்டு பிடிக்கும் கருவிகள் உருவாக்கப்பட்டுள்ளன. சில நோய்கள் உடலில் குறிப்பான நாற்றத்தை உண்டாக்கும். அதை அடையாளம் காணச் செயற்கை மூக்குகள் மருத்துவர்களுக்கு உதவுகின்றன.

என்னதான் அறிவியல் முன்னேறினாலும் மூளையை மட்டும் கொப்பியடிக்க முடியவில்லை. இடையன் பூச்சி தன் இரை பறப்பதைப் பார்த்த நொடியிலேயே அதன் வேகம், பாதை, திசை ஆகியவற்றைக் கணித்து இரையைப் பாய்ந்து பிடித்துவிடும். இவ்வளவும் ஒரு விநாடியில் இருபதில் ஒரு பங்கு நேரத்தில் நடந்து முடிந்து விடும். மனிதன் உருவாக்கியுள்ள எந்தவொரு தடம் காணும் கருவிக்கும் இவ்வளவு திறமை கிடையாது.

ஓர் எறும்பின் மூளைகூட உலகின் மிகச் சிறந்த செயல் திறனுள்ள கம்ப்யூட்டரை விட அதிகச் செயல் திறனுள்ளதாகும். ●

**கிலுகிலுப்பைப் பாம்பு இரவில் இரை தேடும்போது தன் தலைப் பகுதியில் அமைந்திருக்கும் வெப்பம் உணர் உறுப்புகளைப் பயன்படுத்தி, அருகில் ஏதாவது வெப்ப உடல் உள்ள இரை உள்ளதா என்று தேடிக் கண்டுபிடிக்கிறது. இதே தத்துவத்தில் எதிரிகளின் வாகன மற்றும் விமான எஞ்சின்களின் வெப்ப உமிழ்வைப் பின்பற்றிச் சென்று அவற்றைத் தாக்கும் சைட்வைண்டர் ஏவுகணைகள், சமையல் வாசனை, வியர்வை நாற்றம் போன்றவற்றை மோப்பம் பிடித்து அடர்ந்த காட்டுக்குள் ஒளிந்திருக்கும் எதிரிகளைத் தாக்கும் ஏவுகணைகள், பூமிப்பரப்பில் நிகழும் அணுகுண்டு சோதனைகள், றொக்கெற் ஏவுதல் போன்ற செயல்பாடுகளைக் கண்காணிக்கும் மைதாஸ் செயற்கைக் கோள்கள் போன்றவற்றை அமெரிக்கா உருவாக்கியிருக்கிறது.**

# வெளிநாட்டவர்களுக்கு இலவச சிகிச்சை

## இலங்கையில் வருகின்றது கட்டுப்பாடு

இலங்கைக்கு வரும் வெளிநாட்டவர்கள் நம்முடைய அரச ஆஸ்பத்திரிகளில் அனுமதி பெற்று இலவசமாக பெரிய சத்திரசிகிச்சைகளைக் கூட முடித்துச் செல்கின்றனர். இலவச சுகாதார சேவை இலங்கைப் பிரஜைகளுக்கு மட்டுமே உள்ளது. எனவே எமது அரச ஆஸ்பத்திரிகளில் அனுமதி பெறும் நோயாளர்கள் தாம் இலங்கை பிரஜை என்பதை உறுதிப்படுத்தும் தேசிய அடையாள அட்டை அல்லது கடவுச்சீட்டை அல்லது அதற்குச் சமமான ஆளடையாளங்களை உறுதிப்படுத்தும் ஆவணத்தை கட்டாயம் சமர்ப்பிக்க வேண்டுமென சுகாதார பணிப்பாளருக்கும், பணிப்பாளர் நாயகத்துக்கும் உத்தரவிட்டிருப்பதாக சுகாதார அமைச்சர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார். கடந்த இரண்டு வருடங்களாக அயல் நாடுகளிலிருந்து வருவோர் எமது அரச ஆஸ்பத்திரிகளில் அனுமதி பெற்று பெரிய சத்திரசிகிச்சைகளைக் கூட இலவசமாகச் செய்வதுடன். நோயைக் குணப்படுத்திக்கொண்டு நாடு திரும்புகின்றனர். இவ்வாறு செயற்பட்டவர்களின் பெயர்களும் எம்மிடம் உண்டு. இவர்களின் நிறம் ஒன்றே. மேல்நாட்டு வெள்ளை துரை ஒருவர் வந்தால் அடையாளம் காணலாம். ஆனால் எமது வலயத்தின் நட்புறவு நாடுகளின் உள்ளோர் நம்மைப் போன்றவர்களே. இது தொடர்பாக மேற்கொள்ள வேண்டிய வேலைத் திட்டத்தை தயாரிக்க வேண்டுமென்றும் அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

எமது இலவச சுகாதார சேவையின் முக்கியத்துவத்தையும பெறுமானத்தையும் வெளிநாட்டவர்கள் நன்கு அறிந்துள்ளனர். இந்தியா, மாலைதீவு, பாகிஸ்தான் போன்ற நாடுகளில் இருந்து



எமது நாட்டின் தனியார் ஆஸ்பத்திரிகளுக்கு வந்து அநேகர் சிகிச்சை பெறுகின்றனர். தமது நாட்டைவிட குறைந்த செலவில் சிறந்த தனியார் துறை சுகாதார சேவையை பெறும் வசதியுள்ளது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

# எண்ணெய் பூசுவதாக கூறி பெண்மீது மதகுரு துஷ்பிரயோகம்

ஆணமடு - குருபொகுணகம பிரதேசத்தைச் சேர்ந்த 21 வயதான பெண்ணொருவரை துஷ்பிரயோகம் செய்ததாகக் கூறப்படும், மதகுரு ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

கைதான சந்தேகநபர் ஆணமடு - கோன்வலகந்த பிரதேசத்தைச் சேர்ந்த 51 வயதான மதகுரு ஒருவராவார்.

ஆணமடு பகுதியைச் சேர்ந்த தேவாலயம் ஒன்றின் மதகுருவான இவர், கடந்த 2ஆம் திகதி பாதிக்கப்பட்ட பெண்ணின் வீட்டுக்குச் சென்று தலையில் எண்ணெய் பூசுவதாகக் கூறி, அவரை துஷ்பிரயோகம் செய்ததாக தெரியவந்துள்ளது. இது பற்றி அந்தப் பெண் தனது கணவருக்கு கூறியதை அடுத்து, பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. கைதான குறித்த மதகுரு ஆணமடு மாவட்ட நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டுள்ளார்.

# அதிவேக நெடுஞ்சாலை விபத்தில் ஒருவர் பலி

பொலிஸாரின் எச்சரிக்கையை மீறி கட்டுநாயக்க அதிவேக நெடுஞ்சாலையில் நுழைந்த ஒருவரின் மோட்டார் சைக்கிள் வத்தளை பகுதியில் கார் ஒன்றுடன் மோதி விபத்துக்குள்ளானதால், மோட்டார் சைக்கிளைச் செலுத்திச் சென்றவர் மரணமடைந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

நேற்றுக்காலை இடம்பெற்றுள்ள இந்த விபத்தின்போது, பெண் ஒருவர் காயமடைந்துள்ளதாகவும் பொலிஸார் கூறினர்.

# ஜனாதிபதி மகிந்த கதிர்காமத்திற்கு விஜயம்



ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச நேற்றுமுன்தினம் வரலாற்று சிறப்புமிக்க கதிர்காமம் சென்றதாக ஜனாதிபதி ஊடக பிரிவு தெரிவித்துள்ளது.

இதன்போது, ஜனாதிபதி சமய வழிபாடுகளில் ஈடுபட்டதுடன் அவர், கிரிவேஹர விகாரைக்குச் சென்று வழிபாடுகளில் ஈடுபட்டுள்ளார்.கதிர்காமத்தில் உள்ள ஏனைய சில வழிபாட்டுத் தலங்களுக்கும் ஜனாதிபதி விஜயம் செய்ததாகவும் ஜனாதிபதி ஊடகப் பிரிவு விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# வெளிநாட்டவர்களுக்கு காணி விற்பனை செய்யப்படுவதில்லை

## லக்ஸ்மன் யாப்பா

வெளிநாட்டவர்களுக்கு நாட்டிலுள்ள காணிகளை விற்பனை செய்வதை தடுப்பதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ள நிலையில் அண்மையில் கொழும்பில் உள்ள காணியொன்று வெளிநாட்டு நிறுவனம் ஒன்றிற்கு விற்பனை செய்துள்ளமை தொடர்பில் நேற்று முன்தினம் முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சர் லக்ஸ்மன் யாப்பா அபேவர்த்தன தெளிவுபடுத்தினார்.

வெளிநாட்டவர்களுக்கு காணிகளை விற்பனை செய்வதில்லை என அரசாங்கம் தீர்மானித்துள்ள நிலையில் கொழும்பில் இரண்டு ஏக்கர் காணியை சீன நிறுவனம் ஒன்றிற்கு வழங்குவதற்கு ஏலம் விடப்பட்டமை தொடர்பில் ஊடகவியலாளர்கள் கேள்வி எழுப்பினர்.

முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சர் லக்ஸ்மன் யாப்பா அபேவர்த்தன தெரிவித்த கருத்து:-

எவிக் சர்வதேச நிறுவனம் கோல்பேஸ் காணியை கேட்டது. 2013 ஆண்டின் வர்த்தமானி அறிவிப்பின் படி விற்பனை செய்வதில்லை என கூறினோம். இவர்கள் தனியார் காணி ஒன்றை ஆர் .ஏ. டிமெல் மாவத்தையில் கொள்வனவு செய்திருந்தனர். B மற்றும் C என்ற பகுதிகளை கொள்வனவு செய்திருந்தனர்

A பகுதி வழக்கில் இருந்தது. 2013ஆம் ஆண்டில் தான் A பகுதி வாங்கப்பட்டது. எமக்கு அநீதி ஏற்பட்டுள்ளது. வழக்கு காணப்பட்டமையினால், B மற்றும் C பகுதிகளை கொள்வனவு



செய்ய முடியாமல் போனது. தற்போது முதலீடு செய்யும் போது வர்த்தமானியை காண்பித்தேன். முன்னர் இருந்தது போன்று காணியை தருமாறு கேட்கின்றனர். அமைச்சரவை அனுமதி வழங்கியது. முன்பு இருந்தது போன்று A பகுதி வழங்க ஏற்பட்டது.

# கொலைக்குற்றவாளிகளுக்கு மரண தண்டனை

(கொழும்பு)

மனித கொலை தொடர்பில் நேற்றுமுன்தினம் -களுத்துறை மற்றும் தங்காலை மேல் நீதிமன்றங்களால் 6 பேருக்கு மரண தண்டனை வழங்கப்பட்டுள்ளது.

தங்காலை மேல் நீதிமன்றத்தினால், இரண்டு பேருக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

1998 ஆம் ஆண்டு வலஸ்முல்ல முதரவான பிரதேசத்தில் காணி தகராறு தொடர்பில் ஏற்பட்ட மோதலின் போது பெண் ஒருவர் கொலை செய்யப்பட்டார் இது தொடர்பான வழக்கு விசாரணையின் போதே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, களுத்துறை புளத்சிங்கள - மஹகம பிரதேசத்தில் இடம் பெற்ற மனித கொலை தொடர்பில் குற்றம் சுமத்தப்பட்டிருந்த 4 பேருக்கு களுத்துறை மேல் நீதிமன்றம் மரண -தண்டனை விதித்துள்ளது.

# ஞானசார தேரரின் வீசா அனுமதி குடிவரவு சட்டத்தின் கீழ் பரிசீலிக்கப்படும்

## என்கிறது பிரித்தானியா

பொதுபலசேனாவின் கலகொட அத்தே ஞானசார தேரரின் வீசா அனுமதி தமது நாட்டு குடிவரவு சட்டத்தின்கீழ் பரிசீலிக்கப்படும் என்று பிரித்தானியா அறிவித்துள்ளது.

ஏற்கனவே ஞானசார தேரருக்கு வீசா வழங்க அமெரிக்கா மறுப்பை வெளியிட்டது.

இந்தநிலையில் பிரித்தானியாவும் அவருக்கு நாட்டுக்குள் பிரவேசிக்க தடைவிதிக்குமா? என்று பிரித்தானிய நாடாளுமன்றத்தில் எழுப்பப்பட்ட கேள்வி ஒன்றுக்கே பிரித்தானிய குற்றத் தடுப்பு மற்றும் சமூக எதிர்ப்பு செயற்பாடுகள் தொடர்பான அமைச்சர் டெய்லர் ஹொல்பீச் பிரபு இந்தப் பதிலை வழங்கியுள்ளார்.

சாதாரணமாக ஏற்றுக்கொள்ள முடியாத செயற்பாடுகளைக் கொண்ட தீவிரவாதிகள் பிரித்தானியாவுக்குள் பிரவேசிக்க முடியாது. இவ்வாறானவர்களை நாட்டுக்குள் அனுமதிப்பதால் அது பிரித்தானியாவுக்குள்ளும் இனங்களுக்கிடையில் பிரச்சினைகளை உருவாக்கும் என்றும் பிரித்தானிய அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

பிரித்தானியாவின் விழுமியங்களுக்கு எதிரானவர்களுக்கு வீசா நீடிப்பு சலுகையையும் தாம் ஏற்றுக்கொள்ள முடியாது என்று பிரித்தானிய குற்றத்தடுப்பு மற்றும் சமூக எதிர்ப்பு செயற்பாடுகள் தொடர்பான அமைச்சர் டெய்லர் ஹொல்பீச் பிரபு குறிப்பிட்டார்.

# விபச்சார விடுதி நடாத்திய 6 பெண்கள் உட்பட 7பேர் கைது

ஆயுர்வேத மசாஜ் நிலையம் என்ற பெயரில் வென்னப்புவ பிரதேசத்தில் இயங்கி வந்த விபச்சார விடுதியை முற்றுகையிட்ட பொலிஸார் நேற்று அங்கிருந்த போலி மருத்துவர் ஒருவர் மற்றும் 6 பெண்களை கைது செய்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட பெண்களில் அந்த விடுதியை நடாத்தி வந்த முகாமையாளரும் அடங்குகிறார்.

கைது செய்யப்பட்ட பெண்கள், நீர்கொழும்பு, சீதுவை, குளியாப்பிட்டி, கடவத்தை, அம்பாறை ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்தவர்கள் என வென்னப்புவ பொலிஸார் தெரிவித்தனர்.

ஆயுர்வேத மருத்துவராக குறித்த நிலையத்தில் பணியாற்றியவர் போலி மருத்துவர் எனவும் பொலிஸார் குறிப்பிட்டனர்.பொலிஸாருக்குக் கிடைத்த தகவல் ஒன்றை அடுத்து, ஒற்றர் ஒருவர் மூலமாக சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

# வன்முறை சேதங்களுக்கான நிதிபோதுமானதல்ல

## என்கிறது மு.கா.



அளுத்கம வன்முறைகளின்போது ஏற்பட்ட சேதங்களை புனரமைக்க மேற்கொள்ளப்பட்டுள்ள நிதி ஒதுக்கீடுகள் போதுமானவையல்ல என்று ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தெரிவித்துள்ளது.

முஸ்லிம் காங்கிரஸின் செயலாளர் ஹசன் அலி இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

அளுத்கம புனர் அமைப்புக்காக 200 மில்லியன் ரூபாவை இலங்கை அரசாங்கம் ஒதுக்கியுள்ளது. இந்தநிலையில் இது, கட்டட சேதங்களை மறைக்கக்கூட போதாது என்று அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.


இறுதியாக முஸ்லிம்கள் தம்மை தாமே தாக்கிக் கொண்டதாகவும் தமது வீடுகளுக்கு தாமே தீயிட்டுக் கொண்டதாகவும் அரசாங்கம் கூறுவதாக ஹசன் அலி குறிப்பிட்டார்.

இலங்கை எமது நாடு எனவே அங்கிருந்து வெளியேறவோ அல்லது மற்றவரின் உதவியை எதிர்பார்க்கவோ தேவையில்லை என்றும் ஹசன் அலி தெரிவித்தார்.

# மக்களுக்காக பணியாற்றியவர்களை விமர்சிப்பவர்கள் தகுதியற்றவர்கள்

## சந்திரகுமார் எம்.பி.தெரிவிப்பு

(கிளிநொச்சி)



பாதிக்கப்பட்டு மீள் குடியேறி தற்போது அனைத்து துறைகளிலும் மீண்டுகொண்டிருக்கும் எமது மக்களுக்கு தம்மை அர்ப்பணித்து பணியாற்றியவர்களை, எதனையுமே செய்யாது எப்பொழுதும் எல்லாவற்றிலும் குறைகளைக் கூறிக்கொண்டும், விமர்சித்துக்கொண்டும் இருப்பதனையே தங்களது தொழிலாகவும் மக்கள் பணியாகவும் எண்ணிக்கொண்டிருப்பவர்கள் மக்களுக்கான பணிகளை செய்து கொண்டிருப்பவர்களை விமர்சிப்பதற்கு எவ்வித தகுதியும் அற்றவர்கள் என நாடாளுமன்ற உறுப்பினரும் நாடாளுமன்றக் குழுக்களின் பிரதித் தலைவருமான முருகேசு சந்திரகுமார் தெரிவித்துள்ளார்.

கடந்த புதன்கிழமை கிளிநொச்சி மலையாளபுரம் மாதர் கிராம அபிவிருத்திச் சங்கத்தின் அழைப்பின் பேரில் மலையாளபுரம் கிராமத்திற்குச் சென்று பிரதேச மக்களையும், மக்கள் அமைப்பு பிரதிநிதிகளையும் சந்தித்து கலந்துரையாடிய போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

கிளிநொச்சி மாவட்டத்தில் மீள்குடியேற்றத்தின் பின்னர் இதுவரைக்கும் 22 ஆயிரம் வீடுகள் வரை வழங்கப்பட்டுள்ளன. 2009 இற்கு முன் இந்த மாவட்டத்தில் அந்தளவு கல் வீடுகள் இருந்திருக்கவில்லை. ஆனால் அந்த நிலைமை மாற்றப்பட்டு பெருமளவுக்கு எல்லோருக்கும் கல் வீடு என்ற நிலை ஏற்படுத்தப்பட்டு வருகிறது.

இன்னும் கிட்டத்தட்ட 8000 வீடுகள் அளவிலேயே வழங்க வேண்டிய தேவை உள்ளது. எனக்குறிப்பிட்ட அவர் இரண்டு மற்றும் ஒரு அங்கத்தவர்கள் உள்ளிட்ட சில குடும்பங்கள் வீட்டுத்திட்டத்திற்கு உள்வாங்கப்படாமைக்கு அரசாங்க அதிபரோ, பிரதேச செயலாளரோ, எங்களைப் போன்று நாடாளுமன்ற உறுப்பினர்களோ காரணமல்ல மாறாக இது வீட்டுதிட்டங்களை வழங்குகின்ற இந்திய அரசு உள்ளிட்ட நிறுவனங்கள் கடைப்பிடிக்கின்ற விதிமுறைகள் அவர்களின் விதிமுறைகளுக்கு அமைவாக புள்ளியிடல் அடிப்படையில் வீட்டுத்திட்டப் பயனாளிகள் தெரிவு செய்யப்படுகின்றனர் எனத் தெரிவித்தார்.

இந்த விஜயத்தின் போது வடக்கு மாகாண சபை உறுப்பினர் வை.தவநாதன் கரைச்சி பிரதேச செயலாளர் கோ.நாகேஸ்வரன், சமூகசேவை உத்தியோகத்தர் தபேந்திரன்,கிராம அலுவலர் சந்திரபாலன் மற்றும் மலையாளபுரம், பாரதிபுரம் கிருஸ்ணபுரம் கிராம அபிவிருத்திச் சங்கத்தினர். மாதர் கிராமஅபிவிருத்திச் சங்கத்தினர், விளையாட்டுக்கழகத்தினர் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

# குருநகர் வெஸ்க்கி வடிகால் புனரமைப்பு வேலைகள் துரிதம்



யாழ்.குருநகர் தொடர்மாடிக் குடியிருப்பை அடுத்துள்ள வெஸ்க்கி வடிகால் புனரமைப்பு வேலைகள் துரிதமாக இடம்பெற்றுவருகின்றன.

அப்பகுதி பொதுமக்கள் இந்தவடிகாலை புனரமைத்துத்தரும்படி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவிடம் விடுத்த கோரிக்கையை அடுத்து அமைச்சரின் முயற்சியினால் யாழ்.மாநகரசபையினால் சுமார் 15 இலட்சம் ரூபா செலவில் இந்தவடிகால் புனரமைப்புச் செய்யப்பட்டு வருகின்றது.

யாழ்.மாநகரசபை முன்னாள் உதவி முதல்வர் துரைராசா இளங்கோ (றீகன்)வின் நேரடிக் கண்காணிப்பின் கீழ் இந்தவடிகால் துரிதகதியில் புனரமைக்கப்பட்டுவருகின்றது.

மேலும் குருநகர் தொடர்மாடிக் குடியிருப்பு கடற்றொழிலாளர் கடற்றொழிலில் ஈடுபடுவதற்கு வசதியாக கடற்கரையோரமாக படிக்கட்டு ஒன்றும் நிர்மாணித்துக்கொடுக்கப்பட்டுள்ளது. (பா)

# எழுவைதீவு இறங்குதுறையை புனரமைக்குமாறு கோரிக்கை

(எழுவைதீவு)



எழுவைதீவு பிரதான இறங்கு துறைமுகம் (பாலம்) கடந்த ஒரு வருடங்களுக்கு மேலாக சேதமடைந்த நிலையில் காணப்படுகின்றது.

மக்கள் போக்குவரத்துச் செய்வதற்கும் படகு ஓட்டுநர்கள் படகினைக்கரை சேர்ப்பதிலும் சிரமத்தை எதிர்கொள்கின்றனர்.

இதனால் படகுகளுக்குச் செல்வோரும் படகிலிருந்து வருபவர்களும் பயத்துடனேயே பயணிக்க வேண்டியுள்ளதுடன் தவறி நீரிற்குள் விழும் நிலைகளும் ஏற்படலாம் என அச்சம் தெரிவிக்கின்றனர்.

சம்பந்தப்பட்ட அதிகாரிகள் இதுவரையிலும் எந்த நடவடிக்கையும் மேற்கொள்ளாத நிலையில் மக்கள் மிகவும் சிரமத்தோடு பயணங்களை மேற்கொண்டுவருவதாகவும் கவலை தெரிவிக்கின்றனர். (48)

## றமழான் நற்சிந்தனை



மூன்று மனிதர்களுடைய துஆ மறுக்கப்படுவதில்லை முதலாவது நோன்பாளியின் துஆ அவர் நோன்பு திறக்கும் வரை இரண்டாவது நீதி செலுத்தும் அரசனின் துஆ முன்றாவது அநீதி இழைக்கப்பட்டவனின் துஆ (பிரார்த்தனை) அல்லாஹ அதனை மேகங்களுக்கு மேல் உயர்த்துகின்றான்.

நூல் - அஹ்மது. (105)

# சீமெந்து தூண்கள் விஷமிகளால் சேதம்

(புலோலி)

புலோலி கிராமக் கோட்டு கட்டடத் தொகுதியைச் சுற்றி சீமெந்தால் கட்டப்பட்ட தூண்கள் அடித்து நொறுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

புலோலி கிராமக் கோட்டு கட்டடத்தொகுதியை சுற்றி பருத்தித்துறை பிரதேச சபையினால் சீமெந்து தூண்கள் நட்டப்பட்டு கம்பிகளால் அடைக்கப்பட்டு 3 மாதகாலமாக காணப்பட்ட போதிலும் கடந்த 30 ஆம் திகதி இரவு சில விஷமிகளினால் இந்த சீமெந்து தூண்கள் அடித்து நொறுக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

மேலும் இந்தக் கட்டடத் தொகுதிக்கு அண்மையில் மது விற்பனை நிலையம் இருப்பதால் மதுவினை கொள்வனவு செய்வோர் மறைந்து இருந்து பருகுவதற்கு இலகுவாக இருக்கும் என்பதற்காகவே இவை அடித்து நொறுக்கப்பட்டிருக்கலாம் என அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர். (109)

## முரசின் இன்றைய பலன்



(05.07.2014 சனிக்கிழமை)

ஜய வருஷம் ஆனிமாதம் 21 ஆம் திகதி.
அட்டமி / மரணயோகம்.
அத்தம் நட்சத்திரம் மு.இ. 10.04 வரை. பின் சித்திரை.
இராகு காலம் 08.57 - 10.27 வரை. சுபநேரம் 02.57 - 04.27 வரை.

ஜோதிர் வித்யா ரத்னா வி.ஏ.சிவராசா அவர்களால் கணிக்கப்பட்டது.

| | |
|---|---|
| மேடம் | குடும்பத்தில் சில நாட்களாக நிலவிய சந்தேகக்கோடு விலகி சந்தோஷம் ஏற்படல், சமயோகித புத்தியினால் வரநேரிட்ட விபத்து மயிரிழையில் விலகல். |
| ரிஷபம் | சகோதரர் விடயத்தில் தலையிடாது விட்டதனால் கௌரவம் பாதுகாப்பு, திகதிதப்பிய பொருளை உற்று நோக்கியதால் கொள்வனவு செய்யாது விடல். |
| மிதுனம் | வியாழசுகம் நன்றாக அமைந்ததினால் புதியகாரி[illegible] ஆரம்பிக்க முயற்சித்தல், நிலுவை கூடியதினா[illegible] தொலைபேசித் தொடர்பு துண்டிக்கும் அபாயமுண்டுஇ |
| கடகம் | வெளியூர் பிரயாணம் காரணமாக குடும்பத்தவர்களை விடுத்து பயணமாதல், உற்பத்திச் செலவு கூடிய பொருளை நஷ்டத்திற்கு விற்கும் துயரம் ஏற்படல். |
| சிம்மம் | அட்டாவதித்தனம் புரியவந்தவருடன் பவ்வியமாக நடந்து கொண்டதால் பிரச்சினை நீங்குதல், பிதாவுடன் ஏற்பட்ட மனக்கசப்பு மாதாவின் சமரசத்தால் நீங்கிவிடல். |
| கன்னி | இயந்திரத்தில் ஏற்பட்ட கோளாறு காரணமாக உரிய நேரத்தில் நிகழ்விற்கு சமுகமளிக்க முடியாமை, பெற்றோரின் புத்திமதியைச் செவிமடுத்ததால் பிரச்சினையைக் கைவிட்டு விடல். |
| துலாம் | இடமாற்றத்தை இரத்துச் செய்யும்படி கருணை மனுவுடன் அதிகாரியைச்சந்திக்கச் செல்லல், ஆபத்தில் உதவ வந்த நண்பரை நன்றிப் பெருக்குடன் பாராட்டுதல். |
| விருச்சிகம் | தகுதியிருந்தும் அரசுப்பதவிகிட்டாமையை எண்ணி ஆழ்ந்த துயரடைதல், குழந்தைப்பாக்கியம் ஏற்பட்ட அறிகுறியை எண்ணி மட்டில்லா மகிழ்வடைதல். |
| தனுசு | ஏழரைச்சனி ஆரம்பமாகப் போவதினால் வெளிநாடு செல்லும் எண்ணத்தைக்கைவிடல், நோயின் உபாதையினின்றும் நீங்குவதற்கு கிரக சாந்திகள் செய்ய முற்படல். |
| மகரம் | நம்பியிருந்த விவாகம் பெற்றோருக்குவிருப்பமின்மை காரணமாக கைவிட்டுவிடல், உடையவன் பாராவிட்டால் ஒரு முழம் கட்டையாவது போல் தொழிலில் கூடிய சிரத்தை எடுத்தல். |
| கும்பம் | கொடுக்கல் வாங்கல் பிரச்சினை முன்னிட்டு மாமனாருடன் முறுகல் நிலை ஏற்படல், எதிர்பாராத சம்பவமொன்றினால் கௌரவம். மானம், மதிப்பு என்பன கெட நேரிடல். |
| மீனம் | சில நாட்களாக நிலவிக்காணப்பட்ட தம்பதியரின் மனக்கசப்பு அற்றுப்போய் சுமுக நிலை ஏற்படல், கொள்வனவு செய்யப்பட்ட பொருட்களில் நம்பகத்தன்மை அற்றுப்போனதால் மீண்டும் கையளித்தல். |

## கஜனன், கதியோன் சிறப்பான செயற்பாடு

# மெல்பேர்ன் யாறா அணியை வீழ்த்திய யாழ். தெரிவு அணி





(யாழ்ப்பாணம்)

கஜனன், கதியோன் ஆகியோரின் சிறப்பான செயற்பாட்டின் மூலம் நல்லெண்ண ருவென்ரி-20 கிரிக்கெட் தொடரின் வெற்றிக் கிண்ணத்தை யாழ். மாவட்ட தெரிவு அணி கைப்பற்றிக் கொண்டது.

யாழ். படைத்தலைமையகம் மற்றும் பவுண்டேன் ஒவ் குட்நெஸ் நிறுவனம் ஆகியன இணைந்து நடாத்திய நல்லெண்ண ருவென்ரி-20 கிரிக்கெட் போட்டி நேற்றுக் காலை 9.00 மணிக்கு யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

இதில் 17 வயதிற்குட்பட்ட யாழ். மாவட்ட தெரிவு அணியும் அவுஸ்ரேலிய மெல்பேர்ன் யாறா வலி கிரிக்கெட் கழக அணியும் மோதின. நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் ஆடிய யாழ். மாவட்ட தெரிவு முதலிரு விக்கெட்டுக்களை சீரான இடைவேளை இழந்தது தவித்தது. இந்நிலையில் மூன்றாவது விக்கெட்டுக்காக இணைந்த கப்டன் அலன்ராஜ் கஜனனுடன் இணைந்து பொறுப்புடன் ஆடினார். இந்த ஜோடி மெல்பேர்ன் யாறா அணியின் பந்து வீச்சை சிறப்பான முறையில் எதிர்கொண்டு விரைவாக ஓட்டங்களைச் சேர்த்தது. இந்த ஜோடியைப் பிரிக்க மேல்பேர்ன் யாறா அணிக் கப்டன் பெரும் பிரயத்தனம் செய்தபோதும் உரிய வேளையில் பிரிக்க முடியவில்லை. இந்த ஜோடி மூன்றாவது விக்கெட்டுக்காக 54 ஓட்டங்களை இணைப்பாட்டமாகப் பெற்றவேளை ரன் அவுட் முறையில் பிரிக்கப்பட்டது. தொடர்ந்து கப்டன் அலன்ராஜும் ரன் அவுட் முறையில் ஆட்டமிழந்தார். இந்நிலையில் ஐந்தாவது விக்கெட்டுக்காக இணைந்த கிசாந்த், பிளமிங் ஆகியோர் அதிரடியாக ஆடி ஓட்டங்களைக் குவித்தனர். இந்த ஜோடி இறுதி வரை களத்தில் நின்று ஓட்டங்களை வேகமாக உயர்த்தியது. இறுதியில் யாழ். மாவட்டத் தெரிவு அணி 20 ஓவர்கள் நிறைவில் நான்கு விக்கெட்டுக்களை இழந்து 183 ஓட்டங்களைப் பெற்றது. இதில் கஜனன் 43 பந்துகளை எதிர்கொண்டு ஒரு சிக்ஸர், ஒன்பது பவுண்டரிகள் அடங்கலாக 64, அலன்ராஜ் 25, கோமிதரன் 10 ஓட்டங்களைப் பெற்று ஆட்டமிழந்தனர். பிளமிங் 20, கிசாந்த் 32 ஓட்டங்களை ஆட்டமிழக்காது பெற்றனர். பந்து வீச்சில் லோஜிஸ், மிச்சோல் ஆகியோர் தலா ஒவ்வொரு விக்கெட்டைக் கைப்பற்றினர்.

பதிலுக்கு 184 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய மெல்பேர்ன் யாறா அணி தியோனின் பந்து வீச்சிற்கு ஈடுகொடுக்க முடியாமல் மளமளவென விக்கெட்டுக்களைப் பறிகொடுத்தது. இறுதியில் மெல்பேர்ன் யாறா அணி 13.5 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 53 ஓட்டங்களைப் பெற்று படுதோல்வியடைந்தது. இதில் பிரஸ்ரி 11, லோஜி 10 ஓட்டங்களைப் பெற்றனர். ஏனைய அனைத்து வீரர்களும் ஒற்றை இலக்க ஓட்டத்துடன் ஆட்டமிழந்து ஏமாற்றமளித்தனர். பந்து வீச்சில் கதியோன் நான்கு, துவாரகன், டிலக்ஷன், நிரோஜன் அலன்ராஜ் ஆகியோர் தலா ஒவ்வொரு விக்கெட்டைக் கைப்பற்றினர். இதன் மூலம் யாழ். மாவட்டத் தெரிவு அணி 139 ஓட்டங்களால் அபார வெற்றிபெற்றது. போட்டியின் சிறந்த பந்து வீச்சாளராக கதியோன், சிறந்த துடுப்பாட்ட வீரராக கஜனன், சிறந்த சகலதுறை வீரராக மெல்பேர்ன் யாறா அணியின் மொறிஸ் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர். இப்போட்டிக்கு நடுவர்களாக பி. முருகவேள், எஸ். சிவராசா ஆகியோர் கடமையாற்றியதுடன் போட்டி மத்தியஸ்தராக சண்முகலிங்கம் கடமையாற்றினார். யாழ். மாவட்ட தெரிவு அணியில் அங்கம் வகித்த 16 பேருக்கும் துவிச்சக்கர வண்டி வழங்கப்பட்டது.

சர்வதேச தரத்தில் நடாத்தப்பட்ட இப்போட்டிகளைப் போன்று பவுண்டரிகள், சிக்ஸர்கள் மற்றும் விளாசப்படும் போதும், விக்கெட்டுக்கள் வீழ்த்தப்படும் போதும் நடன மங்கையர்களின் களியாட்டங்களும் இடம்பெற்றதுடன், இசைக் கருவிகள், பொய்க்கால் குதிரை போன்ற நிகழ்வுகளும் மைதானத்தை அலங்கரித்தவண்ணமிருந்தன.

இப்போட்டி நிகழ்வில் யாழ். மாவட்ட பாதுகாப்புப் படைகளின் கட்டளைத் தளபதி உதய பெரேரா, யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் சுந்தரம் அருமைநாயகம், யாழ். மாநகர முதல்வர் யோகேஸ்வரி பற்குணராசா, யாழ். மத்திய கல்லூரி அதிபர் எழில்வேந்தன், சென். ஜோண்ஸ் கல்லூரி அதிபர் வண. ஞானப்பொன்ராஜா, சென். பற்றிக்ஸ் கல்லூரி அதிபர் ஜோறோம் செல்வநாயகம், இலங்கை கிரிக்கெட் சபையின் கனிஷ்ட தெரிவுக் குழுவில் ஒருவரான நிசாந்தன், யாழ். மாவட்ட பயிற்றுநர் லக்சித மற்றும் பாடசாலை கிரிக்கெட் பயிற்றுநர்கள், பாடசாலைகளின் கிரிக்கெட் வீரர்கள், விளையாட்டு நலன் விரும்பிகள், இரசிகர்கள் எனப் பலர் கலந்து கொண்டு போட்டியைக் கண்டு மகிழ்ந்தனர். (எஸ்.பி., 25)





## களத்திற்கு வெளியில்...

என்னைப் பொறுத்த வரையில் நாங்கள் இன்னும் ஆட்டத்தை ஆரம்பிக்கக் கூட இல்லை. அவர்கள் சீக்கிரம் விழித்துக் கொள்ள வேண்டும். மெஸ்சி மட்டுமே அனைத்தையும் செய்ய வேண்டும் என நாம் எதிர்பார்க்கக்கூடாது. மெஸ்சி மட் டுமே தனியாக காணப்படுகிறார். ஆர்ஜன்ரீன அணியின்ஆட்டத்தில் எந்த மாற்றமும் ஏற்படவில்லை. அணி வீரர்கள் தங்களது ஆட்டத்திறமையில் 40 சதவீதம் மட்டுமே தற்போது வெளிப்படுத்தியுள்ளனர். விட்டுக் கொடுக்கும் மனப்பான்மையில் வீரர்கள் பின்தங்கியுள்ளதாக நான் நினைக்கிறேன். அவர்களிடமிருந்து கசப்பு, சீற்றம், வெறுப்பு என இன்னும் அதிகமாக நான் எதிர்பார்க்கிறேன். ஏனென்றால் ஆர்ஜன்ரீனாவால் இன்னும் திறமையாக விளையாட முடியும். இதை பயிற்சியாளர் அவர்களுக்கு புகட்டியிருக்க வேண்டும். பெல்ஜியத்திற்கு எதிராக இன்னும் அவர்கள் தயார்படுத்திக் கொள்ளவில்லை என்றால் சிக்கலில் மாட்டிக்கொள்ள வேண்டியிருக்கும்.

**மரடோனா (ஆர்ஜன்ரீனா முன்னாள் வீரர்)**

ஆர்ஜன்ரீனாவுடனான தோல்வி 1999 சம்பியன்ஸ் லீக் இறுதிப் போட்டியைத்தான் எனக்கு நினைவுபடுத்துகிறது. எனது இதயம் முழுவதும் உணர்ச்சி வசத்தால் நிரம்பியுள்ளது. இதுபோன்ற உணர்ச்சிபூர்வமான தருணங்கள் கால்பந்து விளையாட்டில் மட்டுமே கிடைக்கும். அதனால்தான் கால்பந்தை விரும்புகிறேன். இது வரை எனக்கு வாய்ப்பளித்த அணி நிர்வாகத்திற்கு நன்றி தெரிவிக்க விரும்புகின்றேன். அடுத்ததாக தொலைக்காட்சியில் பணியாற்றவிருக்கிறேன். விளையாட்டுப் போட்டிகள் நடைபெறும் இடங்களுக்குச் செல்வேன். ஆனால் பயிற்சியாளராக அல்ல, பத்திரிகையாளராகச் செல்வேன். பயிற்சியாளர் பணி கடினமானது. என்னுடைய பயிற்சியாளர் வாழ்க்கையை நினைத்துப் பெருமை கொள்கிறேன். முன்னணி கால்பந்து கழகங்களுக்கும், சுவிட்சர்லாந்து அணிக்கும் பயிற்சியளித்தது எனது அதிர்ஷ்டம். அவர்களுடன் இணைந்து பணியாற்றியது பொற்காலம். அதனால் கனத்த இதயத்துடன் விடை பெறுகிறேன்.

**ஒட்மார் ஹிட்ஸ்பெல்ட் (சுவிஸ்சர்லாந்து பயிற்சியாளர்)**



# அல்ஜீரிய அணிக்கு அமோக வரவேற்பு

## போரில் பாதிக்கப்பட்டோருக்கு பரிசுத் தொகை

(அல்ஜீயர்ஸ்)

உலகக் கிண்ணக் கால்பந்து போட்டியில் அல்ஜீரியா அணி, 2ஆவது சுற்றில் ஜேர்மனியுடன் தோற்று வெளியேறியது. முதல் முறையாக விலகல் சுற்றை எட்டிய திருப்தியுடன் தாயகம் திரும்பிய அந்த அணிக்கு உற்சாகமான வரவேற்பு அளிக்கப்பட்டது.

திறந்த வாகனத்தில் ஊர்வலமாக அழைத்து செல்லப்பட்டு கௌரவிக்கப்பட்டனர். இந்த போட்டியின் மூலம் அல்ஜீரியா அணிக்கு கிடைத்த பரிசுத்தொகை 54 கோடியை, போரினால் பாதிக்கப்பட்ட காசா பகுதி மக்களுக்கு நன்கொடையாக வழங்க முடிவு செய்திருப்பதாக அந்த அணி வீரர் இஸ்லாம் சிலிமானி தெரிவித்துள்ளார்.

## இன்றைய காலிறுதி




**ஆர்ஜன்ரீனா எதிர் பெல்ஜியம்**
**இலங்கை நேரம் இரவு 9.30**

**நெதர்லாந்து எதிர் கோஸ்டாரிகா**
**இலங்கை நேரம் அதிகாலை 1.30**

# எல்லே களியாட்டம் யாழில் இன்று ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட பாதுகாப்புப் படைகளின் கட்டளைத் தலைமையகம் மற்றும் இலங்கை இராணுவ எல்லே சங்கம் இணைந்து நடாத்தும் எல்லே களியாட்டம் இன்றும் நாளையும் யாழ்ப்பாணத்தில் நான்கு மைதானங்களில் நடைபெறவுள்ளன.

எல்லே போட்டியை இலங்கை யிலும் யாழ்ப்பாணத்திலும் தேசிய விளையாட்டாக மாற்றும் நோக்குடன், இளம் வீரர்களை ஊக்குவித்து உருவாக்கும் வகையிலும் நடாத்தப்படவுள்ள இப்போட்டி இன்று முதல் நாளை வரை யாழ். துரையப்பா விளையாட்டு அரங்கு, யாழ். இந்துக் கல்லூரி, யாழ். மத்திய கல்லூரி, பலாலி இராணுவ மைதானங்களில் நடைபெறவுள்ளன.




ஆண், பெண் என இரு பாலாருக்குமிடையில் நடைபெறவுள்ள இப்போட்டித் தொடரில் இலங்கை தேசிய எல்லே சம்மேளனத்தைச் சேர்ந்த அனைத்து அணிகளுக்கும் அழைப்பு விக்கப்பட்டுள்ளது. இவற்றில் இருந்து தெரிவு செய்யப்பட்ட 13 ஆண்கள் அணியும், 3 பெண்கள் அணியும் தெற்கிலிருந்தும் இராணுவம், கடற்படை, விமானப்படை, பொலிஸ் மற்றும் யாழ். குடாநாட்டில் உள்ள 15 சிவில் அணிகள் உட்பட மொத்தம் 31 அணிகள் இத்தொடரில் முட்டிமோதவுள்ளன. யாழ். மாவட்டம் சார்பாக ஆண்கள் பிரிவில் கோப்பாய், மிருசுவில் இயக்கச்சி அணிகளும், பெண்கள் பிரிவில் மானிப்பாய் மகளிர் கல்லூரி மற்றும் வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரி இணைந்த அணி, சாவகச்சேரி இந்துக் கல்லூரி, நாவற்குழி மகாவித்தியாலயம், இயக்கச்சி விளையாட்டுக்கழகம் போன்ற அணிகள் பங்குபற்றவுள்ளன.

இப்போட்டியில் கிண்ணத்தை வெல்லும் அணிகளுக்கு கிண்ணத்துடன் ஒரு இலட்சம் ரூபா பணப் பரிசும் வழங்கப்படும் எனவும், இரண்டாமிடத்தைப் பிடிக்கும் அணிக்கு ஐம்பது ஆயிரம் ரூபா பணப் பரிசும், சிறந்த வீர,வீராங்கனை, சிறந்த தடுப்பாளர், சிறந்த துடுப்பாட்ட வீரர்களுக்கு விருதுகளும் பெறுமதி மிக்க கையடக்கத் தொலைபேசிகளும் வழங்கப்படவுள்ளதாகவும் போட்டி அமைப்பாளர்கள் தெரிவித்துள்ளனர்.

இப்போட்டித் தொடரின் ஆரம்ப வைபவம் யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில் இன்று காலை 9.00 மணிக்கு நடைபெறவுள்ள அதேவேளை, நிறைவு நிகழ்வு நாளை 3.00 மணிக்கு யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில் இடம்பெறவுள்ளது. இப்போட்டி நிகழ்வின் அதிதிகளாக பாரம்பரிய கைத்தொழிலகள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் கே.என். டக்ளஸ் தே[illegible]ந்தா, வடக்கு மாகாண ஆளுநர் [illegible]சிறி, யாழ். மாவட்ட கட்டளைத் தள[illegible]தி உதய பெரேரா ஆகியோர் கலந்[illegible] கொள்ளவுள்ளனர். இப்போட்டி நிகழ்வின் [illegible]றைவில் அக்னி இசைக்குழுவின் இசை மழையும் இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, இப்போட்டித்தொடர் பான பத்திரிகையாளர் மாநாடு பிரிகேடியர் லக்ஸ் வீரமன் தலைமையில் கடந்த இரண்டாம் திகதி காங்கேசன்துறையில் அமைந்துள்ள தல்செவன விடுதியில் நடைபெற்றது. (எஸ்.பி., இ)

# தேசியத்திற்கு தகுதிபெற்ற எழுவைதீவின் தங்க மங்கை



(எழுவைதீவு)

தேசிய மட்டப் போட்டிக்குத் தகுதி பெற்றுள்ள எழுவைதீவு முருகவேள் வித்தியாலய மாணவி பி. கல்சியா பாடசாலைச் சமூகத்தினால் கௌரவிக்கப்பட்டுள்ளார்.

வடக்கு மாகாணப் பாடசாலைகளுக்கிடையிலான தடகளப் போட்டி கடந்த வாரம் யாழ். துரையப்பா விளையாட்டு அரங்கில் நடைபெற்றது. இதில் 17 வயதுப் பிரிவு பெண்களுக்கான ஈட்டி எறிதல் போட்டியில் பங்குபற்றிய எழுவைதீவு முருகவேள் வித்தியாலய வீராங்கனை பி. கல்சியா தங்கப் பதக்கத்தை வென்றதுடன் தேசிய மட்டப் போட்டிக்குத் தகுதி பெற்றுள்ளார்.

போதிய விளையாட்டு வசதிகளற்ற அதி கஷ்டப் பிரதேசப் பாடசாலையிலிருந்து பங்குபற்றி மாகாணப் போட்டியில் தங்கம் வென்றதுடன் தேசிய மட்டப் போட்டிக்குத் தகுதிபெற்றுள்ள கல்சியாவுக்கு நேற்று முன்தினம் பாடசாலைச் சமூகத்தினால் கௌரவிப்பு நிகழ்வு நடாத்தப்பட்டது. இதில் பாடசாலை அதிபர், ஆசிரியர்கள், சக மாணவர்கள் அவரைப் பாராட்டி மகிழ்ந்தனர். இதேவேளை, தீவக கல்வி வலயத்திற்கு பெருமை சேர்த்துள்ள கல்சியாவை தீவக கல்வி வலயத்தைச் சேர்ந்த அதிகாரிகள், விளையாட்டு நலன் விரும்பிகள் எனப் பலர் பாராட்டுத் தெரிவித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (48)

# வடக்கின் சிறந்த அணியாக சென். ஜோண்ஸ்



வடமாகாணத்தின் 19 வயதுப்பிரிவு சிறந்த கிரிக்கெட் அணியாக யாழ். சென். ஜோண்ஸ் கல்லூரி அணி தெரிவு செய்யப்பட்டுள்ளது. சிங்கர் நிறுவனத்தினால் மேற்கொள்ளப்பட்ட மாகாணத்தின் சிறந்த அணிகளுக்கானதெரிவிலேயே சென். ஜோண்ஸ் கல்லூரி அணி வட மாகாணத்தில் சிறந்த அணியாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளது.

இதற்கான விருது கடந்த யூன் 30 ஆம் திகதி கொழும்பு பி.எம்.ஜ.சி.எச் இல் வைத்து வழங்கப்பட்டுள்ளது.

நூற்றாண்டுகள் கடந்த வரலாற்றினைக் கொண்ட வடக்கின் மாபெரும் போர்களில் பங்குபற்றும் அணிகளில் ஒன்றான சென். ஜோண்ஸ் கல்லூரி அணி, இவ்வருடம் நடைபெற்ற வடக்கின் மாபெரும் போரில் வெற்றிபெற்றிருந்தது. வெளிமாவட்ட அணிகளுக்கிடையிலான போட்டியில் மவுண்டன் லெவினியா, மாத்தளை ஆகிய இடங்களைச் சேர்ந்த சென். தோமஸ் கல்லூரிகளின் அணிகளையும் சென். ஜோண்ஸ் கல்லூரி அணி வென்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# வென்றது வலிகாமம் லீக்

(மானிப்பாய்)

இலங்கை கால்பந்தாட்ட சம்மேளனத்தின் ஏற்பாட்டில், சம்மேளனத்தின் கீழுள்ள லீக்குகளின் 19 வயதுப் பிரிவினருக்கிடையில் இடம்பெற்றுவரும் கால்பந்தாட்டச் சுற்றுப் போட்டியொன்றில் வலிகாமம் கால்பந்தாட்ட லீக் அணி வெற்றி பெற்றது. இப்போட்டி கடந்த செவ்வாய்க்கிழமை மானிப்பாய் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது. இதில் வலிகாமம் கால்பந்தாட்ட லீக் அணியும் வடமராட்சி கால்பந்தாட்ட லீக் அணியும் மோதின.

போட்டியின் 18 ஆவது நிமிடத்தில் வலிகாமம் அணயின் என்.தனுஜன் முதலாவது கோலை அடித்து அணியை முன்னிலைப்படுத்தினார். இதற்குப் பதிலடி கொடுக்கும் விதத்தில் வடமராட்சி அணியின் கே.குரோலவன் ஒரு கோலை அடித்தார். இந்நிலையில் முதல் பாதியாட்டம் 1:1 என்ற சமநிலையில் முடிவடைந்தது.

இரண்டாவது பாதியாட்டத்தில் வலிகாமம் அணி ஆதிக்கம் செலுத்தியது. இதில் எஸ். ஜனார்த்தனன் அடுத்தடுத்து இரு கோல்களை அடித்து அணியின் ஸ்திரத் தன்மையை வலுப்படுத்தினார். தொடர்ந்து வலிகாமம் கால்பந்தாட்ட லீக்கின் தனேஸ், கிரிசாந் ஆகியோர் தடுத்தடுத்து கோல்களை அடித்து அணியின் வெற்றியை உறுதிப்படுத்தினர். இதற்குப் பதிலடி கொடுக்கும் வகையில் வடமராட்சி கால்பந்தாட்ட லீக் அணி செயற்பட்டபோதும், வலிகாமம் பிற்கள வீரர்களின் தடுப்பணையைத்தாண்டி கோல் எல்லைக்குள் நுழைய முடியவில்லை. இந்நிலையில் வலிகாமம் கால்பந்தாட்ட லீக் அணி 5-1 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது.

விளையாட்டுச் செய்திகள்

# புத்தூரில் நாளை மரதன் ஓட்டம்

(அச்சுவேலி)

புத்தூர் கதிர் கல்வி நிறுவனத்தின் வருடாந்த பரிசளிப்பு விழாவை முன்னிட்டு நாளைய தினம் மரதன் ஓட்டப் போட்டியை நடாத்தவுள்ளது. கல்வி நிலையத்தில் கல்வி கற்கும் வீர,வீராங்கனைகளின் உற்சாகத்தை வலுப்படுத்திக் கொள்ளும் வகையில் நடாத்தப்படவுள்ள இம்மரதன் ஓட்டப் போட்டி நாளை காலை 6.00 மணிக்கு நடைபெறவுள்ளது. இப்போட்டிகளில் வெற்றியீட்டுவோருக்குப் பெறுமதியான பரிசில்கள் வழங்கப்படும் எனப் போட்டி அமைப்பாளர்கள் தெரிவித்துள்ளனர். (85)

# பாரதி, வளர்மதி முன்னேற்றம்

(மட்டுவில்)

மட்டுவில் மோகனதாஸ் விளையாட்டுக்கழகம் நடாத்தும் மாவட்ட அணிகளுக்கிடையிலான கரப்பந்தாட்டத் தொடரின் இரண்டாவது சுற்றுக்கு நாயன்மார்கட்டு பாரதி, மட்டுவில் வளர்மதி அணிகள் முன்னேறியுள்ளன.

யாழ். மாவட்ட கரப்பந்தாட்டச் சங்கத்தின் அனுசரணையுடன் நடாத்தப்பட்டு வரும் இப்போட்டித் தொடர் மோகனதாஸ் விளையாட்டுக்கழக மைதானத்தில் மின்னொளியில் நடைபெற்று வருகின்றது.

இதில் நேற்று முன்தினம் இரவு நடைபெற்ற முதலாவது போட்டியில் புத்தூர் சோமஸ்கந்தன் மற்றும் நாயன்மார்கட்டு பாரதி அணிகள் மோதின. விறுவிறுப்பாக நடைபெற்ற இப்போட்டியில் நாயன்மார்கட்டு பாரதி அணி 2-1 என்ற செட் கணக்கில் வெற்றிபெற்று இரண்டாவது சுற்றுக்கு முன்னேறியது. தொடர்ந்து நடைபெற்ற போட்டியில் மட்டுவில் வளர்மதி அணியும் புத்தூர் தமிழ்மதி அணியும் மோதவிருந்தன. இப்போட்டியில் தமிழ்மதி அணி சமுகமளிக்காததால் வளர்மதி அணிக்கு வெற்றி வழங்கப்பட்டது.

இதேவேளை, இன்றைய தினம் நடைபெறவுள்ள போட்டிகளில் மட்டுவில் ஞானதீபன் எதிர் மீசாலை சீமா பி, நாயன்மார்கட்டு பாரதி பி எதிர் அச்சுவேலி தோப்பு வாலிபர் அணிகள் மோதவுள்ளன.

# புலிகளின் மீறல் சம்பவங்களை முன் வைப்பதற்கு தமிழ் தேசிய கூட்டமைப்பு தலைமை ஏற்க வேண்டும்

1

- டி.பி.எஸ்.ஜெயராஜ் -



வாரக்கணக்கான ஊகங்கள் மற்றும் எதிர்பார்ப்புகளுக்குப் பின்னர் ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் நவநீதம்பிள்ளை, இலங்கை அரசாங்கம் மற்றும் தமிழீழ விடுதலைப் புலிகள் ஆகிய இரு தரப்பினருக்கும் இடையே நடந்த போரின்போது, இரு தரப்பினராலும் நடத்தப்பட்டதாக கூறப்படும் மனித உரிமை மீறல்கள் பற்றி விரிவான விசாரணை நடத்த ஒரு விசாரணைக் குழுவை அமைத்திருப்பதாக முறைப்படி அறிவித்துள்ளார்.

ஜெனிவாவில் உள்ள ஐ.நா. மனித உரிமைச் சபையில் 2014 மார்ச்சில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின்படி கட்டாயமாக்கப்பட்ட இந்த விசாரணை, 2002 மற்றும் 2009 இற்கு இடைப்பட்ட காலங்களில் நடைபெற்ற இது தொடர்பான சம்பவங்களுடன் சம்பந்தப்பட்டவைகளை ஆய்ந்தறிய உள்ளது.

நன்கு அறியப்பட்டபடி மார்ச் 2014இல் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபை "இலங்கையில் நல்லிணக்கம், பொறுப்புக்கூறல் மற்றும் மனித உரிமைகளை முன்னேற்றுதல்" என்ற தலைப்பிலான 25 - 1 இலக்க பிரேரணையை ஏற்றுக் கொண்டது.

அந்தப் பிரேரணை இலங்கையிலுள்ள இரு தரப்பினரும், ஆயுத மோதலின் கடைசி வருடங்களில் நடந்தவற்றை ஆராய்ந்த இலங்கையின் கற்றுக் கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவினால் (எல்.எல்.ஆர்.சி) குறிப்பிடப்பட்டுள்ள காலத்தில் இலங்கையிலுள்ள இரு தரப்பினரும் நடத்தியதாகக் கூறப்படும் மனித உரிமைகளுக்கு எதிரான தீவிர மீறல்களையும் மற்றும் துஷ்பிரயோகங்களையும் மற்றும் அது தொடர்பான குற்றங்களையும் பற்றி ஒரு விரிவான விசாரணையை மேற்கொள்ளும்படி ஐ.நா. மனித உரிமைகள் உயர் ஆணையர் அலுவலகத்தை கேட்டுள்ளது.

அந்தப் பிரேரணை, செப்ரெம்பர் 2014இல் நடக்கவுள்ள மனித உரிமைகள் சபையின் 27ஆவது அமர்வில் இது சம்பந்தமாக புதுப்பிக்கப்பட்ட வாய்மொழியான அறிக்கை ஒன்றைச் சமர்ப்பிப்பதோடு, அதன் விரிவான விசாரணை அறிக்கையை 2015 மார்ச்சில் நடக்கவுள்ள சபையின் 28ஆவது அமர்வில் சமர்ப்பிக்கும்படி மனித உரிமைகள் ஆணையர் அலுவலகத்தை கேட்டுள்ளது.

ஐ.நா. மனித உரிமைகள் ஆணையர் அலவலகத்தால் நடத்தப்பட இருக்கும் விசாரணையின் நோக்கத்துக்காக திருமதி பிள்ளையினால் இப்போது ஒரு குழு அமைக்கப்பட்டு அதற்கான நிதியும் ஒதுக்கப்பட்டு விட்டது.

அமைக்கப்பட்டுள்ள விசாரணைக் குழு, விசாரணையாளர்கள், தடயவியல் நிபுணர்கள், பாலின நிபுணர்கள், ஒரு சட்ட ஆய்வாளர் மற்றும் விசேட தொழில் திறமை கொண்ட மற்றும் பல உத்தியோகத்தர்கள், ஆகியோர் உட்பட 12 அலுவலர்களைக் கொண்டது, மற்றும் ஒரு 10 மாத காலத்துக்கு (2015 ஏப்ரல் மத்தி வரை) அது செயற்பாட்டில் இருக்கும்.

அது பிரித்தானிய பிரஜையான திருமதி சந்ரா பெயிடஸ் எனும் மூத்த ஐ.நா. அதிகாரியினால் ஒருங்கிணைக்கப்பட்டு நிருவகிக்கப்படும். தனித்துவமான புகழ்பெற்ற மூன்று சர்வதேச நிபுணர்கள் இந்த ஐ.நா. விசாரணைச் குழுவுக்கு ஆதரவு, ஆலோசனை என்பனவற்றை வழங்கி அதை வழி நடத்துவார்கள்.

அந்த வல்லுனர்கள், முன்னாள் பின்லாந்து ஜனாதிபதியும் மற்றும் நோபல் பரிசை வென்றவருமான மார்ட்டி அதிசாரி, நியுசிலாந்தின் முன்னாள் ஆளுனர் நாயகம் மற்றும் உயர் நீதிமன்ற நீதியரசர் திருமதி சில்வியா காட்ரைட், முன்னாள் பாகிஸ்தான் உயர் நீதிமன்ற வழக்குரைஞர்கள் சங்கம் மற்றும் பாகிஸ்தான் மனித உரிமைகள் ஆணைக்குழு ஆகிவற்றின் தலைவர் திருமதி அஸ்மா ஜகாங்கீர்.

இந்த மூவர் குழு இணைந்து ஐ.நா. விசாரணையை முன்னெடுப்பதுடன் அதற்கான ஒட்டுமொத்த இயக்கத்தையும் மேற்கொள்ளும். இறுதி அறிக்கை ஐ.நா. குழுவினரால் தொகுக்கப்படும், ஆனால் அது அதிசாரி, காட்ரைட் மற்றும் ஜகாங்கீர் ஆகியவர்களால் கையொப்பமிட்டு முத்திரையிடப்படும்.

ஐ.நா. விசாரணை பற்றிய இலங்கையின் உத்தியோகபூர்வ நிலைப்பாடு நன்கறிந்ததுதான். அது பல்வேறு மட்டங்களில் எங்கள் வெளியுறவு அமைச்சர் பேராசிரியர் காமினி லக்ஸ்மன் பீரிஸ் முதல் ஜெனிவாவில் உள்ள எங்கள் ஐ.நா. தூதுவர் ரவிநாத் ஆரியசிங்க வரையான பல்வேறு நபர்களால் வலியுறுத்தப்பட்டிருக்கிறது.

மேலும் இலங்கைக்கு எதிராக மனித உரிமைகளுக்கான ஐ.நா. உயர் ஆணையர் அலுவலகத்தால் நடத்தப்படும் விசாரணையை எதிர்த்து நாடாளுமன்றத்தில் ஒரு பிரேரணை 134 பெரும்பான்மை வாக்குகளால் நிறைவேற்றப்பட்டது. ஐ.தே.க. நடுநிலை வகித்த அதேவேளை ஜே.வி.பி. வெளிநடப்பு செய்தது, பிரேரணைக்கு எதிராக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மட்டும் வாக்களித்தது.

வாக்கு எண்ணிக்கை, ஆதரவாக 144 மற்றது எதிராக 10 என்றிருந்தது. இது சொல்வது என்னவென்றால் பாராளுமன்றத்தினை பிரதிநிதித்துவம் செய்யும் அனைத்து கட்சிகளிலும் ரி.என்.ஏ. மட்டும்தான் இலங்கை மீதான ஐ.நா. விசாரணையை ஆதரிக்கிறது என்பதை.

(தொடரும்)

# செம்மஞ்சள் 'கறுப்புப் பெட்டி'!




- எஸ்.சந்திரசேகர் -

காணாமல் போன மலேசிய விமானம் என்ன ஆனது என்று இதுவரை தெரியவில்லை. வேறு வழியின்றி விமானம் விபத்துக்குள்ளாகி விட்டதாக மலேசிய அரசும் அறிவித்துவிட்டது. விமானம் என்ன ஆனது என்று சொல்லக்கூடிய சக்தி, விமானத்தின் கறுப்புப் பெட்டிக்கு மட்டுமே உண்டு.

ஆனால் கறுப்புப் பெட்டிக்கும் கறுப்பு வண்ணத்துக்கும் ஒரு தொடர்பும் இல்லை. இந்தப் பெட்டி செம்மஞ்சள் நிறமானது. விமானத்தின் கறுப்புப் பெட்டி உடையாத, வெப்பத்தால் பாதிக்கப்படாத உடலமைப்பைக் கொண்டது.

ரைட் சகோதரர்கள் விமானத்தைக் கண்டுபிடித்தாலும், வானில் விமானங்கள் பறக்கத் தொடங்கிய பின் தான் அவற்றில் ஏற்படும் பிரச்சினைகள் தெரிய வந்தன. விமானம் விபத்துக்குள்ளான பின், எதனால் விபத்து நடந்தது என்றுகூட அறிய முடியவில்லை.

இந்த நிலையில் தான் 1939ஆம் ஆண்டில் விமானங்களில் பதிவுக் கருவிகள் இணைக்கப்பட்டன. இவை விமானிகளின் அறையில் நடக்கும் சம்பவங்களைப் பதிவு செய்து கொண்டன. இவற்றில் மைக்ரோ.ஃபிலிம் இணைக்கப்பட்டது. இதற்கு கறுப்புப் பெட்டி என பெயரிடப்பட்டது. ஆனால், விமானம் விபத்துக்குள்ளாகும் போது இந்த கறுப்புப் பெட்டியால் பெரிய அளவிலான பயன் எதுவும் கிடைக்கவில்லை.

இரண்டாம் உலகப் போரின் போது பிரிட்டனின் அனைத்து விமானங்களிலும் கறுப்புப் பெட்டி பயன்படுத்தப்பட்டது. விமானங்கள் எப்படித் தாக்குகின்றன அல்லது தாக்குதலுக்கு உள்ளாகின்றன என்ற பதிவுகள் அடுத்த கட்ட தாக்குதலுக்கும் தாக்கச் செல்லும் விமானங்கள் தங்களைப் பாதுகாத்துக் கொள்வதற்கும் உதவியாக இருந்தன.

மின்காந்த நாடாக்கள் கண்டுபிடிக்கப்பட்ட பின் அவை கறுப்புப் பெட்டிகளில் பயன்படுத்தப்பட்டன. முந்தைய மைக்ரோ ஃபிலிமை விட இந்த நாடாக்களில் இருக்கும் பதிவுகள் மறுபடி பார்க்க எளிதாக இருந்தன.

1953-54-இல் ஏராளமான விமான விபத்துகள் நடந்தன. இந்த விபத்துகளுக்கான காரணத்தைக் கண்டுபிடிக்கவே முடியவில்லை. அந்த நிலையில் தான் தற்போதைய கறுப்புப் பெட்டியின் பாட்டனாரான கறுப்புப் பெட்டிகள் உருவாக்கப்பட்டன. அதுவரை விமானங்களில் நடைபெறும் செயல்கள், பேச்சுகள் மட்டுமே கறுப்புப் பெட்டிகளால் பதிவு செய்யப்பட்டன. முதன்முதலாக இந்தப் பெட்டியில் விமானத்தின் தொழில்நுட்பமும் இணைக்கப்பட்டது. விமானத்தின் வேகம், செல்லும் திசை, உயரம், உள்பகுதி வெப்பநிலை, வெளிப்பகுதி வெப்பநிலை என அனைத்தும் பதிவாகின.

விமானங்களில் தொழில்நுட்பம் வளர வளர கறுப்புப்பெட்டியின் வடிவமைப்பிலும் மாற்றங்கள் ஏற்பட்டுக்கொண்டே வந்தன. தொடக்கம் முதலே கறுப்புப் பெட்டி வெப்பம், தண்ணீர் போன்ற எதனாலும் பாதிக்கப்படாத விதத்திலேயே உருவாக்கப்பட்டது.

தற்போதுள்ள கறுப்புப் பெட்டிகள் முழுமையான பாதுகாப்பைக் கொண்டவை. விமானம் முழுவதும் எரிந்து கரிக்கட்டையாய் போனாலும் கூட இந்த கறுப்புப் பெட்டியில் சிறு கீறல் கூட விழாது. தண்ணீருக்குள் மூழ்கினாலும் ஏறக்குறைய 10 நாள்கள் வரை அதிலிருந்து சமிக்ஞைகள் கிடைத்துக் கொண்டே இருக்கும். நிலப்பகுதியில் விழுந்தால் மேலும் சில நாள்கள் சமிக்ஞைகள் கிடைக்கும். அதிலும் சில கறுப்புப் பெட்டிகள் சூரிய சக்தியைக் கொண்டு தொடர்ந்து செயற்படக்கூடியவை. இவை நிலப்பகுதியில் விழுந்தால் எத்தனை ஆண்டுகளானாலும் இயங்கிக் கொண்டே இருக்கும்.

இந்த ஒட்டுமொத்த அமைப்பும் மூன்றரைக் கிலோ எடை மட்டுமே கொண்டது. இதை உடைக்க முடியாது. இதன் செயற்பாட்டை நிறுத்த முடியாது.

ஆனால் இது கறுப்பு நிறத்தில் இல்லை. இளஞ்சிவப்பு வண்ணம் கொண்டது.

அடுத்த கட்டமாக கறுப்புப் பெட்டியில் பதிவாகும் அனைத்தையும் வானில் மிதக்கும் செயற்கைக் கோள்கள் உதவியுடன் நிலப்பகுதியில் உள்ள கட்டுப்பாட்டு அறையில் பதிவு செய்ய தீவிர முயற்சிகள் நடந்துவருகின்றன. அதாவது கறுப்புப் பெட்டி கிடைக்காவிட்டாலும் அதன் பதிவுகளை பெற முயற்சிக்கின்றனர்.

இவ்வளவு இருந்தும் மலேசிய விமானம் என்ன ஆனது என கண்டுபிடிக்க முடியவில்லை எனும்போது, தொழில்நுட்ப வளர்ச்சியின் மீது சந்தேகம் ஏற்படுவதைத் தவிர்க்க முடியவில்லை.

# கடலைச் சுத்தப்படுத்துகிறார்!

"அவர் பொறுமையில் கடல்" என்பார்கள். கடல் பொறுமையாக தன்னிடம் கொட்டப்படுவதையெல்லாம் தாங்கிக்கொள்கிறது.

கடலில் இதைத்தான் கலப்பது என்ற வரையறை இல்லாமல், தொழிற்சாலைக் கழிவுகள், சாக்கடை, குப்பைகள், பிளாஸ்டிக் பொருட்கள் என எல்லாவற்றையும் கலக்கிறோம். ஆனால் கடல் இதைப் பற்றிக் கவலைப்படுவதில்லை.

கடலில் கலக்கப்படும் கழிவுகளில் அழிவதற்கு அதிக காலம் எடுத்துக் கொள்வது பிளாஸ்டிக் கழிவுகள்.

பிளாஸ்டிக் கழிவுகளைக் கடலில் இருந்து எடுத்து அவற்றை இரசாயன வினைமாற்றங்களுக்கு உட்படுத்தி சுற்றுச் சூழலைப் பாதுகாக்கலாமே? என்று நினைத்தார் போயன் ஸ்லொட். ஜெர்மனியைச் சேர்ந்த இளைஞர்.


முதலில் கடலில் கலந்துள்ள கழிவுகளை அதிலிருந்து அகற்ற வேண்டும். அதற்கு ஒரு கருவியைக் கண்டுபிடித்தார் அவர். அந்தக் கருவியைப் பயன்படுத்தி கடலைச் சுத்தம் செய்யும் திட்டத்தை செயற்படுத்தினார்.

இந்தத் திட்டத்தின் மூலம் உலகக் கடல்களில் உள்ள 72 இலட்சத்து 50 ஆயிரம் தொன் எடையுள்ள பிளாஸ்டிக் கழிவுகளைக் கடலில் இருந்து எடுக்க முடியுமாம்! 5 ஆண்டுகளில் கடலில் உள்ள எல்லாப் பிளாஸ்டிக் கழிவுகளையும் நீக்க முடியுமாம்!

சுற்றுச் சூழல் பாதுகாப்பில் இவ்வளவு அக்கறை உள்ள அவர், இந்தக் கருவி இயங்கத் தேவையான ஆற்றலைக் கடல் அலைகளில் இருந்தும், சூரிய ஒளியிலிருந்தும் பெற்றுக் கொள்ளும் வகையில் கருவியை உருவாக்கியுள்ளார்.



# கர்ணன் செய்யாத தானம்!




தெனாலிராமன், மரியாதை ராமன் போல சாப்பாட்டு ராமன் என்றும் இருந்தானா? சாப்பாட்டு ராமன் கதைகள் பல உண்டு. அவை ஒரே ராமனைக் குறிக்குமா அல்லது பல சுவாரஸ்யமான சாப்பாட்டு சங்கதிகள் நாளாம்பரியமா ஒரு ராமனிடம் வந்து சேர்ந்ததா என்று சொல்வது கஷ்டம். நாட்டுப்புறக் கதைகளில் இப்படிச் சேர்ந்து கொண்டே போகும்! மகாபாரதத்தின் கதைகளில் நாம் இன்னும் கேள்விப்படாத பகுதிக் கதைகள் மக்களிடம் இருந்து கொண்டே தான் இருக்கின்றன.

சமீபத்தில் ஊருக்குப் போயிருந்தபோது ஒரு பெரியவர் என்னிடம் ஒரு கேள்வி கேட்டார்.

"கர்ணன் செய்யாத தான தர்மங்கள் கிடையாது என்று சொல்லுவார்கள். ஆனால் அவன் செய்யாத தானதர்மம் ஒன்று உண்டு. அது என்னது என்று சொல்ல முடியுமா?"

இந்தக் கிராமத்துக் கிழவனார்களே இப்படித் தான். நம்மைத் திக்கு முக்காட வைத்துவிட்டு, "யோசிச்சி வைங்க. எனக்குக் கொஞ்சம் வேலை இருக்கு. பெறகு வந்து பாக்கேம்" என்று போய்விட்டார் அவர்.

நானும் கணபதியும் யோசித்தோம். கர்ணன் செய்யாத தான தர்மமும் இருக்குமா? அவன் செய்த தான தர்மங்களின் பலனையே பிடி இந்தா... என்று ரத்தத்தால் தாரை வார்த்துக் கொடுத்தவன் அல்லவா? இதைவிடவும் ஓர் அபூர்வமான அவன் கொடுக்காத தானம் எப்படி இருக்க முடியும்?

"சோ" என்று கொட்டுற அடை மழைக்காலத்தில் ஒரு படுபாவி முனிவர் வந்து யாகம் செய்ய நனையாத விறகு நூறு வண்டி வேணும் என்று கேட்கிறார். தனது அரண்மனையையே இடித்து அதிலுள்ள மரங்களை வண்டிகளில் பாரமேற்றி அனுப்புகிறான் கர்ணன்.

எது கேட்டு அவன் இல்லை என்று சொல்லியிருக்கிறான்? என்ன யோசித்தும் புரிபடவில்லை எங்களுக்கு. சரி அவரே வந்து சொல்லட்டும் என்று காத்திருந்தோம். சாவகாசமாக வந்தார் ஒன்றுமே அறியாதவர்போல, "எங்களுக்குத் தெரியலையய்யா, நீங்களே சொல்லிடுங்கோ" என்று கேட்டுக் கொண்டோம்.

"கர்ணன் செய்யாதது... அன்னதானம்!" என்றார். சொல்லிவிட்டு எங்களையே பார்த்துக் கொண்டிருந்தார். எப்பிடி நாஞ் சொன்னது சரிதானா என்கிறதுபோல. கதை சொல்லிகளுக்குப் பெருமை ரொம்பத்தான் உண்டு! அதைத் தப்பு சொல்ல முடியுமா நாம். கொடுக்கறவன் கை எப்பவும் மேலதானே.

அந்த முதியவர் கர்ண மகாராஜாவின் பெண்டாட்டியைக் கண்டித்துப் பேசினார். "அவ அப்பேர்க்கொத்த புருசனை மதிக்க மாட்டா. தாகம்னு வந்தவுகளுக்கு ஒரு கோப்பை பச்சைத் தண்ணி குடிக்கத் தரமாட்டா. பொண்டாட்டி ஒத்துழைப்பு இல்லைன்னா, பசின்னு வந்தவுகளுக்கு ஒரு வாய் சாப்பாடு போட முடியுமா?" என்று கேட்டார். வாஸ்தவமான பேச்சு என்கிறோம்.

துக்கம் தொண்டையை அடைக்காவிட்டாலும் கர்ணனை நினைக்கும்போது வருத்தமாக இருக்கிறது. அட்டா... அப்பேர்ப்பட்டவனுக்கு இப்படியும் ஒரு பொம்பளை வந்து வாச்சாளே பொண்டாட்டியா என்று ஆக, பசிச்சவனுக்கு வீட்டுக்குக் கூட்டிட்டு வந்து ஒரு வாய் சோத்தைப் போட்டு கொடுத்து வைக்கலை பாவி கர்ணனுக்கு.

கர்ணன் சம்பந்தப்பட்ட இப்பிடியும் ஒரு விசயம் இருக்கு என்று அந்தக் கிராமத்துப் பெரியவர் சொல்லித்தான் தெரிந்தது எங்களுக்கு!

**(கி.ராஜநாராயணன் கட்டுரையில் இருந்து)**

# சினிமா சினிமா

☯ கடந்த பொங்கலுக்கு விஜய்யின், ஜில்லா, அஜீத்தின், வீரம் படங்கள் வெளியாகி பரபரப்பு கூட்டின. அதுபோல், வரவிருக்கும் தீபாவளிக்கு, ரஜினியின் லிங்கா, விஜய்யின் கத்தி, விஷாலின் பூஜை ஆகிய படங்கள் வெளியாக இருப்பது உறுதியாகியுள்ளது. இதற்கிடையே, இந்த போட்டியில் அஜீத்தின், 55ஆவது படமான, சத்யாவையும் இறக்கிவிட முயற்சி நடக்கிறது. ஆனபோதும், அப்படத்தின் இயக்குனர் கவுதம் மேனன், இன்னும் இதுகுறித்து உறுதிப்படுத்தவில்லை.

☯ முன்னணி நடிகர்கள் இணைந்து நடிப்பது போல, நடிகைகள் இணைந்து நடிப்பது தமிழில் அவ்வளவாக இல்லை. அஜித் நடிப்பில் வெளிவந்த "பில்லா, "ஆரம்பம்" ஆகிய படங்களில் இரு ஹீரோயின்கள் இணைந்து நடித்திருந்தனர். மீண்டும் கௌதம் வாசுதேவ்மேனன் இயக்கத்தில் அஜித் நடித்து வரும் சத்யாவில் ஏற்கெனவே அனுஷ்கா நடித்து வருகிறார். இப்போது, கதையின் போக்கில் மாற்றங்களை உருவாக்கும் ஒரு கதாபாத்திரத்தில் த்ரிஷா அழைக்கப்பட்டிருக்கிறார். "ஜீ", "கிரிடம்", "மங்காத்தா" என அஜித் படங்களை எப்போதுமே விரும்புவதாலும், கௌதம் வாசுதேவ்மேனனுடன் நெருங்கிய நட்பில் இருப்பதாலும் இரண்டாவது ஹீரோயின் என்பதையெல்லாம் மறந்து இப்படத்தில் த்ரிஷா நடிக்க ஒப்புக் கொண்டதாகக் கூறப்படுகிறது.

☯ வல்லவனுக்கு புல்லும் ஆயுதம் படத்தில், கதாநாயகனாக நடித்த சந்தானம், தற்போது லிங்காவில் ரஜினியுடன் காமெடியனாக நடித்து வருகிறார். அப்படம் முடிந்ததும் மீண்டும் ஒரு படத்தில் கதாநாயகனாக நடிக்கிறார். குறும்பட இயக்குனர் ஒருவர் இயக்கும் அப்படத்தில், சந்தானத்துக்கு இரண்டு ஜோடிகள். ஒருவர், கண்ணா லட்டு தின்ன ஆசையா படத்தில் நடித்த விசாகாசிங் இன்னொருவர், வல்லவனுக்கு புல்லும் ஆயுதம் படத்தில் நடித்த ஆஷ்னா சவேரி.

☯ கட்சி நடவடிக்கைகளிலிருந்து சிலகாலம் ஒதுங்கி இருக்க விரும்பும் தெலுங்கு நடிகர் சிரஞ்சீவி, மீண்டும் படங்களில் நடிக்க இருக்கிறார். தயாரிப்பாளர்: அவரது மகன் ராம் சரண் தேஜா. இயக்கப் போகிறவர்: மணிரத்தினம். இந்தப் படம் சிரஞ்சீவியின் 150ஆவது படமாம்.

☯ இடம் பொருள் ஏவல் என்ற படத்தை இயக்கும் சீனுராமசாமி, அப்படத்திற்கு இசையமைக்கும் இளையராஜாவின் மகன் யுவன் ஷங்கர் ராஜாவின் இசையில், வைரமுத்துவை பாடல் எழுத வைத்துள்ளார். அனேகன் படத்திற்கு இசையமைக்கும் ஹாரிஸ் ஜெயராஜ், தன் இசையில், வைரமுத்து எழுதியுள்ள, "ஆத்தாடி ஆத்தாடி" என்ற பாடலை, இளையராஜாவின் மகள் பவதாரணியை பாட வைத்துள்ளார்.



☯ "ஹம்ஷகல்ஸ்" என்ற ஹிந்திப் படத்தில் சயீப் அலிகான் ஜோடியாக நடிக்கும் தமன்னாவுடன் ரிதேஷ் தேஷ்முக், பிபாஷா பாசு ஆகியோரும் நடிக்கின்றனர். சக ஹீரோயின் பிபாசாவுடன் மோதியதாக தகவல் பரவியதுடன், படக்குழுவினரை தமன்னா மதிப்பதில்லை என்றும் கூறப்பட்டது. இதற்கு பதிலளித்துள்ள தமன்னா, "என்னை பொலிவுட்டிலிருந்து விரட்ட வதந்திகள் கிளப்பி விடப்படுகின்றன. இந்தப் புரளிகளைக் கிளப்புவது யார் என்று எனக்குத் தெரியும். நான் வளர்ந்து வருவது அவர்களுக்குப் பிடிக்கவில்லை. ஆனாலும் தடைகளை உடைத்து பெரிய இடத்துக்கு வருவேன்" என கூறியிருக்கிறார்.

☯ ரஜினி - ஷங்கர் கூட்டணியில் உருவான எந்திரன், 150 கோடி ரூபாயில் தயாரானது. தற்போது, லிங்கா படத்தில் நடித்துவரும் ரஜினியும், ஐ படத்தை இயக்கி வரும் ஷங்கரும், எந்திரன்-2 மூலம், மீண்டும் இணைகின்றனர். அப்படத்தை, முந்தைய படத்தை விட, இன்னும் பிரமாண்டமாக இயக்க திட்டமிட்டுள்ள ஷங்கர், 200 கோடி ரூபாய் பட்ஜெட் போட்டுள்ளார். அதோடு, ரஜினிக்கு ஜோடியாக, ஒரு ஹொலிவுட் நடிகையை, நடிக்க வைக்கவும் திட்டமிட்டுள்ளார்.

☯ நயன்தாரா, அனுஷ்கா இருவரும் நடிக்க வந்து, பத்து ஆண்டுகளுக்கு மேலாகி விட்டது. இருப்பினும், இதுவரை எந்தப் படத்திலும், அவர்கள், "டப்பிங்" பேசியதில்லை. அஜீத்துடன் நடிக்கும், சத்யா படத்திற்காக முதன் முறையாக, தனக்குத்தானே, "டப்பிங்" பேசுகிறார் அனுஷ்கா. அவரைத் தொடர்ந்து, சிம்பு - நயன்தாரா நடிக்கும், "இது நம்ம ஆளு" படத்தை இயக்கும் பாண்டிராஜ், நயன்தாராவிடம், "டப்பிங்" பேசுமாறு கேட்டுக் கொண்டுள்ளார். இருவரும் தமிழை தங்குதடையின்றி பேச, தீவிர பயிற்சி எடுத்து வருகின்றனர்.

☯ மதம் மாறிவிட்டதாக எழுந்த செய்திக்கு, மறுப்பு சொன்ன ஜெய், மசூதிக்கு சென்று தொழுகை நடத்தி வருவதாகவும், தன் பெயரை. ரஹ்மத்துல்லா என்று மாற்றியுள்ளதாகவும் கூறப்படுகிறது. ஆனால், தற்போதைக்கு, இதை ரகசியமாக வைத்துள்ளார்.

☯ அமிதாப்பச்சன், தனுஷ் இணைந்து நடித்து வரும் ஹிந்திப் படத்திற்கு, ஷமிதாப் என்று, பெயர் வைத்துள்ளனர்.

☯ ஓநாயும் ஆட்டுக்குட்டியும் படத்தையடுத்து, பிசாசு என்ற பெயரில், ஒரு அமானுஷ்ய படத்தை இயக்குகிறார், மிஷ்கின்.

☯ தலப்பாக்கட்டிய்ய தொடர்ந்து, எழில் இயக்கத்தில், விக்ரம்பிரபு நடிக்கும் படத்தில், ஜோடியாக வருத்தப்படாத வாலிபர் சங்கம் ஸ்ரீதிவ்யா நடிக்கிறார்.

☯ சோயா அக்தர் என்ற பெண் இயக்குனரின் ஹிந்திப் படத்தில், இணை இயக்குனராக பணியாற்ற உள்ளார், தீபிகா படுகோனே.

அஸாவரி - தலைவலியைப் போக்கும்.
இந்தோளம் - வாதம் கபத்தினால் உண்டாகும் நோயைக் குணப்படுத்தும்.
பைரவி - சிலேட்டுமம், சயரோகம் போக்கும்.
சாரங்கா - ரத்தக் கொதிப்பைக் குணமாக்கும்.
கரகரப்பிரியா - பசியை மறக்கச் செய்யும்.
நீலாம்பரி - குழந்தையின் அழுகையை நிறுத்தி... தூங்கச் செய்யும்.
தோடி - சிலேட்டுமத்தால் உண்டாகும் குற்றங்களைக் குணமாக்கும்.

## ராகங்களும் குணங்களும்




## மாற்றம் வேண்டும் இது மக்கள் முரசு

# மணற்தரை சாமியம்மன் வீதி புனரமைக்கப்படாதா...?

பலாலி வீதியில் பரமேஸ்வரா சந்திக்கு அருகாமையில் உள்ள ஓர் கிளை வீதியே மணற்தரை வீதியாகும். இதில் உள்ள ஓர் சிற்றொழுங்கையே சாமியம்மன் வீதியாகும். இது நீண்ட நாட்களாக புனரமைக்கப்படாது உள்ளது.

இது தொடர்பாக பிரதேச மக்களாகிய நாம் பல தடவை உரியவர்களுக்குத் தெரியப்படுத்தியும் கூட எந்தப்பயனும் கிடைக்கவில்லை. மணற்தரை வீதியில் உள்ள ஒரு சில வீதிகள் புனரமைக்கப்பட்டுள்ளபோதும் கூட இந்த வீதி மாத்திரமே புறக்கணிக்கப்பட்டுள்ளது.





பலதடவை இது தொடர்பாக கோரிக்கை விட்டும் கூட எந்தப் பயனும் இல்லை உரியவர்கள் இது தொடர்பாக ஏன் கவனமெடுக்கப் பின் நிற்கின்றனர் என்பதுதான் புரியவில்லை. எங்கே நாம் வாக்களித்த அரசியல்வாதிகள் - இம் மக்களின் அவலங்களை அவர்கள் தீர்க்கமாட்டார்களா?

இது ஒருபுறமிருக்க பலாலி வீதியினூடாக வரும் கழிவு வாய்க்கால்கள் இந்த மணற்தரை வீதியில் இடைநிறுத்தப்பட்டுள்ள தால், மழைகாலங்களில் தொற்றுநோய்கள் பரவும் அபாயம் உள்ளது. அதாவது நொதோன் வைத்தியசாலைக் கழிவுகள் இந்த சாமியம்மன் வீதியூடாகவே பின்புறமுள்ள நீர்த்தேக்கத்திற்குச் செல்கின்றது.

சிறுவர்கள் முதல் பெரியோர்கள் வரை மழைகாலத்தில் வெள்ளத்தின் மத்தியில் தான் போக்குவரத்தை மேற்கொள்வார்கள்.

இதனால் பெரும் அசௌகரியங்களை அத்தெருவோர மக்கள் எதிர்நோக்கி வருகின்றனர். உரியவர்கள் இது தொடர்பாக கவனமெடுத்து இம்மக்களின் பிரச்சினையினைத் தீர்த்துத்தருமாறு மக்கள் முரசினூடாக வேண்டி நிற்கின்றோம்.

**பாதிக்கப்பட்ட வீதியோர மக்கள் சார்பில்**

**திரு. துரைராஜா**

# பயிற்சிநெறிக்கு இங்கே இடம் கிடைக்காதா...?

கடந்த 26 ஆம் திகதி கோப்பாய் ஆசிரிய பயிற்சிக் கலாசாலையில் ஆசிரிய மாணவர் களைத் தெரிவு செய்வதற்கான நேர்முகப்பரீட்சை பாடரீதியாக இடம்பெற்றது. இதில் ஆங்கிலப் பாடத்துறை தவிர்ந்த ஏனைய பாடக்கற்கைநெறிகளுக்கு கோப் பாய் ஆசிரியர் பயிற்சிக் கலா சாலைய்யில் இடம் கிடைப்பதாகவும், ஆங்கிலப் பாடத்துறை சம்மந்தமாக பின்பு அறிவிக்கப்படும் எனக் கருத்து வெளியிடப்பட்டது.

இந் நேர்முகப்பரீட்சைக்கு ஏறத்தாழ 70 இற்கு மேற்பட்ட ஆங்கில ஆசிரிய மாணவர்கள் கலந்து கொண்டனர். இவர்கள் பல்வேறு குடும்ப சுமைகளைத் தாங்கியே இந்தக் கற்கை நெறிக்கு விண்ணப்பித்துள்ளனர். இவர்களை கோப்பாய் ஆசிரிய பயிற்சிக் கலாசாலையில் இணைத்துக் கொள்ள ஏதேனும் நடவடிக்கை களை அதிகாரிகள் எடுப்பார்களா?... என்பது தொடர்பான ஆதங்கத்தில் ஆசிரிய மாணவர்கள் காத்திருக்கின்றனர். முன்னைய காலங்களில் கற்கை மாணவர்களின் எண்ணிக்கை போதாது என்பதைக் கருத்திற் கொண்டே மகரகம ஆசிரிய பயிற்சிக் கல்லூரிக்கு மாற்றப்பட்டார்கள்.

ஆனால் தற்போது நிலை வேறு 70 இற்கு மேற்பட்ட மாணவர்கள் உள்ளமையால் வருகை தரும் விரிவுரையாளர் கள் மூலமேனும் கற்கை நெறியினை யாழப்பாணத்தில் நடாத்த வாய்ப்புள்ளது.

இதனைக் கருத்திற்கொண்டு இவ் வாசிரிய மாணவர்களின் நலன் களிற்கு உதவிபுரிவார்களா? இது ஒரு புறமிருக்க மகரகமவிற்கு இக்கற்கை நெறியினை மாற்றினால் பல ஆசிரிய மாணவர்கள் குழந்தைகளை விட்டுப் பிரிந்து செல்ல முடியாத நிலையில் கற்கை நெறியினைத் தொடரமுடியாத துர்பாக்கிய நிலை உருவாகும்.

இதனைக்கருத்திற் கொண்டு இம் மாணவர்களின் கோரிக்கையை மக்கள் முரசுக்கூடாக சமர்பிக்கின்றேன்

பாதிக்கப்பட்ட ஆசிரிய மாணவி வி.சிறிப்பிரியா




**அதிக புள்ளிகளைப் பெற்ற திறமைசாலிகள் ஐவருக்கு பெறுமதியான பரிசில்கள் காத்திருக்கின்றன. உங்களுக்கான பரிசில்கள் விபரம் பத்திரிகையில் வெளியாகும். மூன்று மாத இறுதியில் தினமுரசு காரியாலயத்தில் வைத்து வழங்கிக் கௌரவிக்கப்படும்.**

## சரியான விடைகளை எழுதி பாராட்டுப் பெறுவோர்

பெயர் :- சி.சபிதா
தரம் :- 12
பாடசாலை:- யா/ கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி.


பெயர் :- ஈ.சுமன்ராஜ்
தரம் :- 8
பாடசாலை:- கிளி/ பாரதி வித்தியாலயம்.

பெயர் :- சி.சுபர்ணா
தரம் :- 5
பாடசாலை:- யா/ வல்வை மகளிர் மகாவித்தியாலயம்.


பெயர் :- பு.யதுர்சனா
தரம் :- 10
பாடசாலை:- யா/ எழுதுமட்டுவாள் ஸ்ரீ கணேச வித்தியாலயம்.

பெயர் :- ச.ஜதுசன்
தரம் :- 7
பாடசாலை:- யா/ அச்சுவேலி மத்திய கல்லூரி.

**ஒத்த சோடியின் கீழ் கீறிடுக.**



(i) (ii) (iii) (iv) (v)



**ஆரம்பத்தில் உள்ள படத்தை உருவாக்கும் படக் கூட்டம் எது.**

(i) (ii) (iii) (iv)




(i) (ii) (iii) (iv)



**வேறுபட்ட படக் கூட்டத்தின் கீழ் கோடிடுக.**

(i) (ii) (iii)



28.06.2014 வெளியான புதிர்ப்போட்டியின் விடைகள்

1) 2　2) 3　3) 1　4) 2　5) 3

**அனுப்பவேண்டிய முகவரி**

புதிர்ப்போட்டி
இல: ------- 373,
பிரதான வீதி,
யாழ்ப்பாணம்.

# தொழில் முயற்சியாளர்களுக்கு விருது வழங்க விசேட ஏற்பாடு

(யாழ்ப்பாணம்)

வடமாகாணத்தில் உள்ள தொழில் முயற்சியாளர்களுக்கான விருதுகளை வழங்கவுள்ளதாக யாழ்ப்பாண வர்த்தக தொழில் துறை மன்றத்தின் தலைவர் எஸ்.பூர்ணச்சந்திரன் நேற்று முன்தினம் தெரிவித்தார்.

கைத்தொழில் மற்றும் வணிக அமைச்சின் கீழ் உள்ள தேசிய தொழில் முயற்சி அபிவிருத்தி அதிகார சபையும் யாழ்ப்பாண வர்த்தக தொழில்துறை மன்றமும் இணைந்து இந்த விருதினை வழங்கவுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

இந்த விருதுவழங்கும் நிகழ்வு எதிர்வரும் செப்ரெம்பர் மாத நடுப்பகுதியில் யாழ்ப்பாணத்தில் நடைபெறவுள்ளது.

இவ்விருது சிறுதொழில், நடுத்தர மற்றும் பாரிய தொழில் துறைகள் இனங்காணப்பட்டு 18 வகையான விருதுகள் வழங்கப்படவுள்ளதாக அவர் கூறினார்.

கைத்தொழில் உற்பத்தி, பொறியியல் சேவை, சுற்றுலாத் துறை,கல்வி உட்பட பல துறைகளில் இவ்விருதுகள் வழங்கப்படவுள்ளன.

தொழில் முயற்சிகளை மேலும் ஊக்குவிக்கும் நோக்கத்துடன், தொழில் வாய்ப்புக்களை சாத்தியமான முறையில் நடைமுறைப் படுத்துவதற்கான வாய்ப்புககளை வழங்குவதே இதன் நோக்கம் என்றார்.

வடமாகாணத்தில் உள்ள 5 மாவட்டங்களிலும் பதிவு செய்யப்பட்ட மற்றும் தனியார் நிறுவனங்கள் இதற்காக விண்ணப்பிக்க முடியுமென்றும் விண்ணப்பப்படிவங்களை 5 மாவட்டத்திலுமுள்ள வர்த்தக சம்மேளனங்களில் பெற்று எதிர்வரும் 30 ஆம திகதிக்கு முன்னர் விண்ணப்பிக்குமாறும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (25)

# ஆயுர்வேத வைத்தியசாலை புனரமைப்புக்கு நிதி ஒதுக்கீடு

பண்டத்தரிப்பு கிராமிய ஆயுரவேத வைத்தியசாலை புனரமைப்புக்கு 2 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

இதன்மூலம் ஆயுர்வேத வைத்தியசாலைக்கான சமையலறை புனரமைக்கப்பட்டு வருவதாக ஆயுர்வேத வைத்திய கலாநிதி டொக்டர் ரி.திலீபன் தெரிவித்தார்.

மேற்படி விடயமாக டொக்டர் மேலும் தெரிவிக்கையில், வலி.தென்மேற்கில் பண்டத்தரிப்பில் உள்ள கிராமிய ஆயுர்வேத வைத்தியசாலையில் நோயாளர் தங்குமிட வசதியுடன் திருப்திகரமான சேவை இடம் பெறுகின்றது.

விரைவில் வெளிநோயாளர் பிரிவிற்கான கட்டடம் மற்றும் வைத்தியர் தங்குவதற்கான விடுதி என்பனவும் புனரமைத்து வழங்க ஆயுர்வேத திணைக்களம் முன்வர வேண்டும் என டொக்டர் ரி.தீலிபன் கேட்டுள்ளார். (92)

# கழுத்துப்பட்டி அன்பளிப்பு

(புங்குடுதீவு)

தீவக கல்விவலயத்தின் நிர்வாக கட்டமைப்புக்குட்பட்ட புங்குடுதீவு சுப்பிரமணிய மகளிர் வித்தியாலயத்தில் கல்வி கற்று வருகின்ற மாணவர்களுக்கு கழுத்துப்பட்டியினை கனடாவில் வாழ்ந்து வருகின்ற புங்குடுதீவைச் சேர்ந்த மக்களால் இலவசமாக வழங்கப்பட்டுள்ளதாக கல்லூரியின் முதல்வர் நா.பஞ்சலிங்கம் தெரிவித்துள்ளார்.

அத்துடன் கல்லூரியினது மாணவத்தலைவர்களுக்கான சின்னம் பொறித்த பட்டிகளும் இவர்களால் வழங்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (05)

# இறுவட்டு வெளியீடு

(யாழ்ப்பாணம்)

“இணுவைக்கந்தா போற்றி” இசை இறுவட்டு வெளியீடு கடந்த செவ்வாய்க்கிழமை இணுவைக் கந்தன் ஆலய முன்றலில் இடம்பெற்றது.

ஆசிரியர் இ.பாலச்சந்திரன் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் செஞ்சொற் செல்வர் கலாநிதி ஆறுதிருமுருகன் பிரதம விருந்தினராக கலந்து சிறப்பித்து இறுவட்டினை வெளியிட்டு வைத்தார்.

முதற்பிரதியினை இணுவையூர் வீ.கே குகனந்தன் பெற்றுக் கொண்டார்.

இறுவட்டின் மதிப்பீட்டுரையை சித்தாந்த வித்தகர் சிவமகாலிங்கம் நிகழ்த்தினார். (48)

# மணிவாசகர் குருபூசையை முன்னிட்டு நடாத்தப்பட்ட போட்டி முடிவுகள்

நேற்றைய தொடர்ச்சி...

(யாழ்ப்பாணம்)

வண்ணை சாந்தையர்மடம் ஸ்ரீ கற்பக விநாயகர் ஆலய சைவசமய அபிவிருத்திக் கழகத்தினால மாணிக்க வாசகர் குருபூசைத்தினத்தை முன்னிட்டு மாணவர்களிடையே நடாத்தப்பட்ட போட்டியில் வெற்றி பெற்ற மாணவர்களின் விபரம் வருமாறு:

தரம்-02 சிறப்புப் பரிசு பெறுவோர்

சி.காருண்யா(யா/கோப்பாய் நாவலர் தமிழ் வித்தியாலயம்),சா.சிம்ரெல்லா,ஜெ.ஜெய துவாரகா (யா/ஆனைப்பந்தி மெதடிஸ் மிஷன் வித்தியாலயம்) ஸ்ரீ.பூர்வஜா (/யாழ்.இந்து ஆரம்பப்பாடசாலை), ற.பூமிகா (யா/வண்ணை நாவலர் மகா வித்தியாலயம்)

கீழ்பிரிவு:- தரம் -03

பா.ஜிந்துஜன் (யா/தெல்லிப்பளை மகாஜனக் கல்லூரி), சி.சிரோசினி (யாழ்.இந்து ஆரம்பப் பாடசாலை), ப.அக்சயா (யா/வண்ணை நாவலர் மகாவித்தியாலயம்)

சிறப்புப் பரிசு பெறுவோர்

க.சாதுரியா(யா/வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக்கல்லூரி), செ.மயூரிகா, ம.ஜதுசன், ச.துவாரகா,கு.வைஷ்ணவி (காரைநகர் கிழவன்காடு கலாமன்றம்)


(தொடரும்)



வடமாகாண மட்ட தமிழ்த் தின போட்டியில் சென்.ஜோண்ஸ் கல்லூரியினால் மேடையேற்றப்பட்ட குரு சபதம் என்னும் தென்மோடி நாட்டுக்கூத்து முதலாம் இடத்தைப் பெற்றுள்ளது. இந்நாட்டுக் கூத்தின் எழுத்துருவாக்கத்தை யோன்சன் ராஜ்குமார் மற்றும் நெறியாள்கையினை அன்ரு ஜீலியஜ் ஆகியோர் மேற்கொண்டுள்ளார்கள்.. (27,63)

# வாரம் ஒரு காரம்

## அரசுடன் பேச ஆமோதிக்கும் நாம் – ஏன் தெரிவுக்குழுவை நிராகரிக்கின்றோம்?




“அரசை” எதிரி எனப் பெயர் சூட்டி இருட்டுக்குள் ஓர் இனவாதத்தை நாமும் வைத்து இணைப்பாக்க அரசியலை இழிவாகக் கருதிய நாம் இன்று அந்த அரசுடன் பேசத்தயாரென்று கூறிவிட்டு தெரிவுக்குழுவை நிராகரித்து வருகின்றோம்.

அன்று சர்வதேச விசாரணைதான் இலங்கையரசுக்குப் பதில் சொல்லும் எனக்கூறி நாடெங்கும் சென்று பிரசாரம் செய்த நாம் இன்று ஐ.நா விசாரணைக்குழுவிற்கு சாட்சியமளிப்பது தொடர்பாக கருத்துக்கூறப் பின்னிற்கின்றோம். இது கட்சிசார்ந்த ரீதியில் தான் முடிவெடுக்க வேண்டுமென்று கூறிவிட்டு சுயலாப அரசியலை சுத்திகரிக்கின்றோம்.

இலங்கையரசுடன் தனித்துப்பேசி பயனில்லை மத்தியஸ்தமின்றி இனிப் பேசுவதில்லை எனக்கூறிய நாம் தென்னாபிரிக்க மத்தியஸ்தத்தைக் கூட அந்நாட்டோடு நிறுத்திவிட்டோம். மாகாணசபை மூலம் அதிகாரங்களை வலுப்படுத்த முடியும். என பிரசார மேடைகளின் மூலம் தள்ள முக்கிய நாம் இன்று மாகாணசபைத் தீர்மானங்களை நிறைவேற்றியும் பயனில்லை என்கின்றோம்.

எதிரியின் பாதுகாப்பு எங்களிற்குத் தேவையில்லை எமது மக்களே எமக்குப் போதும் என்று எக்காளமிட்ட நாம் பொலிஸ் பாதுகாப்பை இன்று ஜனாதிபதியிடம் கோரிநிற்கிறோம். பிரபாகரனை சர்வதிகாரி என்று கூறி அதர்ம வழி என்றோ ஒருநாள் அழிக்கப்படும் ஆயுதமுனையில் இலங்கையில் தீர்வினைப் பெறமுடியாது எனக்கூறிய நாம் தமிழ் – முஸ்லீம்கள் இணைத்து போராடும் காலம் விரைவில் உருவாகும். என மீண்டும் தீயை மூட்டுகின்றோம்.

எதைப் பேசினோம் தற்போது எதைப் பேசுகின்றோம். என்பது எதுவுமே தெரியாத எமது தமிழத்தேசிய கூட்டமைப்பின் அரசியல் பயணத்தின் இலக்குத்தான் என்ன? என்பது தற்போது ஒவ்வொரு தமிழ் மக்களிற்கும் புரிய ஆரம்பித்துவிட்டது.

இலக்கே புரியாத பயணத்தில் தாமும் பயணிக்கின்றோம் என்பது அவர்களிற்கும் புரியாமல் இல்லை புரிந்தும் கூட புரியாதது போல் நடக்கின்றனர். காரணம்? புரிந்து செயற்பட்டால் அல்லது யதார்த்த பூர்வமாகத் தீர்வினைத் தேடிச் செயற்பட்டால் தமிழ்மக்கள் துரோகிகளாக தம்மைப் பார்த்து விடுவார்கள் என்கின்ற பயம், மீண்டும் ஓர் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அரச எதிர்ப்புப்பிரசாரத்தை முன்னிறுத்தி மேற்கிளம்பி விடும் என்கின்ற பயம், இதனால் தமது அரசியல் பயணம் பறி போய்விடும் என் கின்ற பயம்...

அரச எதிர்ப்புப் பிரசாரமொன்றே தமது அரசியல் நிலைப்பை தமிழ் மக்கள் மத்தியில் பாதுகாக்கும் என்பதை ஆழமாகத் தெரிந்த கூட்டமைப்புத் தலைமைகள் மக்களின் பலவீனத்தைப் பயன்படுத்தி மக்களையே பலிக்கடாக்கள் ஆக்குகின்றனர்.

இதுதான் உண்மை. இதனால்தான் தமிழர்களின் தீர்வினை பல கட்டங்களில் திட்டமிட்டுத் திசைமாற்றுகின்றனர். உண்மையான அரச ஆதரவாளர்களும், ஒரு துருவத்தில் அரச சிறுபான்மைக்கெதிரான பிரதிநிதிகளும் கூட்டமைப்புத் தலைமைகளேயாகும்.

கடந்து வந்த முக்கிய சம்பவங்களைச் சிந்தித்துப் பார்த்தால் அது எமக்கு நினைவூட்டும் . அன்று விடுதலைப்புலிகள் தேர்தலைப் பகிஸ்கரித்தவர்கள் அந்த நேரம் மக்களிற்குபுரியவில்லை மகிந்தாவை அமத்துவதற்கான சதி இதுவென்று, மறுபுறத்தில் விடுதலைப்புலிகளிற்குப் புரியவில்லை தங்கள் அழிவிற்கு மகிந்த அரசே காரணமாக இருக்குமென்று.

இதே போன்று ஐ.நா. விசாரணை தொடர்பான வாக்கெடுப்புக்கு நாடாளுமன்றத்தில் பெரும்பான்மை நிராகரிப்பால் மறுப்புத்தீர்மானம் நிறைவேறியது. இந்த இடத்தில் மக்களிற்குப் புரியவில்லை இதற்குத்தான் கூட்டமைப்பு செல்லவில்லையென்பது, இதே போன்று கூட்டமைப்பின் ஆதரவாளர்களுக்குப் புரியவில்லை தலைமை எதற்காக இவ்வாறான பொறுத்த கட்டங்களில் பின் வாங்குகின்றது என்பது....

இவ்வாறு புரியாத புதிர்களாக சிறுபான்மையினரின் தலைவிதிகள் சிதறடிக்கப்படப் போகின்றன இந்தத் தலைமைகளே தமிழ் மக்களுக்கு நிலைக்குமானால்....

# அளுத்கம, பேருவளை வன்செயல்

## பகுப்பாய்வு அறிக்கை நீதிமன்றுக்கு

(கொழும்பு)

அளுத்கம மற்றும் பேருவளை பிரதேசங்களில் இடம்பெற்ற வன்முறைகள் தொடர்பில் ஆராய, அரச இரசாயன பகுப்பாய்வாளர் ஆய்வுகளுக்கு அழைக்கப்படவில்லை என களுத்துறை நீதிமன்றத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த மாதம் 15 ஆம் திகதி ஏற்பட்ட மோதல்களில் இருவர் உயிரிழந்து 120 வீடுகள் அழிக்கப்பட்ட போதும் அரச இரசாயன பகுப்பாய்வாளர் அழைக்கப்படவில்லை என இன்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்தின் தலைவர் உபுல் ஜயசூரிய, செயலாளர் அஜித் பத்திரண மற்றும் சங்கத்தின் உறுப்பினர் பந்துல வீரசிங்க ஆகியோர் மேலதிக நீதவான் அயோ ஆப்தீன் முன்னிலையில் இதனைத் தெரிவித்துள்ளனர்.

மோதல்களில் கொல்லப்பட்ட மொஹமட் ரில்வான் மற்றும் மொஹமட் முஸ்தீன் ஆகியோரை மரண விசாரணைகள் நடைபெற்ற போதே அவர்கள் இதனை சுட்டிக்காட்டியுள்ளனர்.

மரணத்திற்கு பின்னரான பிரேத பரிசோதனை மற்றும் இரசாயன பகுப்பாய்வு அறிக்கைகள் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்படவில்லை எனவும் அவர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

இதனையடுத்து இந்த இரு அறிக்கைகளையும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யுமாறு மேலதிக நீதவான் பொலிஸாருக்கு உத்தரவிட்டார்.

# கிளைமோர்கள் செயலிழப்பு




வவுனியா சிதம்பரபுரம் வீதியில் உள்ள கல்வீரங்குளத்தில் கண்டுபிடிக்கப்பட்ட மூன்று கிளைமோர் குண்டுகளும் நேற்று முற்பகல் செயலிழக்கச் செய்யப்பட்டன. நேற்றுக் காலை விசேட அதிரடிப்படையினரின் உதவியுடன் கிளைமோர் குண்டுகள் மீட்கப்பட்டு மடுக்கந்த பகுதியில் வைத்து செயலிழக்கச் செய்யப்பட்டன என்று வவுனியா பொலிஸார் தெரிவித்தனர்.

# லிபியா செல்ல முயன்ற பங்களாதேஷ் பிரஜைகள் கைது

(கொழும்பு)

போலி வீசா மூலம் பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தின் ஊடாக லிபியாவுக்குச் செல்வதற்கு முயன்ற பங்களாதேஷ் பிரஜைகள் மூவரை கைதுசெய்துள்ளதாக குற்றப் புலனாய்வுப் பிரிவின் விமான நிலைய பிரிவு பொலிஸார் தெரிவித்தனர்.

22,36 மற்றும் 40 வயதுகளுடைய இந்த சந்தேகநபர்கள் மூவரும் நேற்று அதிகாலை 12.50 இற்கு கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

சந்தேகநபர்கள் மூவரையும் நீர்கொழும்பு நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் அப்பிரிவினர் தெரிவித்தனர்.

# 4 இலட்சம் இளநீர்கள் அரையாண்டில் ஏற்றுமதி

(கொழும்பு)

இந்த வருடத்தில் முதல் அரையாண்டு காலப்பகுதியில் 4 இலட்சம் இளநீர்கள் ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளன. தெங்கு அபிவிருத்தி அமைச்சர் ஜகத் புஸ்பகுமார இதனைத் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று முன்தினம் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் அமைச்சர் இவ்வாறு குறிப்பிட்டார்.

தெங்கு தொழிற்துறையில் ஈடுபட்டுள்ளவர்களுக்கு போதிய கடனுதவி மற்றும் ஊக்குவிப்புகள் வழங்கப்படுவதே இந்த வளர்ச்சிக்கான காரணம் எனவும் அவர் குறிப்பிட்டார்.

# எதிர்பார்த்த இலக்கை இலங்கை அடையவில்லை

## பிரித்தானியா குற்றச்சாட்டு

(கொழும்பு)

யுத்தம் தொடர்பான பிரச்சினைகளுக்கு பதில் அளிக்கும் செயற்பாட்டில் இலங்கை எதிர்பார்த்த மட்டத்தை அடையத் தவறியுள்ளதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

பிரித்தானியா இந்தக் குற்றச்சாட்டை முன்வைத்துள்ளது.

பிரித்தானிய நாடாளுமன்றில் இலங்கை தொடர்பில் இடம்பெற்ற விசேட விவாதம் ஒன்றில் உரையாற்றிய பொது நலவாய சபையின் அலுவலக அரச அமைச்சர் பரனேஸ வாசி இவ்வாறு குறிப்பிட்டார். இதன் காரணமாக சர்வதேச விசாரணை ஒன்றுக்கான அவசியம் வலியுறுத்தப்படுவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

# தேசிய ஊடக விருது வழங்கல் விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன

(கொழும்பு)

பொறுப்புள்ள ஊடகத் துறையை சிறந்த ஊடகவியலாளர்களை உருவாக்கும் நோக்கில் மக்கள் தொடர்பாடல் மற்றும் தகவல் அமைச்சு இம்முறையும் விருது வழங்கி ஊடகவியலாளர்களை கௌரவிக்க இவ் விண்ணப்பங்களை கோரியுள்ளது.

இதற்காக 2013ஆம் ஆண்டு இலத்திரனியல் மற்றும் அச்சு ஊடகங்களில் தமது திறமையை வெளிகாட்டிய ஊடகவியலாளர்கள்- கலைஞர்கள்- ஊடக நிறுவனங்களின் தலைவர்கள் மற்றும் பத்திரிகை ஆசிரியர்கள் இவ் விருதுக்காக விண்ணப்பிக்க முடியும்.

கீழே தரப்பட்டுள்ள விதத்தில் விருதுக்கு விண்ணப்பித்தல் வேண்டும்.

பத்திரிகைகள்- சிறந்த செய்தி - சிறந்த புகைப்படம்- சிறந்த கேலிச்சித்திரம்- சிறந்த சிறப்பு கட்டுரை- சிறந்த ஆய்வுக் கட்டுரை- சிறந்த கட்டமிடப்பட்ட செய்தி - சிறந்த கலை தொடர்பான கட்டுரைகள்- சிறந்த விளையாட்டு- சிறந்த பக்க வடிவமைப்பு

வானொலி- சிறந்த சிறுவர் நிகழ்ச்சி- சிறந்த இசை நிகழ்ச்சி- சிறந்த நிகழ்ச்சி- சிறந்த நிகழ்ச்சி வழங்குனர்- சிறந்த செய்தி வழங்கல் மற்றும் சிறந்த அறிவிப்பாளர், தொலைக்காட்சி- சிறந்த சஞ்சிகை நிகழ்ச்சி- சிறந்த கலந்துரையாடல் நிகழ்ச்சி- சிறந்த தகவல் வழங்கும் நிகழ்ச்சி- சிறந்த சிறுவர் நிகழ்ச்சி?- சிறந்த கல்வி நிகழ்ச்சி- சிறந்த செய்தி வழங்கல், சிறந்த இசை நிகழ்ச்சி, சிறந்த கிரபிக்ஸ்- நேரடி நிகழ்ச்சி வழங்கல்- பதிவு செய்யப்பட்ட நிகழ்ச்சி- சிறந்த தொலைகாட்சி நிகழ்ச்சி வழங்கல்.

இணையத்தளம்- சிறந்த செய்தி இணையத்தளம்- சிறந்த செய்தி வழங்கல்- சிறந்த விசேட ஆக்கம்- சிறந்த வடிவமைப்பு இவற்றுக்கான விண்ணப்பங்களை ஊடக அமைச்சின் அபிவிருத்திப் பிரிவில் பெற்றுக்கொள்ள முடியும். மேலும் www.media.gov.lk என்ற இணையத்தளத்திற்கு பிரவேசித்து தரவிறக்கம் செய்துகொள்ள முடியும்.

பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப்படிவங்களை இம்மாதம் 25ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் கிடைக்குமாறு மேலதிக செயலாளர் (அபிவிருத்தி மற்றும திட்டமிடல்)- ஊடக அமைச்சு, இல. 163- கிருல மாவத்தை- பொல்ஹேன்கொட- கொழும்பு 5 என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அல்லது நேரடியாக வழங்க முடியும்.

# தப்பிய கைதிகள் மீண்டும் கைது

(கொழும்பு)

காலி சிறைச்சாலையில் இருந்து நேற்று அதிகாலை கைதிகள் இருவர் தப்பிச் சென்றுள்ளனர்.

காலி நகர சுத்திகரிப்பு பணிகளுக்காக கொண்டு சென்ற மூன்று மாத சிறைத்தண்டனை பெற்ற கைதிகள் இருவரே இவ்வாறு தப்பிச் சென்றுள்ளதாக சிறைச்சாலைகள் ஆணையாளர் சந்ராரத்ன பல்லேகம எமது செய்திச் சேவைக்குத் தெரிவித்தார்.

இதேவேளை தப்பிச் சென்ற சிறைக்கைதிகள் இருவரும் தற்போது கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அலுவலகம் குறிப்பிட்டுள்ளது.

# எரிபொருள் விநியோகம் தற்காலிக இடைநிறுத்தம்

முத்துராஜவெல எரிபொருள் விநியோக குழாய் கட்டமைப்பில் சேதம் ஏற்பட்டுள்ளதால் அதன் ஊடான எரிபொருள் விநியோகம் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளது.

நாட்டிற்கு இறக்குமதி செய்யப்பட்ட சுத்திகரிக்கப்பட்ட எரிபொருளை கடல் மார்க்கமாக விநியோகிக்கும் குழாய்க் கட்டமைப்பிலேயே சேதம் ஏற்பட்டுள்ளதாக இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் தெரிவித்துள்ளது.

எரிபொருள் விநியோகம் நேற்று அதிகாலை 4 மணியளவில் இடைநிறுத்தப்பட்டுள்ளதாக பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் முகாமைத்துவப் பணிப்பாளர் சுசந்த டி சில்வா நியுஸ் பெஸ்ட்டிற்கு தெரிவித்தார்.

இதன் பிரகாரம் எரிபொருள் விநியோக குழாயில் சேதம் ஏற்பட்டுள்ள பகுதிக்கு சுழியோடிகள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டார். எரிபொருள் விநியோகம் இடைநிறுத்தப்பட்டுள்ள போதிலும் சந்தையில் எரிபொருளுக்கு தட்டுப்பாடு ஏற்படமாட்டாது என்றும் சுசந்த டி சில்வா சுட்டிக்காட்டியுள்ளார்.

# பொலிஸ் பொறுப்பதிகாரிகள் 9 பேருக்கு இடமாற்றம்

(முல்லைத்தீவு)

பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரிகள் 9 பேருக்கு பொலிஸ் மாஅதிபரினால் இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளது.

இதன் பிரகாரம் 8 பிரதம பொலிஸ் இன்ஸ்பெக்டர்களுக்கும், பொலிஸ் இன்ஸ்பெக்டர் ஒருவருக்கும் இடமாற்றங்கள் வழங்கப்பட்டுள்ளன.

வல்வெட்டித்துறை பொலிஸ் நிலைய பதில் பொறுப்பதிகாரி, அந்த நிலையத்தின் பொறுப்பதிகாரியாக நியமிக்கப்பட்டுள்ளார்.

முல்லைத்தீவு பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி மினுவாங்கொடை பொலிஸ் பொறுப்பதிகாரியாக இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

அளுத்கம பொலிஸ் நிலையத்தின் பதில் பொறுப்பதிகாரி, அதேநிலையத்தின் பொறுப்பதிகாரியாக நியமிக்கப்பட்டுள்ளார்.

இதுதவிர தெல்தெனிய, புசல்லாவை பொலிஸ் நிலைய பதில் பொறுப்பதிகாரிகள் அந்தந்த பொலிஸ் நிலையங்களுக்கே பொறுப்பதிகாரிகளாக நியமிக்கப்பட்டுள்ளனர்.



**வட மாகாண போக்குவரத்துப் பொலிஸாரின் நடவடிக்கைகளை மேம்படுத்தும் வகையில் வடமாகாண பொலிஸ் அத்தியட்சகர்கள் பிரிவு ரீதியாக புதிய 600 சி.சி. குதிரை வலு வேகம் கொண்ட மோட்டார் சைக்கிள்கள் வட மாகாண சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் பூஜித ஜெயசுந்தராவினால் வழங்கப்பட்டுள்ளன.**

# இந்திய மீனவர்களுக்கு விளக்கமறியல் நீடிப்பு

தலைமன்னார் கடற்பரப்பில் சட்டவிரோத மீன்பிடியில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் கைதுசெய்யப்பட்ட இந்திய மீனவர்கள் 17 பேரையும் எதிர்வரும் 11ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு மன்னார் நீதிவான் ஆனந்தி கனகரட்ணம் நேற்று உத்தரவிட்டார்.

இந்திய மீனவர்கள் 17 பேரும் நேற்று மீண்டும் மன்னார் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டனர். வழக்கை விசாரித்த நீதிவான் மேற்படி உத்தரவை வழங்கினார்.

கடந்த 30ஆம் திகதி மன்னார் நீதிமன்றில் இவர்களை முற்படுத்தியபோது நேற்று 4ஆம் திகதி வரை அவர்களை விளக்கமறியலில் வைக்க மன்னார் நீதிமன்று உத்தரவிட்டிருந்தமை தெரிந்ததே.


# தரம் - 07, 08, 10 மாணவர்களுக்கான பயிற்சிப் பரீட்சை வினாக்கள்

கணிதம்

ஆசிரியர்
ஆர்.கே.மேனன்

## தரம் – 08

1. ரூபா 270 க்கு வாங்கிய கைக்கடிகாரம் ஒன்றை ரூபா 310 க்கு விற்கும் போது கிடைக்கும் இலாபம் யாது?
2. சுருக்குக.
3. இவ்வுருவில் b க்குச் சமமான கோணம் எது? (உரு-01)





(உரு-01)

4. என்ற ஒழுங்கில் சாதரணமுறைக் கணிகருவியின் சாவிகளை இயக்கும் போது காட்சித்திரையில் பெறப்படும் எண் யாது?
(உரு-02) ON 5 + 3 × 2 =


(உரு-02)

5. இவ்வுருவில் நிழற்றிய பகுதியின் சுற்றளவைக் காண்க.? (உரு-03)





(உரு-03)

6. சுருக்குக. 3x + 4 + 6x
7. வெற்றுக்கூடுகளில் வரவேண்டிய எண்களை எழுதுக.?
$2^{\square} = 16$
$\log_2 16 \; \square$
8. உருவில் தரப்பட்ட தரவுகளுக்கமைய X,Y இன் பருமன் களைக் காண்க.? (உரு-04)





(உரு-04)

9. 20 cm பக்க நீளம் கொண்ட சதுர அடியையும் 4 cm உயரமும் கொண்ட கனவுருப்பாத்திரம் கொள்ளும் நீரின் அளவை ml இல் தருக?
10. $A^2 = B^2 + 2US$ என்னும் சூத்திரத்தில் rஐ எழுவாயாக மாற்றுக.?
11. $532.4 \times 10^2$ என்பதனை விஞ்ஞான முறைக்குறியீட்டில் தருக.?
12. 1:5000 என்ற அளவிடையில் வரையப்பட்ட அளவிடைப்படத்தில் A,B என்ற இரு கோவில்களுக்கிடையிலான தூரம் 10cm ஆயின் அவ்விரு கோவில்களுக்கிடையிலான உண்மைத் தூரத்தை m இல் தருக.?
13. 36 $km/h^{-1}$ என்னும் கதியில் செல்லும் ஒரு மோட்டார் கார் 3 1/2 மணித்தியாலத்தில் சென்ற தூரம் யாது?
14. காரணிகளின் அறிவைப்பயன்படுத்திச் சுருக்குக? $26 \times \frac{22}{7} \; 5 \times \frac{22}{7}$
15. காரணிப்படுத்துக. $26x^2 - 27$
16. உருவில் உள்ளது ஒழுங்கான ஐங்கோணி ஆயின் x, y, z ஆகிய கோணங்களின் பருமன்களைக் காண்க. (உரு -05)




(உரு -05)


17. எளிய வட்டிப்படி 5 வருடங்களின் மொத்த தொகையான ரூபா 6000 ஐப் பெற முதலிட வேண்டிய தொகை யாது?
18. (உரு-06) ABCD ஓர் சதுரம் ஆகும்.
   1. x ஐக் காண்க?




(உரு-06)

   2. முக்கோணம் ADE இன் பரப்பளவைக்காண்க?


19 (உரு-07) இல் தரப்பட்ட தரவுகளின் படி
   1. தரப்பட்ட நேர்கோட்டின் சமன்பாட்டை எழுதுக.




உரு-07

   2. y -2x e" 0 என்னும் சமனிலியை இதே வரைபில் நிழற்றிக்காட்டுக





20. (உரு-08) உள்ள தளவுருவின் சுற்றளவு யாது?





(உரு-08)

## தரம் – 07

1) கீழே தரப்பட்ட உருக்களை அவதானித்து வெற்றுக்கூடுகளை நிரப்புக?

| தளவுருவம் | உருவம் சமச்சீர் உடையதா?சமச்சீரற்றதா? | சமச்சீரச்சுக்களின் எண்ணிக்கை யாது? |
|---|---|---|
|  | | |
|  | | |
|  | | |
|  | | |
|  | | |

2) பின்வரும் எண்களை கூட்டத்தின் பெயரிற்கேற்ப வேறு படுத்துக?
1,2,3,4,5,6,7,8,9,10,11,12,13,14,15,16,17,18,19,20



3) (i) " விகடகவி" என்ற சொல்லிலுள்ள எழுத்துக்களின் தொடையை எழுதி அதனை A எனப்பெயரிடுக?

4) (ii) தொடை A ஐ வென் உருவில் காட்டுக?

5) கீழே தரப்பட்டுள்ள தொடைகளின் மூலகங்களை எழுதுக?

I. A = { 0 இற்கும் 10 இற்கும் இடையிலுள்ள முதன்மை எண்கள்}
C = { ஆங்கில அரிச்சுவடியிலுள்ள உயிர் எழுத்துக்கள்}

6) பின்வரும் எண்களில் இலக்கச்சுட்டியைக்காண்க அவற்றில்3ஆல் வகுபடும் எண்களைத் தெரிவு செய்க?
i 7137
ii 9136
iii. 4532
iv. 7842

7) பின்வரும் எண்களின் பொ.ம.சி ஐக் காண்க?
I. 12, 18
II. 3, 6, 9

8) பின்வரும் எண்களை முதன்மை காரணிகளின் பெருக்கமாகத்தருக?
I. 20
II. 36

# தரம் – 10

1) 7 cm ஆரையுடைய வட்டம் ஒன்றின் சுற்றளவு யாது?

2) செவ்வக வடிவான மைதானம் ஒன்றின் நீளம் 30m அகலம் 20m ஆகும். அம் மைதானத்தை சுற்றி 3 வரி முட்கம்பி வேலி அமைப்பதற்கு தேவையான முட்கம்பியின் நீளத்தைக் காண்க?

3) ஒரு செவ்வகத்தின் நீளம் 20cm அகலம் 15cm எனின் அதன் சுற்றளவு யாது?

4) ஒரு செவ்வகத்தின் நீளம் 40cm அகலம் 20cm எனின் அதன் சுற்றளவு யாது?

5) ஒரு பக்க நீளம் 12cm கொண்ட சதுரத்தின் சுற்றளவு யாது?

6) ஒரு பக்க நீளம் 15cm கொண்ட சதுரத்தின் சுற்றளவு யாது?

7) சதுரம் ஒன்றின் சுற்றளவு 40cm எனின் அதன் ஒரு பக்க நீளம் யாது?

8) நீளம் 20cm உடைய ஒரு செவ்வகத்தின் சுற்றளவு 60cm எனின் அதன் அகலம் யாது?

9) ஒரு செவ்வகத்தின் நீளம் 40cm அதன் சுற்றளவு 110cm எனின் அதன் அகலம் யாது?

10) அரைவட்ட வடிவான தடாகம் ஒன்றின் சுற்றளவு 18m எனின் அதன் ஆரையைக் காண்க?

11) அரைவட்டம் ஒன்றின் சுற்றளவு 72cm எனின் அதன் ஆரை எவ்வளவு?

12) அரைவட்டம் ஒன்றின் சுற்றளவு 36cm எனின் அதன் ஆரை எவ்வளவு?

13) ஒரு செவ்வகத்தின் நீளம் 8cm அகலம் 5cm எனின் அதன் சுற்றளவு யாது?

14) 7 cm ஆரையையுடைய் ஒரு அரைவட்ட வடிவ தகரத்தின் சுற்றளவு யாது?

15) 14 cm ஆரையுடைய ஒரு கால்வட்ட வடிவ மிதி கல்லின் சுற்றளவு யாது?

16) ஒரு அரைவட்ட வடிவ மிதி கல்லின் சுற்றளவு 144cm எனின் அக்கல்லின் ஆரை யாது?

17) பக்கங்கள் 30m நீளமுள்ள சமபக்க முக்கோணி வடிவ விளையாட்டு இடத்தின் சுற்றளவும், அகலத்தைப் போல் 1 ½ மடங்கு நீளமுள்ள செவ்வக வடிவ விளையாட்டு இடத்தின் சுற்றளவும் சமனாயின் செவ்வக வடிவ விளையாட்டு இடத்தின் நீளம் யாது?


18) 7cm ஆரையுடைய ஒரு வட்டத்தின் சுற்றளவு யாது? அச் சுற்றளவின் இரு மடங்கு சுற்றளவுள்ள ஒரு வட்டத்தின் ஆரையைக் காண்க?

19) 40m நீளமும் 9m அகலமும் உள்ள செவ்வக வடிவ பூந்தோட்டத்தின் ஒரு மூலை விட்டத்தின் நீளத்தைக் காண்க?

20) ஒரு மணிக்கூட்டின் மணி முள்ளும் நிமிடமுள்ளும் 4cm, 6cm நீளமுடையன. இரண்டு நாட்களில் அவற்றின் முனைகள் தனித்தனி சென்ற தூரத்தைக் காண்க?

21) வட்ட வடிவமான ஒரு ஓட்டப் பாதையின் உள் சுற்றளவும், வெளிச் சுற்றளவும் முறையே 352 m, 396 m ஆயின் அந்த ஓட்டப் பாதையின் அகலத்தைக் காண்க?


22)




(2x-1)cm, (x+1)cm, (3x-2)cm எனும் நீளங்களை உடைய பக்கங்களைக் கொண்ட முக்கோணி ஒன்று உருவில் காட்டப்பட்டுள்ளது. இம் முக்கோணியின் சுற்றளவு 64cm எனின்.

1. x இன் பெறுமானத்தைக் காண்பதற்கான சமன்பாட்டைத் தருக?

2. x இன் பெறுமானத்தைக் காண்க?




உருவில் உள்ள முக்கோணியின் சுற்றளவு 69 cm எனின் அதன் ஒவ்வொரு பக்கங்களினதும் நீளங் களைக் காண்க?

## கடந்த ஞாயிறு, செவ்வாய் மற்றும் வெள்ளி ஆகிய நாட்களில் வெளியான பயிற்சி வினாக்களின் விடைகள்

### 29 யூன் 2014 ஞாயிற்றுக்கிழமை

31) 14
32) 21
33) 18
34) 14
35) 7
36) 1 மணி 30 நிமிடம்
37) 3 நாட்கள்
38) 2
39) 20 கிலோகிறாம்
40) செவ்வாய்

பகுதி II

01) 1. காலைக்காட்சிகள்
2. நீர்த்துளிகளில் சூரிய ஒளிபட்டமையால்
3. ஆலமரம், அரசமரம், நாணல்
4. சலசல
5. சின்னச்சின்ன
6. ஒலி எழுப்புகின்றன
7. தரு, விருட்சம்
8. பட்சி, புள்
9. ஆரவாரம்

02)
1. மகிழ்ச்சியடைதல்
2. பொறாமை கொள்ளுதல்

03) 1. இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்
2. இலங்கை மத்திய வங்கி

04) 1. அடிமேல் அடி அடித்தால் அம்மியும் நகரும்
2. உயர உயரப் பறந்தாலும் ஊர்க்குருவி பருந்தாகுமா?

05) 1. மூசு 2. நாற்று
06) 1. அன்னாசி 2. மேசை விரிப்பு
07)
1. Class Room
2. Hospital

08) 1. வாழைப்பழம் 2.வெண்டிக்காய்
09) 1.பொ(த்)த 2. கனுலேல்ல
10) 1.திருகாணியைப் பூட்டவும் சழற்றவும்
2. மூடி திறத்தல்
3. ஆணியை இறுக்கவும் கழற்றவும்
4. தகரம் வெட்டுதல்

11)
1. தேனீ
2. பேன்
3. கும்புடுபூச்சி
4. வண்டு


12)
1. யானையின் உரு
2) ஒட்டகம்
3) 1972
4) மிசிசிபி
5) மல்லிகை
6) லண்டன்
7) மே 1
8) கண்டமாலை
9) கவரும்
10) காற்றுத் திசை காட்டி
11) செங்காலே கொடபண்டா
12) இடுக்கி
13) கிளிவரியா
14) இரும்பு வேலை செய்யுமிடம்
15) மு.நல்லதம்பி


### 01 யூலை 2014 செவ்வாய்க்கிழமை

1) 2
2) 3
3) 2
4) 3
5) 1
6) 1
7) 2
8) 1
9) 2
10) பொருத்தமான படம்
11) 3
12) 3
13) 1
14) 3
15) 3
16) 2
17) 1
18) 3
19) 3
20) 3
21) 2
22) 2
23) 1
24) பயிற்சியளிப்பதற்கு
25) விளையாட
26) மகிழ்ச்சி
27) 1
28) 2
29) 3
30) 1

### 04 யூலை 2014 வெள்ளிக்கிழமை

1) ii
2) iii
3) ii
4) i
5) iii
6) ii
7) iii
8) iii
9) ii
10) ii
11) i
12) ii
13) iii
14) iii
15) iii
16) i
17) iii
18) ii
19) ii
20) iii





சாவகச்சேரி வடக்கு மீசாலை இலுவம் செல்வவிநாயகர் ஆலய தேர்த் திருவிழா அண்மையில் இடம்பெற்றது. இதில் விநாயகப் பெருமான் எழுந்தருளி தேரில் ஆரோகணிப்பதைக் காணலாம். (11)

# போக்குவரத்து சேவைகளில் பிரச்சினை; துறைசார்ந்தோருடன் ஆராய்வு

(காரைநகர்)

வடபிராந்திய இ.போ.சபை காரைநகர் சாலைக்கும் காரை நகர் சிற்றூர்திகள் சங்கத்தினருக்கும் இடையிலான கலந்துரையாடலொன்று காரைநகர் பிரதேச செயலர் தலைமையில் நடைபெற்றுள்ளது.

நேற்றைய முன்தினம் காரைநகர் பிரதேச செயலகத்தில் நடைபெற்ற கலந்துரையாடலில் ஈ.பி.டி.பி. காரைநகர் இணைப்பாளரும் காரைநகர் பிரதேச எதிர்க்கட்சி தலைவருமான வீ.கண்ணன் கலந்து கொண்டார்.



போக்குவரத்தில் ஏற்படுகின்ற இடர்பாடுகள் மற்றும் பஸ் சாரதிகள் ஒருவரை ஒருவர் முந்துவதனால் வேகக் கட்டுப்பாட்டை இழப்பதனால் ஏற்படுகின்ற விபத்துக்கள் குறித்தும், ஒருசில சாரதிகளினால் வாய் மூலமான வார்த்தை துஷ்பிரயோகங்கள், மக்களை அச்சமூட்டும் வகையில் வாகனங்களை மிகவேகமாகச் செலுத்துதல் பற்றியும் வைத்தியசாலை செல்லும் நோயாளிகள் மற்றும் இருதயநோயினால் பாதிக்கப்பட்டவர்கள், வயோதிபர்கள், கர்ப்பிணிகள் மற்றும் குழந்தைகள் பெரும் அசௌகரியங்களைச் சந்திப்பதாகவும் பல முறைப்பாடுகள் எமக்குக் கிடைக்கப் பெற்றுள்ளன என்றும் அதனை நிவர்த்தி செய்வதன் பொருட்டே இக் கலந்துரையாடல் நடைபெறுகிறது என்றும் பிரதேச செயலர் தெரிவித்தார்.

இதன்போது காரைநகர் சாலையில் உள்வீதி பாவிக்க முடியாதநிலையில் உள்ளதாகவும், பொறியியலாளர் பகுதிக்கு தளபாடப்பற்றாக் குறை உள்ளமையால் பெரும் சிரமத்துக்குள்ளாகுவதாகவும் இதனை நிவர்த்தி செய்து தருமாறும் அத்துடன் தமக்கு நிரந்தரக் கட்டடம் ஒன்றினைப் பெற்றுத் தருமாறும் கோரிக்கை விடுத்திருந்தனர்.

இதன்போது கருத்துத் தெரிவித்த காரைநகர் பிரதேச சபை எதிர்க்கட்சித் தலைவர் உங்களது கோரிக்கைகள் தொடர்பில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் கனத்திற்குக் கொண்டு சென்று உரிய தீர்வைப் பெற்றுத் தரப்படுமெனத் தெரிவித்தார்.

# உப உணவுப் பயிர்ச் செய்கையில் ஆர்வம்காட்டும் விவசாயிகள்

(வடமராட்சி)

வடமராட்சிப் பகுதியிலுள்ள உள்ளூர் கிராமங்களில் உப உணவுப் பயிர்ச் செய்கையை மேற்கொள்ள விவசாயிகள் அதிக ஆர்வம் காட்டி வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

நாவலர்மடம், கரணவாய், மண்டான், சோளங்கன் உள்ளிட்ட கிராமங்களைச் சேர்ந்த விவசாயிகளே உப உணவுப் பயிர்ச் செய்கையில் ஆர்வம் காட்டி வருகின்றனர்.

குறிப்பாக மரவள்ளி, முருங்கை போன்ற பயிர்களை பயிரிட்டு செய்கை மேற்கொள்ளவதுடன் பல விவசாயிகள் தற்போதும் செய்கையை மேற்கொண்டு வருகின்றனர்.

தற்போது மரவள்ளிக் கிழங்கு சந்தைகளில் 1 கிலோ 60 ரூபாவுக்கு விற்பனை செய்யப்படுவதாகவும் இதனால் ஒரு நாளைக்கு 10 ஆயிரம் ரூபா வரை வருமானத்தை பெறுவதாக விவசாயிகள் தெரிவிக்கின்றனர். மேலும் முருங்கைக்காய்க்கு கேள்வி அதிகளவில் இருப்பதால் முருங்கை பயிர்ச்செய்கையிலும் விவசாயிகள் அதிக ஆர்வம் காட்டி வருவதாகவும் இதனூடாக தாம் அதிக வருமானத்தை ஈட்டிக்கொள்ளக் கூடியதாக இருக்கும் எனவும் விவசாயிகள் தரப்பில் தெரிவிக்கப்படுகிறது. (18)

# பொங்கல் உற்சவம்

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு வட்டுவாகல் அருள்மிகு ஸ்ரீ சப்தகன்னிமார் ஆலய வருடாந்த பொங்கல் உற்சவம் எதிர்வரும் 14 ஆம் திகதி திங்கட்கிழமை நடைபெறவுள்ளது.

இவ் உற்சவத்தில் நாளை மறுதினம் திங்கட்கிழமை இந்து சமுத்திரத்தில் தீர்த்தம் எடுக்கப்பட்டு ஏழு நாட்கள் விளக்கு எரிக்கப்படும். 8 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை அண்ணாவியார் க.இரத்தினகோபாலின் கைவண்ணத்தில் உருவான கட்டளையை வென்ற மைந்தன் என்னும் காத்தவராயன் சிந்து வெளி புராண நாடகம் மற்றும் இசை நிகழ்ச்சிகளும் இடம்பெறும்.

7 நாட்களும் நண்பகல் 12 மணிக்கும் மாலை 7 மணிக்கும் விசேட பூசை இடம்பெற்று 7 நாட்களும் 2 நேர அன்னதானமும் இடம்பெறவுள்ளது.

# இணுவில் பொதுநூலகத்திற்கு நூல்கள் அன்பளிப்பு



இணுவில் பொதுநூலகத்திற்கு இந்தியாவின் பேராசிரியர் அ.ச.ஞானசம்பந்தன் ஒருதொகுதி நூல்களை அன்பளிப்புச் செய்துள்ளார்.

இந்நிகழ்வு கடந்த ஞாயிற்றுக்கிழமை மாலை 4.00 மணிக்கு இணுவில் பொதுநூலகத்தில் நடை பெற்றது. மறவன் புலவு க.சச்சிதானந்தன் பேராசிரியர் அ.ச.ஞானசம்பந்தன் சார்பாக அன்பளிப்பு செய்ய பேராசிரியர். தேவராஜாபோசகரும் அண்ணா தொழில்திபரும் போசகருமான சு. பொ.நடராசா . பொது நூலகத் தலைவர் . சி. சிவசங்கர் ஆகியோர் நூல்களைப் பெற்றுக் கொண்டனர்.

அத்துடன் நூலக நிர்வாக சபை அங்கத்தவர்கள் இ.ஜெயாமூர்த்தி, பா. சத்தியமூர்த்திமற்றும நா.சின்னராசா ஆசிரியர் ஆகியோரும் இதில் கலந்து கொண்டனர்.

# தொழிற்பயிற்சிக்கு விண்ணப்பங்கோரல்

(யாழ்ப்பாணம்)

தேசிய பயிலுநர் கைத்தொழிற் பயிற்சி அதிகார சபையின் கீழ் கணணி வன்பொருள் தொழில்நுட்பவியலாளர் (Computer Hardware Technician) பயிற்சி நெறியில் தேசிய தகமைச் சான்றிதழைப் பெற யாழ்ப்பாணம் பயிற்சி நிலையத்திற்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

கல்வித் தகைமையாக க.பொ.த (சா.த) வரை கல்வி கற்றிருத்தல் வேண்டும். விண்ணப்பதாரி விண்ணப்ப முடிவுத் திகதியன்று 16-35 வய திற்கு உட்பட்டவராக இருத்தல் வேண்டும்,

தகுதி உடையவர்கள் முழுப்பெயர், முகவரி, பிறந்த திகதி, தேசிய அடையாள அட்டை இலக்கம். என். பவற்றைக் குறிப்பிட்டுச் சுயமாகத் தயாரிக்கப்பட்ட விண்ணப்பப்படிவத்தை மாவட்ட முகாமையாளர்; NAITA இல, 44 சோமசுந்தரம் வீதி சுண்டுக்குளி யாழ்ப்பாணம் என்னும் முகவரிக்கு எதிர்வரும் 18 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்குமாறும் அத்துடன் காகித உறையின் இடதுபக்க மேல் மூலையில் கணணி வன்பொருள் கற்கை நெறிக்கான விண்ணப்பம் என தவறாது குறிப்பிடப்படல் வேண்டும் எனவும் மாவட்ட முகாமையாளர் இ.கிருஷ்ணபாலன் அறிவித்துள்ளார்.

## கருத்தமர்வு

ஜப்பான் கிறோசிமாவிலிருந்து கற்றுக்கொண்ட மீள் நல்லிணக்க பாடங்கள் என்னும் பொருளில் கருத்தமர்வு நாளை மறுதினம் காலை 9.30 மணி முதல் 10.30 மணிவரை யாழ்.பல்கலைக்கழக கலைப்பீடத்தின் விரிவுரையாளர் அறையில் நடைபெறவுள்ளது.

இக் கருத்தமர்வில் ஜப்பானிலிருந்து வருகை தந்துள்ள டோக்யோ பல்கலைக்கழக பேராசிரியர் ஹெடிக்கி சினோடா இவ் விடயம் பற்றி உரையாற்றவுள்ளார். யாழ்.பல்கலைக்கழக அரசியல் விஞ்ஞானத்துறை பேராசிரியர் ஏ.வி.மணிவாசகர் அறிமுக உரை நிகழ்த்தவுள்ளார்.


## வாழ்க வளமுடன்

பெயர் : ச.சஞ்சீவ்

முகவரி : 43 யமுனாவீதி, நல்லூர், யாழ்ப்பாணம்

அகவை 9 இல்

பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றோம்



## வாழ்க வளமுடன்

சிறாரின் பெயர் :- ..................................

முகவரி :- ..................................

பிறந்த ஆண்டு :- ..................................

கூப்பன் ஐந்தும், புகைப்படமும்

..................................

பெற்றோர் கையொப்பம்

# ஈராக் பிரச்சினைக்கு தீர்வு
# துரித முயற்சியில் அமெரிக்கா



ஈராக்கில் ஏற்பட்டுள்ள அரசியல் நெருக்கடிக்குத் தீர்வு காணும் நோக்கில் அமெரிக்க உயர் அதிகாரிகள் பிராந்திய தலைவர்களின் ஆதரவை கோரியுள்ளனர்.

ஈராக்கில் ஐக்கிய அரசு அமைவதற்கான வாய்ப்புக்கள் அருகி வருவதால் பிராந்திய தலைவர்களின் தயவை நாடியுள்ளது அமெரிக்கா. சவுதி அரேபிய மன்னர் அப்துல்லாவை தொலைபேசியில் அழைத்துப் பேசினார் அமெரிக்க அதிபர் பராக் ஒபாமா. துணை அதிபர் ஜோ பிடன் ஈராக்கின் முந்தைய நாடாளுமன்றத்தின் தலைவர் ஒசாமா அல் நுஜைபியை தொடர்பு கொண்டு பேசினார்.

ஈராக்கை ஒற்றுமைப்படுத்தக் கூடிய புதிய அரசு அமைப்பதன் முக்கியத்துவத்தை பிடனும் நுஜைபியும் ஒப்புக்கொண்டதாக வெள்ளை மாளிகை தகவல் தெரிவித்துள்ளது.

அமெரிக்க வெளியுறவு அமைச்சர் ஜோன் கெர்ரி, குர்து தன்னாட்சிப் பிராந்தியத்தின் தலைவர் மசூத் பர்சானியை தொலைபேசியில் தொடர்பு கொண்டு பேசினார்.

இந்நிலையில் அரசுக்கு எதிரான சண்டையில் தொடர்புடையவர்கள் அனைவருக்கும் பொதுமன்னிப்பு வழங்கப்படும் என பிரதமர் மாலிகி அறிவித்துள்ளார். இது அரசுக்கு எதிராக போரிட்டு வரும் கூட்டணியை உடைக்க எடுத்துள்ள நடவடிக்கை என கருதப்படுகிறது.

# இந்திய–சீன இராணுவத்தளபதிகள் பாதுகாப்பு குறித்து பேச்சுவார்த்தை



எல்லைப் பகுதியில் அமைதியை பராமரித்தல், புதிய எல்லைப் பாதுகாப்புத் திட்டம் உட்பட பல்வேறு பாதுகாப்பு அம்சங்கள் குறித்து சீன இராணுவத்தளபதியுடன் இந்திய இராணுவ தலைமைத் தளபதி விக்ரம் சிங் ஆலோசனை நடாத்தினார்.

கடந்த 9 ஆண்டுகளில் சீனாவுக்கு சென்றுள்ள முதல் இந்திய இராணுவ தலைமைத் தளபதியான ஜெனரல் விக்ரம் சிங், அந்நாட்டு இராணுவத் தலைமைத் தளபதி .'.பாங் .'.பெங்குயியை பெய்ஜிங்கில் கடந்த புதன்கிழமை சந்தித்துப் பேசினார்.

இந்தச் சந்திப்பின்போது இருநாட்டு இராணுவத்தினரிடையேயான கூட்டுப் பயிற்சிகளை அதிகரித்தல், கடந்த ஆண்டு நிறைவேற்றப்பட்ட எல்லைப்பாதுகாப்பு கூட்டு ஒப்பந்தம் உட்பட உயர் நிலை அதிகாரிகளிடையிலான தகவல் பரிமாற்றங்கள் குறித்தும் விவாதிக்கப்பட்டதாக இந்தியத் தரப்பு அதிகாரிகள் தெரிவித்தனர்.

சீனாவுடனான உறவுக்கு இந்தியா அதிகபட்ச முன்னுரிமை அளித்துள்ளதோடு, இருநாட்டுக்கும் இடையிலான நட்புறவை வலுப்படுத்துவதற்கான அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொள்ளவும் உறுதி பூண்டுள்ளது என்று விக்ரம் சிங் பதில் அளித்துள்ளார்.

# கச்சதீவு குறித்து கருணாநிதி கண்டனம்

(சென்னை)

கச்சதீவு இலங்கை வரம்புக்குள் உள்ளது என்று மத்திய அரசு பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்திருப்பது தமிழகத்திற்கு பெரும் பின்னடைவை ஏற்படுத்தக் கூடியது என்றும் மத்திய அரசின் இந்த முடிவு கடும் கண்டனத்திற்குரியதாகும் என்று கருணாநிதி கூறியுள்ளார்.

அவர் இதுதொடர்பில் தெரிவிக்கையில்,

இந்தியாவின் எந்தவொரு பகுதியையும் வேறு ஒரு நாட்டிற்கு விட்டுக் கொடுப்பதென்றால், இந்திய அரசியல் அமைபபுச் சட்டம் 368ஆம் பிரிவின்படி நாடாளுமன்றத்தின் பரிசீலனைக்கு வைத்து சட்டம் இயற்றப்பட வேண்டும். கச்சதீவைப்



பொறுத்த வரை அப்படி எந்தவொரு சட்டமும் இதுவரை நிறைவேற்றப்படாததால், கச்சதீவை இலங்கைக்கு ஒப்பந்தத்தின் மூலம் விட்டுக் கொடுத்தது அரசியல் சட்ட ரீதியாகச் செல்லுபடி ஆகாது என்பதுதான் உண்மை. வரலாற்றை முற்றிலும் மறந்து விட்டு அல்லது மறைத்து விட்டு, மத்திய அரசு தற்போது தாக்கல் செய்துள்ள பிரமாணத்தில் உண்மைக்கு மாறான தகவல்களைத் தெரிவித்துள்ளது. கச்ச தீவு, இராமநாதபுரம் சேதுபதி அரசருக்குச் சொந்தமானது. இந்தத் தீவை வணிகர்களான முகமது காதர் மரக்காயருக்கும், முத்துசாமிப்பிள்ளைக்கும் அரசர் சேதுபதி 5 ஆண்டுகளுக்குக் குத்தகைக்கு வழங்கியிருந்தார்.

இந்த ஆவணங்களையும், அடிப்படை ஆதாரங்களையும் இந்திய அரசியல் சட்ட நெறிமுறைகளையும் ஆழமாகப் பரிசீலனை செய்து உயர்நீதிமன்றம் நல்ல தீர்ப்பு வழங்கிடும் என்று நாம் நம்பிக்கையுடன் எதிர்பார்த்துக் கொண்டிருந்த வேளையில், கச்சதீவு இலங்கை வரம்புக்குள் உள்ளது என்று மத்திய அரசு பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்திருப்பது, தமிழகத்திற்குப் பேரிடர் போன்றது இந்தப் பிரச்சினையில் பெரும் பின்னடைவை ஏற்படுத்திடக் கூடியது. மத்திய அரசின் இந்த முடிவு கடும் கண்டனத்திற்குரியதாகும். என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# சுனந்தாவின் இறப்பு குறித்து புதிய தகவலால் பரபரப்பு

சுனந்தா புஷ்கர் இறப்பதற்கு முன் நள்ளிரவில் தம்மை தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு கதறி அழுததாக டில்லியைச் சேர்ந்த மூத்த பெண் பத்திரிகையாளர் நளினி சிங் தெரிவித்துள்ளார்.

நளினி சிங் தொலைக்காட்சி பேட்டி ஒன்றில் கூறுகையில், ஜனவரி 17ஆம் திகதி நள்ளிரவு சுனந்தா தன்னுடைய கைப்பேசியிலிருந்து என்னை தொடர்பு கொண்டார். அப்போது, அவர் பதற்றமாக இருந்ததுடன் என்னிடம் கதறி அழுதார்.


நான் முதலில் அவருக்கும், பாகிஸ்தானைச் சேர்ந்த பெண் பத்திரிகையாளர் மெஹர் தராருக்கும் இடையே ட்விட்டர் மூலம் நடந்த கருத்து மோதல்தான் இதற்கு காரணம் என்று நினைத்தேன்.

ஆனால், சசிதரூர் தனது பிளாக்பெர்ரி கைப்பேசியில் இருந்த குறுந்தகவல்களை அழித்துவிட்டார் என்றும், நான் ஒரு பத்திரிகையாளர் என்பதால் அழிக்கப்பட்ட தகவல்களை மீட்டு படிக்க உதவ வேண்டும் என்று என்னிடம் கேட்டுக் கொண்டார்.

மேலும், தராருடன் சசிதரூர் துபாயில் நடத்திய சந்திப்பு குறித்தும் சுனந்தா மிகவும் கவலை கொண்டிருந்தார் என்று நளினி சிங் கூறியுள்ளார்.

உலகச் செய்திகள்

# பிரேஸிலில் பாலம் இடிந்து 2பேர் பலி 20பேர் காயம்



(பிரேசிலியா)

பிரேஸிலில் தற்போது மேம்பாலம் கட்டும் பணிகள் நடைபெற்று வருகிறது. அதில் ஏராளமானவர்கள் பணி புரிந்து வருகின்றனர். இந்த நிலையில் நேற்று முன்தினம் அந்த மேம்பாலம் திடீரென இடிந்தது.

அதில், பாலத்தின் கீழே சென்று கொண்டிருந்த பயணிகள் பஸ் சிக்கியது. இச்சம்பவத்தில் 2 பேர் உயிரிழந்தனர். 20 பேர் காயம் அடைந்தனர்.

பாலம் இடிந்து விழுந்ததில் அதன் அடியில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த வாகனங்கள் நசுங்கி சேதம் அடைந்தன. தகவல் அறிந்ததும் தீயணைப்பு படையினரும், பொலிஸாரும் சென்று மீட்புப் பணியில் ஈடுபட்டனர்.

பிரேஸில் நாட்டில் தற்போது உலகக்கோப்பை கால்பந்துப்போட்டி நடைபெற்று வருகிறது. அங்குள்ள பெலோ ஹொரி ஷோண்ட் நகரில் வருகிற 10ஆம் திகதி (வியாழக்கிழமை) அரை இறுதிப் போட்டி நடக்கவுள்ளது. அதையொட்டி அங்கு கட்டுமானப் பணிகள நடைபெற்று வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

# தலைசிறந்த அரசியல்வாதி இரண்டாமிடத்தில் மோடி



இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி உலகின் இரண்டாவது புகழ்பெற்ற அரசியல்வாதி என பேஸ்புக் இணையத்தளத்தின் தலைமை இயக்க அதிகாரியான ஷெரில் சாண்ட்பர்க் தொலைக்காட்சி பேட்டி ஒன்றில் தெரிவித்துள்ளார்.

டில்லியில் உள்ள முன்னணி தொலைக்காட்சி ஊடகம் ஒன்றிற்கு பேட்டியளித்த அவர் கூறுகையில்

உலகின் இரண்டாவது புகழ்பெற்ற அரசியல்வாதியான மோடிக்கு 18 மில்லியன் பேஸ்புக் நண்பர்கள் உள்ளனர். மோடியின் பேஸ்புக்கில் அவரது தாயார் அவரை ஆசிர்வதிக்கும் புகைப்படக்காட்சி வியப்பளிக்கிறது. அது எனக்கு தனிப்பட்ட முறையில் பிடித்தமானது. சமூக ஊடகங்களின் முக்கியத்துவத்தை மோடி உணர்ந்துள்ளது எனக்கு உற்சாகத்தை அளிக்கிறது. பேஸ்புக்கின் மிகப்பெரிய சந்தையாக இந்தியா உருவெடுக்க உள்ளது. இந்தியாவில் தான் அதிகம பேர் மொபைல் போனில் பேஸ்புக் பார்க்கிறார்கள்.

தேர்தலின் போது பலர் பேஸ்புக்கை பயன்படுத்தியது உற்சாகத்தை அதிகரித்திருக்கிறது. இந்தியா மிகவும் நம்பிக்கைக்குரிய சந்தையாகும். உற்சாகத்துடன் வேலை பார்க்கும் ஊழியர்கள் கிடைக்கும் மிகப்பெரிய நாடாக இந்தியா காட்சி தருகிறது என மிகுந்த மகிழ்ச்சியுடன் ஷெரில் கூறினார்.

# சென்னையில் கட்டட இடிபாடு பலி எண்ணிக்கை 61 ஆக உயர்வு

(சென்னை)

சென்னை மௌலிவாக்கத்தில் 11 மாடிக் கட்டடம் இடிந்து விழுந்ததில் உயிரிழந்தோரின் எண்ணிக்கை 61 ஆக உயர்ந்துள்ளது. 6ஆவது நாளானநேற்று முன்தினம் வியாழக்கிழமை மட்டும் 10 சடலங்கள் கைப்பற்றப்பட்டன.

கடந்த புதன்கிழமை வரை 27 பேர் உயிருடன் மீட்கப்பட்டனர். 50 சடலங்கள் மீட்கப்பட்டன. கடந்த புதன்கிழமை நள்ளிரவுக்குப் பின்னர் வியாழக்கிழமை காலை வரை 5 சடலங்களும், வியாழக்கிழமை காலை தொடங்கி மாலை வரை 6 சடலங்களும் மீட்கப்பட்டன.

இறந்தவர்களில் 41 பேர் ஆண்கள், 20 பெண்கள். இதுவரை அடையாளம் காணப்பட்டவர்களில் 25 பேர் ஆந்திராவையும், 10 பேர் தமிழகத்தையும், 4 பேர் ஒடிஸாவையும் சேர்ந்தவர்கள

மீட்புப் பணியின் 6-ஆவது நாளான புதன்கிழமையே மீட்கப்பட்டோரின் எண்ணிகை 74-ஐ தாண்டியுள்ளது. வியாழக்கிழமை வரை மீட்கப்பட்டோரின் மொத்த எண்ணிக்கை 87-ஐ தொட்டது. இறந்தோர் எண்ணிக்கை வியாழக்கிழமை மாலை வரை 61 ஆக அதிகரித்தது. உயிருடன் 27 பேர் மட்டுமே மீட்கப்பட்டுள்ளனர்.

மீட்புப் பணிகளில் கிட்டத்தட்ட 95 சதவீதம் நிறைவடைந்துள்ளது.பணியை விரைவாக நிறைவு செய்வதற்கு, எங்களது மீட்புப் படையினர், முழு அளவில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர் என்று தெரிவித்தனர்.

# நல்லதொரு சமூகத்தினை நாடகத்தின் மூலம் உருவாக்கலாம்

### - கலாநிதி சிதம்பரநாதன் தெரிவிப்பு -

(யாழ்ப்பாணம்)

நாடகத்தின் மூலம் நல்லதொரு சமூகத்தினை உருவாக்க முடியும். படிக்காத மாணவர்களையும் படிக்க வைக்க முடியும். நாடகத்தில் ஈடுபடுகின்றவர்கள் தங்களை புரிந்து கொள்பவர்களாக விளங்குகின்றனர் என யாழ். பல்கலைக்கழக நுண்கலைத்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி சிதம்பரநாதன் தெரிவித்துள்ளார்.

மானிப்பாய் இந்துக்கல்லூரி நாடக விழா நேற்று முன்தினம் மாலை 6.30 மணிக்கு கல்லூரியின் வி.எஸ்.துரைராஜா மண்டபத்தில் கல்லூரி முதல்வர் எஸ். சிவநேஸ்வரன் தலைமையில் இடம்பெற்ற போது பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றும் போது,

அரங்கு என்பது மனம்விட்டு பேசுகின்ற இடமாக விளங்குகின்றது. ஒவ்வொரு பிள்ளையிடமும் திறமை உண்டு. அத்திறமைகளை கண்டு வெளிக்கொணர வேண்டும் அதற்கு நாடகம் துணையாக இருக்கும். மாணவர்கள் தமது மன உணர்வுகளினை வெளிப்படுத்திக் கொள்வதோடு தம்மை புதுப்பித்துக் கொள்கின்றனர். புத்தாக்க சிந்தனையுடன் செயற்படுகின்றனர்.

சமூகம் வீழ்ந்து கிடக்கும் போது மக்களிடையே நம்பிக்கையினை கொண்டு வருவதற்கும் அவர்களிடையே புரிந்துணர்வினை கொண்டு வருவதற்கும் நாடகம் துணை செய்யும். நாடகத்தில் ஈடுபடும் போது பாதுகாப்பு உணர்வினை பெறுகின்றனர் என்றார். (63)

## பரிபாலன சபையின் செயலால் மன உளைச்சலுக்குள்ளான குருக்கள்

(வலிகாமம்)

பண்டத்தரிப்பு - பிரான்பற்றிலுள்ள ஆலயமொன்றில் 22 வருடங்களாக ஆலயக் குருக்களாக பணியாற்றிவந்த குருக்களிடமிருந்து ஆலய பரிபாலன சபையினர் வற்புறுத்தி ஆலயத் திறப்பை பறித்துள்ளதால் அக் குருக்கள் மன உளைச்சலுக்கு ஆளான சம்பவம் ஒன்று அண்மையில் இடம்பெற்றுள்ளது.

குறித்த குருக்கள் நீண்டகாலமாக ஆலயத்தில் பூசைகளை மேற்கொண்டு வந்த நிலையில் குருக்களுக்கும் ஆலய பரிபாலன சபையினருக்கும் இடையில் ஏற்பட்ட முரண்பாடுகளால் சபையினர் குருக்களை ஆலயத்திலிருந்து வெளியேற்ற தீர்மானித்து அவருக்கு கடிதம் வழங்கியதாகவும் இவ்விடயம் ஊர் மக்களுக்கு தெரியவந்த நிலையில் ஊர்மக்கள் ஒன்றுகூடி எதிர்ப்புத் தெரிவித்ததாகவும் கூறப்படுகிறது.

இந்நிலையில் பரிபாலன சபையினரின் செயற்பாட்டுக்கு எதிர்ப்புத் தெரிவித்து ஊர்மக்களும் குருக்களும் இளவாலை பொலிஸில் முறைப்பாட்டை மேற்கொண்டிருந்தனர். எனினும் பொலிஸார் விசாரிப்பதற்கு முன்னராகவே ஆலய பரிபாலன சபையினர் வற்புறுத்தி குருக்களிடம் கடந்த 11 ஆம் திகதி ஆலயத் திறப்பை பறித்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

நீண்டகாலமாக ஆலயத்தில் பூசையாற்றி கடவுளுக்கு தொண்டு செய்த குருக்களிடம் ஆலய பரிபாலன சபையினர் மேற்கொண்ட அடாவடித்தனம் இந்து சமயத்தினரையும் இந்துக் குருமாரையும் அவமதிக்கும் செயலாகும் என பொதுமக்கள் தரப்பில் தெரிவிக்கப்படுகிறது. (06)

## கொலையில்...

நீதிபதி, நாட்டிலிருந்து தப்பியோடியுள்ள இந்தக் குற்றவாளியை இன்டர்போல் பொலிஸாரின் உதவியுடன் கைதுசெய்வதற்கான நடவடிக்கையினை எடுக்குமாறும் உத்தரவிட்டார்.

இந்த வழக்கின் இரண்டாவது சந்தேகநபரான சிவபால சுந்தரம் கிருபாகரன், வரபிரகாஷ் கொலைசெய்யப்பட்ட இடத்தில் இருந்த போதும் இக்கொலையுடன் அவருக்கு நேரடியான தொடர்பு இல்லை என்று நீதிமன்றம் தீர்ப்பளித்தது.

அதன்பிரகாரம் இரண்டாவது பிரதிவாதிக்கு 1500 ரூபா தண்டம் விதித்த நீதிபதி, மரணமடைந்த செல்வவிநாயகர் வரபிரகாஷின் தந்தைக்கு ஒரு இலட்சம் ரூபாவை நட்டஈடாக வழங்குமாறும் பணித்தார்.

## விழிப்புணர்வு சிரமதானம்

(யாழ்ப்பாணம்)

இலங்கை வங்கியின் 75 வருட தினத்தையொட்டி டெங்கு விழிப்புணர்வும் சிரமதானமும் நாளை மறுதினம் காலை 9.00 மணிக்கு கனகரத்தினம் மகா வித்தியாலயத்தில் நடைபெறும்.

இந்நிகழ்வில் வங்கி ஊழியர்கள், சுகாதார அதிகாரிகள், மாணவர்கள், பெற்றோர்களும் கலந்துகொள்ளவுள்ளனர். (105)

## பல்கலை மாணவன் சடலமாக மீட்பு

(யாழ்ப்பாணம்)

யாழ் பல்கலைக்கழக கலைப் பீட மாணவன் ஒருவர் யாழ். நாச்சிமார் கோவில் பகுதியில் உள்ள வீடொன்றில் வாடகைக்கு தங்கியிருந்த நிலையில் தூக்கில் தொங்கிய நிலையில் சடலமாக மீட்கப்பட்டு யாழ். பொலிஸாரினால் யாழ். போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் இரவு நடைபெற்றதாக தெரிவிக்கப்படும் இந்தச் சம்பவத்தில் வவுனியாவைச் சேர்ந்த சிவலிங்கம் யசோதரன் (வயது - 24) என்ற யாழ். பல்கலைக்கழக் கலைப் பீட இறுதியாண்டு மாணவனின் சடலமே இவ்வாறு நேற்று ஒப்படைக்கப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் குறித்து யாழ். பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (பா)

## இலங்கை...

மொரிசன் எதிர்வரும் திங்கட்கிழமை இலங்கைக்கு வருவார் என எதிர்பார்ப்பதாக இலங்கை வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது.

இலங்கை வரும் அவர் அரசாங்கம் மற்றும் பாதுகாப்பு அதிகாரிகளுடன் பேச்சுவார்த்தைகளை நடத்தவுள்ளார்.

கடந்த வாரம் அவுஸ்ரேலிய கடற்பரப்பிற்குள் படகில் வந்த இலங்கை புகலிட கோரிக்கையாளர்கள் மீண்டும் இலங்கைக்கு அனுப்பி வைக்கப்பட்டதாக அவுஸ்ரேலிய ஊடகங்கள் செய்தி வெளியிட்டிருந்தன. ஆனால் மொரிசன் மற்றும் அவுஸ்ரேலிய அரசாங்கம் இது குறித்து கருத்து எதனையும் தெரிவிக்கவில்லை.

அதேவேளை புகலிடக் கோரிக்கையாளர்கள் சென்ற படகை தாம் காவலில் எடுக்கவில்லை என இலங்கை கடற்படையினர் தெரிவித்தனர்.


இதனிடையே படகில் சென்ற புகலிடக் கோரிக்கையாளர்கள் தொடர்பிலான செய்திகள் குறித்து ஐ.நா.வின் அகதிகளுக்கான நிறுவனம் தனது கவலைகளை வெளியிட்டிருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

## முகமாலையில்...

பளைப் பொலிஸாருக்கு தகவல் தெரிவித்தனர்.

அதற்கமைய கடந்த புதன் கிழமை ஒரு எலும்புக்கூடும் மறுநாள் வியாழக்கிழமை இரண்டு எலும்புக்கூடுகளும் மீட்கப்பட்டன.

அவற்றுடன் வெடிபொருட்களும் இதர பொருட்களும் மீட்கப்பட்டிருந்தன. அத்துடன், அப்பகுதியில் மேலும் பல எலும்புக்கூடுகள் இருக்கலாம் என பளைப் பொலிஸார் தெரிவித்தனர். (25)



வட்டுக்கோட்டை சிவன் ஆலய இரதோற்சவம் நேற்று முன்தினம் காலை இடம்பெற்ற போது... (48)

## இலங்கையரின்...

மீது நிகழ்த்தப்பட்ட தாக்குதல்கள் குறித்து ஐ.நா. பொதுச்செயலர் கவலையடைந்துள்ளார்.

மத சிறுபான்மையினர் மீதான தாக்குதல்கள் குறித்து விசாரணை நடத்தவும், எதிர்காலத்தில் அத்தகைய தாக்குதல்களைத் தடுப்பதற்கும் தேவையான நடவடிக்கைகளை எடுக்குமாறு, இலங்கை அரசாங்கத்தைக் கேட்டுக் கொண்டதுடன் ஐ.நா. பாதுகாப்புச் சபையில் நிறைவேற்றப்பட்ட கடந்த மார்ச் மாத தீர்மானத்தையும் அவர் நினைவுபடுத்தியுள்ளார்.

நிலைமைகள் மேலும் மோசமடையாமல் தடுப்பதற்குத் தேவையான நடவடிக்கைகளை எடுக்குமாறும், சம்பவங்கள் தொடர்பாக உடனடியாக விசாரணைகளை நடத்துமாறும், எல்லா இலங்கையர்களினதும் பாதுகாப்பை உறுதிப்படுத்துமாறும், ஐ.நா. பொதுச்செயலர் இலங்கை அரசாங்கத்தைக் கேட்டுக் கொண்டுள்ளார் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

## வாக்காளர்களை...

சிவில் அமைப்புகளுடன் சேர்ந்து நடத்திவந்திருப்பதாக அமெரிக்கத் தூதரகத்தின் பேச்சாளர் ஒருவர் பி.பி.சி.யிடம் கூறியுள்ளார்.

இந்த நிகழ்ச்சித் திட்டத்திற்கு இலங்கை அரசாங்கத்திடமிருந்து எதிர்ப்பு கிளம்பியிருக்கின்றமை தொடர்பிலும் அந்த நிகழ்ச்சித் திட்டம் இரத்தாகியிருக்கின்றமை தொடர்பிலும் கருத்து தெரிவிக்க அமெரிக்கத் தூதரகத்தின் பேச்சாளர் மறுத்துவிட்டார்.

## மரசெதுக்கல்...

தொடர்ந்து நினைவுக்கல்லினை திரைநீக்கம் செய்து வைத்தார்.

தொடர்ந்து அக்கிராமத்தில் பாரம்பரிய கைவினை கைப்பணி தொழிற்துறையாளர்களின் கைவினைப் பொருட்களை பார்வையிட்டதுடன் அவர்களுடன் கலந்துரையாடி அவர்களது தேவைகள் மற்றும் பிரச்சினைகள் தொடர்பில் கேட்டறிந்து கொண்டார்.

இதனையடுத்து அங்குள்ள சமூகசேவைகள் வளாகத்திற்கு வருகைதந்த ஜனாதிபதி பிரதான வாயிலில் வைத்து வரவேற்கப்பட்டதைத் தொடர்ந்து அங்கு காட்சிப்படுத்தப்பட்டிருந்த கைப்பணியாளர்களது கைவினைப் பொருட்களைப் பார்வையிட்டதுடன் அவர்களுடனும் கலந்துரையாடினார்.

தொடர்ந்து சிறப்பாக அமைக்கப்பட்ட அரங்கிற்கு ஜனாதிபதி அழைத்து வரப்பட்டார். தொடர்ந்து அரங்க நிகழ்வுகள் இடம்பெற்றன.

இதன்போது அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, பிரதியமைச்சர் வீரகுமார திசாநாயக்க, அமைச்சர் பியசேன கமகே, தென்மாகாண ஆளுநர் திருமதி குமாரிபாலசூரியா, நாடாளுமன்ற உறுப்பினர் றமேஸ் பத்திரன, அமைச்சின் செயலாளர் சிவஞானசோதி, தேசிய அருங்கலைகள் பேரவையின் தலைவர் புத்தி கீர்த்திசேன, தேசிய வடிவமைப்பு நிலையத் தலைவர் மார்சல் ஜனதா உள்ளிட்ட துறைசார்ந்த பலரும் உடனிருந்தனர்.

## புலிகளின்...

தேடுதலின் போது, பெரும் எண்ணிக்கையான பல்வேறு நாடுகளின் போலி கடவுச்சீட்டுகள், மலேஷிய குடிவரவு அதிகாரிகள் மற்றும் பல்வேறு தூதரகங்களின் போலி முத்திரைகளும் கைப்பற்றப்பட்டுள்ளதாகவும் அவர் கூறியுள்ளார்.

கைது செய்யப்பட்ட ஒருவர், வெடிபொருள் நிபுணர் என்றும் அவர் ஐ.நா.வின் அகதிகளுக்கான முகவர் அமைப்பின் அட்டையை வைத்திருப்பதாகவும் மலேஷிய காவல்துறை தலைவர் தெரிவித்துள்ளார்.

இரண்டாவது சந்தேகநபர் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவின் கொலை முயற்சியில் தொடர்புடையவர் என்று நம்பப்படுவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

மூன்றாவது நபர், சென்னை, பெங்களூர் நகரங்களில் உள்ள இலங்கை தூதரகங்களின் மீதான தாக்குதல்களுடன் தொடர்புடையவர் என்றும், மலேஷிய காவல்துறை மா அதிபர் தெரிவித்துள்ளார்.

நான்காவது சந்தேக நபர், விடுதலைப் புலிகளின் அடுத்த பிரிவினைவாத தாக்குதல்கள் குறித்து ஆய்வு செய்து தகவல்களைப் பரிமாறுபவர் என்றும் நம்பப்படுவதாகவும், அவர் கூறியுள்ளார்.

2009 ஆம் ஆண்டுக்குப் பின்னர், மலேஷியாவில் இதுவரை 14 விடுதலைப் புலிகள் கைது செய்யப்பட்டுள்ளனர் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

## யாழ். வந்த...

ஓமந்தை பகுதிக்குமிடையில் பறநட்டகல் சந்தியின் வளைவில் வேகக்கட்டுப்பாட்டை இழந்து வீதியின் அருகிலுள்ள மரத்தில் மோதி விபத்துக்குள்ளானது.

இவ்விபத்தில் ஸ்தலத்தில் ஒருவர் பலியானதுடன் படுகாயமடைந்த நிலையில் மூவர் வவுனியா வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டனர். வைத்தியசாலையில் படுகாயமடைந்தவர்களில் ஒரு பெண் அடங்குவதாகவும் அனைவரும் 50 தொடக்கம் 55 வயதுக்குட்பட்டவர்கள் எனவும் வைத்தியசாலை தகவல்கள் தெரிவிக்கின்றன.

மேலதிக விசாரணையை ஓமந்தை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (70)

# இலங்கையில் அண்மைய வன்முறை இந்தியாவையும் பாதிக்கலாம்

## கவலையடையும் பாதுகாப்பு நிபுணர்கள்

(புதுடில்லி)

இலங்கையில் அண்மையில் நிகழ்ந்த வன்முறைகள் மூலம் இந்தியாவின் தென் மாநிலங்களில் தீவிரவாத தாக்குதல்களை நடத்த வெளிநாட்டு சக்திகளுக்கு வாய்ப்பாக அமையுமென கவலை வெளியிட்டுள்ள இந்திய பாதுகாப்பு நிபுணர்கள், இந்த நிலைமையை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வர இலங்கை அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என வலியுறுத்தியுள்ளதாக, 'எக்கொனமிக் ரைம்ஸ்' நாளிதழ் தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக அதில் மேலும் தெரிவித்துள்ளதாவது,

அண்மைய வன்முறைகளால் பாதிக்கப்பட்ட முஸ்லிம்கள் இலங்கையில் ஓரம்கட்டப்படும் சூழ்நிலையானது, பதற்ற நிலையை உருவாக்க விரும்பும் சக்திகளுக்கு, ஊக்கமளிப்பதாக அமையும் என்றும், அது தீவிரவாத செயற்பாடுகளுக்கு ஆட்சேர்ப்பதற்கான களமாக உருவாகும் என்றும், புதுடில்லி கவலை கொண்டுள்ளது.

இந்த விவகாரம் இந்தியாவில் ஊடகங்களில் கவனத்தை அதிகளவில் பெறவில்லை.

இதுகுறித்து அவசர அடிப்படையில், கொழும்பின் கவனத்துக்கு கொண்டு செல்லப்பட வாய்ப்புகள் உள்ளதாக இந்திய அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

இலங்கையில் அன்மையில் நடந்த சமூக வன்முறைகளின் பின்னால் வெளிநாட்டு சக்திகள் இருப்பதாக, இலங்கை வெளிவிவகார அமைச்சர் ஜி.எல். பீரிஸ் குறிப்பிட்டது இந்தியாவின் அச்சத்தை இன்னும் அதிகரிக்கச் செய்துள்ளது.

ஜமாத்-உத்- தவா தலைவர், ஹபீஸ் சயீத்தின் மௌனத்தை அசாதாரணமானதாக கருதும், தீவிரவாத முறியடிப்பு நிபுணர்கள், ஜிகாத் ஆட்சேர்ப்புக்காக ஐ.எஸ்.ஐ. மற்றும் லஷ்கர் தீவிரவாதிகள் பெரியதொரு திட்டத்துடன் காத்திருக்கலாம் என்றும் எதிர்பார்க்கின்றனர்.

இலங்கையின் இந்த மத வன்முறைளைப் பயன்படுத்தி, லஷ்கர் இ தொய்பா தலைவர் சயீத், இந்தியாவை சுற்றிவளைப்பதற்கு மற்றொரு முயற்சியில் ஈடுபடுவதற்கான சாத்தியங்கள் குறித்து, இந்திய பாதுகாப்பு புலனாய்வு முகவர் அமைப்புகள் ஆய்வு செய்ய வேண்டும் என்றும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

பாதிக்கப்பட்ட மக்களை தீவிரவாதக் குழுக்களில் இணைத்துக் கொள்ள மூளைச்சலவை செய்ய முடியும் என்ற விடயத்தை, உடனடியாக கொழும்பிடம் புதுடில்லி எடுத்துக் கூற வேண்டும் என்று இந்திய அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

விடுதலைப் புலிகளின் காலத்தில் ஏற்பட்ட காயங்களில் இருந்து இன்னமும் விடுபடாத இலங்கை, தனது சமூக, இன அடையாளம், இஸ்லாமிய முற்போக்குவாதத்தினால், மேலும் பாதிக்கப்படக்கூடிய வாய்ப்பு உள்ளதால், பாகிஸ்தானுடன் கொண்டுள்ள தனது இருதரப்பு தொடர்புகளை மீளாய்வு செய்ய வேண்டும்.

இந்தியாவினது இந்தக் கரிசனைக்கு காரணம் இல்லாமல் இல்லை.

தீவிரவாத தாக்குதலுக்குத் திட்டமிட்ட இலங்கையைச் சேர்ந்த முகமட் சகீர் ஹுசேன் கைது செய்யப்பட்ட பின்னணியில் தான் இத்தகைய அச்சம் எழுந்துள்ளது என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

## புலி உறுப்பினர் விடுதலை

விடுதலைப் புலிகளுக்கு முகாம் அமைத்ததாக அனுராதபுரம் மேல் நீதிமன்றத்தில் கடும் விசாரணைக்கு உட்படுத்தப்பட்ட ஒருவர், அந்தக் குற்றச்சாட்டில் இருந்து விடுவிக்கப்பட்டுள்ளார்.

சந்தேகநபர் நேற்றைய தினம் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்ட வேளையே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

வவுனியா-ஈச்சங்குளம் பகுதியைச் சேர்ந்த ஜெகநாதன் முகுந்தன் என்பவரே இவ்வாறு விடுவிக்கப்பட்டுள்ளதாகத் தெரிய வந்துள்ளது. இவர் முன்னாள் விடுதலைப் புலி உறுப்பினராவார்.

2008 ஆம் ஆண்டு ஏப்ரல் மற்றும் டிசம்பர் மாதங்களில் பதவிய, வெலிஓய பிரதேசங்களில் சுமார் 100 பொது மக்களை பலவந்தமாக தீவிரவாதிகளுக்கு முகாம் அமைக்கப் பயன்படுத்தியதாக இவருக்கு எதிராக குற்றம்சாட்டப்பட்டிருந்தது.

## 17 இந்திய மீனவர்களின் விளக்கமறியல் நீடிப்பு

தலைமன்னார் கடற்பரப்பில் 03 படகுகளில் அத்துமீறி நுழைந்து மீன்பிடியில் ஈடுபட்டார்கள் என்ற குற்றச் சாட்டின் பேரில் கைது செய்யப்பட்டு நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்ட நிலையில், விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த 17 இந்திய மீனவர்களுக்கு மீண்டும் விளக்கமறியல் வழங்கப்பட்டுள்ளது.

மேற்படி மீனவர்களை மன்னார் நீதிமன்றத்தில் நேற்று மீண்டும் ஆஜர்படுத்தியபோது, இவர்களை எதிர்வரும் 11ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு மன்னார் நீதவான் ஆனந்தி கனகரட்ணம் உத்தரவிட்டார்.

கடந்த 28ஆம் திகதி மேற்படி மீனவர்களை கைது செய்த கடற்படையினர், மன்னார் மாவட்ட கடற்றொழில் திணைக்கள அதிகாரிகளிடம் ஒப்படைத்திருந்தனர்.

இந்த நிலையில், கடந்த 30 ஆம் திகதி மன்னார் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த இவர்களை நேற்றைய தினம் வரை விளக்கமறியலில் வைக்குமாறு மன்னார் நீதவான் ஆனந்தி கனகரட்ணம் உத்தரவிட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## பங்களாதேஷ் பிரஜைகள் கட்டுநாயக்காவில் கைது

மூன்று பங்களாதேஷ் பிரஜைகளை கட்டுநாயக்க விமான நிலைய அதிகாரிகள் கைது செய்துள்ளனர்.

போலியான விசாவை பயன்படுத்தியதாக குறித்த நபர்கள் மீது குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

சந்தேக நபர்கள் லிபியா நோக்கிப் பயணிக்க முயற்சித்த போது அதிகாரிகள் கைது செய்துள்ளனர்.

## உலகக்கிண்ண கால்பந்து

### காலிறுதியில் ஜேர்மன்

பிரேசிலில் நடைபெற்றுவரும் உலகக்கிண்ண கால்பந்தாட்டப் போட்டியில் நேற்றைய தினம் நடைபெற்ற காலிறுதிப் போட்டியில் ஜேர்மன் 1:0 என்ற கோல் அடிப்படையில் பிரான்சை வெற்றி கொண்டது.

## கிளி.இல் ஆர்ப்பாட்டம்




தமிழ் மக்களது நிலங்களை விட்டு இராணுவம் வெளியேற வேண்டும் என்று கோரி தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் ஏற்பாட்டில் தமிழ் அரசியல் கட்சிகள் இணைந்து கவனயீர்ப்புப் போராட்டம் ஒன்றை நேற்றுக் கிளிநொச்சி மாவட்டச் செயலகம் முன்பாக நடத்தியுள்ளனர்.

பரவிப்பாஞ்சான் மக்களுடைய மீள்குடியேற்றத்தை வலியுறுத்தி தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி இரண்டாம் கட்டமாக இதனை நேற்று நடத்தியுள்ளது.

நேற்றுக் காலை 11.00 மணி தொடக்கம் 12.00 மணி வரை இப்போராட்டம் முன்னெடுக்கப்பட்டிருந்தது.

## இந்தோனேஷியாவில் ஏ.ரி.எம். மோசடியில் ஈடுபட்ட 4 இலங்கைத் தமிழர் கைது

இந்தோனேஷியாவில் ஏ.ரி. எம். மோசடியில் ஈடபட்ட இலங்கைத் தமிழர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சுமார் 32 இலட்சம் அமெரிக்க டொலர்கள் பெறுமதியான பணம் இவ்வாறு மோசடி செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப் படுகிறது.

சந்தேக நபர்கள் கனேடியர்களுடன் இணைந்து கடன் அட்டை மோசடியில் ஈடுபட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

மோசடி செய்வதற்காக பயன்படுத்தப்பட்ட கணனிகள் உள்ளிட்ட பல்வேறு பொருட்களும் 50 மில்லியன் இந்தோனேஷிய ருபியாக்களும் அவர்களிடமிருந்து மீட்கப்பட்டுள்ளன.

மிகவும் நுட்பமான முறையில் உளவுக் கமராக்களை பொருத்தி தகவல்களை திரட்டியுள்ளனர். சிவா, வினோத், ராஜன் மற்றும் வாலி ஆகிய நான்கு இலங்கையர்களும் அவர்களுக்கு ஒத்துழைப்பு வழங்கியவர்களுமே கைது செய்யப்பட்டுள்ளவர்களாவர்.

இவர்களிடமிருந்து 260 போலி ஏ.ரி.எம் அட்டைகளும் மீட்கப்பட்டுள்ளன.

## பணியாளர்கள் தேவை

கீழ்வரும் பணியாளர் வெற்றிடங்களுக்கு வேலையாட்கள் தேவைப்படுகின்றனர்.

- இயந்திர இயக்குநர்கள்
- இயந்திர உதவியாளர்கள்
- இயந்திர வேலை பழக விரும்புபவர்கள்

KORD, SORD ஆகிய அச்சு இயந்திரங்கள் இயக்கக் கூடிய முன் அனுபவம் வாய்ந்த ஆண் பணியாளர்கள் உடனடி யாகத் தேவைப்படுகின்றனர்.

**தகைமைகள்**

- தேக ஆரோக்கியம் உடையவராகவும்
- இரவு பகல் பணியாற்றக்கூடியவர்களாகவும்
- பத்திரிகைத் துறையில் அனுபவம் வாய்ந்தவர்களாகவும் இருத்தல் விரும்பத்தக்கது.

மேற்படி தகைமைகள் உடையவர்கள் தமது சுயவிபரக் கோவையுடன், அலுவலக நேரத்தில் எமது காரியாலயத்திற்குச் சமுகம் தரவும்

சம்பளம் நேரில் பேசித்தீர்மானிக்கலாம்.

தினமுரசு நாளிதழ்
இல.373, பிரதான வீதி,
யாழ்ப்பாணம்.

## அளுத்கம சம்பவத்திற்கு விசாரணைக்குழு அவசியம்

### மங்கள எம்.பி. தெரிவிப்பு

அளுத்கம பேருவளை கலவரத்தில் மக்களுக்கு மன தளவில் ஏற்பட்ட காயத்தை அகற்ற வேண்டுமாயின் உடனடியாக விசாரணைக் குழுவொன்று நியமிக்கப்பட வேண்டும் என ஐ.தே.க நாடாளுமன்ற உறுப்பினர் மங்கள சமரவீர ஆலோசனை விடுத்தார்.

அத்தோடு பாதிக்கப்பட்ட மக்களுக்கு அரசு நஷ்டஈடு வழங்க வேண்டும் எனவும் அவர் கோரினார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் சமகி அமைப்பின் ஊடகவியலாளர் மாநாடு நேற்று கோட்டேயிலுள்ள தேசிய ஊழியர் சங்கத்தின் கேட்போர் கூடத்தில் இடம்பெற்ற போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறுகையில்,

தற்போது இந்த அரசாங்கம் சர்வாதிகார போக்கில் பயணித்து கொண்டிருக்கின்றது. நாட்டில் கொலை கொள்ளைகள் அதிகரித்த வண்ணம் காணப்படுகிறது.

அதேபோன்று இவ்வரசாங்கம் இனவாதத்தை தூண்டி நாட்டில் மீளவும் யுத்தமொன்றை ஏற்படுத்த முனைகிறது. இதன் காரணமாக நாட்டிற்கே பெரும் ஆபத்து.

இத்தகைய நிலையில் பொதுபலசேனா அமைப்பு அனைத்து அதிகாரங்களையும் தன்னகத்தே கொண்டு செயற்படுகிறது. இதன் பின்னணியில் முக்கிய புள்ளியொருவர் காணப்படுகிறார். இல்லாவிடின் இவ்வமைப்பிற்கு இவ்வாறு செயற்பட முடியாது.

இவ்வமைப்பிற்கு பாதுகாப்பு அமைச்சிலிருந்தே நிதி ஒதுக்கீடு செய்யப்படுகிறது. எனவே, இதற்கு மூல காரணம் பாதுகாப்பு செயலாளர் கோத்தாபய ராஜபக்ஷவாகும்.

இந்நிலையில் அளுத்கம, பேருவளை ஆகிய பகுதிகளில் இடம்பெற்ற வன்முறையினால் ஏற்பட்ட பாதிப்புக்கள் இன்னும் குறைவடையவில்லை. இதன் காரணமாக மக்கள் மனங்களில் ஏற்பட்ட காயங்களை எவ்வகையிலும் ஆற்ற முடியாது. ஆகவே, இவ்விடயத்தில் பொறுப்புடன் செயற்பட வேண்டும்.

ஆகையால், அளுத்கம, பேருவளையில் இடம்பெற்ற வன்முறைகளின் உண்மையை கண்டறிய உடனடியாக விசாரணைக் குழுவொன்றை நியமிக்க வேண்டும்.

இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2014 யூலை 05 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.